REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜுன் 8 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 91 இல. 134 | Thursday 08, June, 2023 | 16 பக்கங்கள் | 50/-




## பொலிஸாரின் கடமைகளில் எமக்கு தலையிட முடியாது

### கஜேந்திரகுமார் MP கைது குறித்து சபையில் சபாநாயகர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொலிஸாரின் கடமைகளில் தலையிட முடியாது என்பதால், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பாராளுமன்ற அமர்வுகளுக்கு அழைத்து வரப்படுவார் என, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் தெரிவித்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. ஆகியோர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கையிலேயே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், சம்பவம் இடம்பெற்ற முதல் சந்தர்ப்பத்திலேயே அது தொடர்பில் பொலிஸ் 06

## யாழ். பலாலி - சென்னை விமான சேவை Alliance Air 100 ஆவது சேவை பூர்த்தி

### பலாலி விமான தளத்தில் கேக் வெட்டி கொண்டாட்டம்



**யாழ். விசேட நிருபர்**

இலங்கை, இந்தியாவுக்கிடையே சேவையிலீடுபடும் அலையன்ஸ் எயார் விமானம் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே தனது நூறாவது 06

## வெளிநாட்டிலிருந்து திரும்பிய இருவருக்கு குரங்கம்மை

### அடையாளம் காணப்பட்ட இரு பெண்களும் IDH இல்

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய இரண்டு பெண்கள் குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் நேற்று உறுதிப்படுத்தியுள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்த்தனவின் கருத்துப்படி, குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்ட இருவரும் தற்போது 06



## அரச சேவையை டிஜிட்டல் மயமாக்க விரைவில் விசேட முகவர் நிறுவனம்

### ஆளும், எதிரணி எம்பிக்கள் மத்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு



நாட்டிலுள்ள சகல அரச நிறுவனங்களின் தரவுகளை கண்காணிப்பதற்கு "கணினி செயலிகளை" உருவாக்குவதற்கு டிஜிட்டல் ஊக்குவிப்பு முகவர் நிறுவனமொன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். இதுவரை காலமும் அரச நிறுவனங்களுக்காக "கணினி 06



**சகல அரசியல்வாதிகளும் இனி வருமானத்தை பதிய வேண்டும்**

2024 ஜனவரி மாதம் முதல் கட்டாயம் 03

## மேலும் 300 பொருட்களுக்கான இறக்குமதி தடை ஓரிரு தினங்களில் நீக்கம்

### வெளிநாட்டுக் கையிருப்பு 03 பில்லியன் டொலராக அதிகரிப்பு



### ஏப்ரல் வரையான காலத்தில் அந்நிய செலாவணி 45.4 மில்லியன் டொலராக அதிகரிப்பு - சபையில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இறக்குமதிப் பொருட்களுக்கான தடைகள் மேலும் நீக்கப்படவுள்ளன. சுமார் முன்னூறு பொருட்களுக்கான தடைகளே நீக்கப்படவுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதனடிப்படையில், இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கான பட்டியல் 1216 ஆக குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில்துறையில்நிலவும்பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்திலே, அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் பேசிய இராஜாங்க அமைச்சர் தெரிவித்ததாவது;

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையை கவனத்திற் கொண்டு, அரசாங்கம் சில தீர்மானங்களை மேற்கொண்டது.

இத்தீர்மானத்தால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

நாட்டின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளவும் வெளிநாட்டு கையிருப்பை பாதுகாப்பதற்குமே, சில தீர்மானங்களை அரசாங்கம் மேற்கொண்டது. அந்த வகையில் புதிய வரிகளை அறிமுகப்படுத்தியமை, வட்டி வீதத்தை அதிகரித்தமை, இறக்குமதி கட்டுப்பாட்டை மேற்கொண்டமை உள்ளிட்ட தீர்மானங்களை குறிப்பிட முடியும். அரசாங்கம், அப்போது மேற்கொண்ட தீர்மானங்களின் பிரதிபலனை இப்போது நாம் பெற முடிகின்றது.

வெளிநாட்டு அந்நியச் செலாவணி அதிகரித்துள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில், 06

#### சுற்றுலா, மீன்வளம், விவசாயம், கனிம மணல் துறைகளில்

## வெளிநாட்டு நிபுணத்துவத்தை பெற்றுத் தருமாறு கோரிக்கை


### அமைச்சர் அலி சப்ரி – கிழக்கு ஆளுநர் சந்திப்பு



சுற்றுலா, கடற்றொழில், கனிம மணல் மற்றும் விவசாயம் போன்ற பல்வேறு துறைகளில் வெற்றிகரமாக செயற்படும் நாடுகளின் நிபுணத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார். கொழும்பில் (06) 06

## மணல் அகழ்தல் நடவடிக்கைகளில் ஊழல், மோசடிகளுக்கு இடமில்லை

### சுரங்கப் பணியகத்தில் மாபியாவுக்கு முற்றுப்புள்ளி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுரங்கப் பணியகத்தின் ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், 06

## பாராளுமன்ற நிதிக் குழு தலைவராக ஹர்ஷ தெரிவு

### ஜனாதிபதியின் யோசனைக்கு ஏனையோர் ஆதரவு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்றத்தின் அரச நிதி தொடர்பான குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதிக்குழுவின் தலைவர் பதவிக்கான நியமனம் நீண்ட 06

#### கஜேந்திரகுமார் MP கைது விவகாரம்

## பாராளுமன்ற சிறப்புரிமையை பாதுகாக்க சஜித் வலியுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்)**



பாராளுமன்ற அமர்வில் நேற்று பங்கேற்கவிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கைது செய்து, அவரின் சிறப்புரிமையை பொலிஸார் மீறியுள்ளனர். பாராளுமன்ற அமர்வில் பங்கேற்கவுள்ள எம்.பி. ஒருவரை பொலிஸார் கைது செய்ய முடியாதென எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகருக்கு நேற்று சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை (07) ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே, இவ்வாறு அவர் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாராளுமன்ற சிறப்புரிமைகளின் கீழ் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.க்கு பாராளுமன்ற அமர்வில் 06




**கஜேந்திரகுமார் MP கைதான விவகாரம்**

**யாழ். மருதங்கேணி பொலிஸாருக்கு மனித உரிமை ஆணைக்குழு அழைப்பு** 03



**வில்பத்து காடழிப்பு விவகாரம்**

**றிசாத் பதியுதீன் எம்.பிக்கு நீதிமன்றம் அழைப்பாணை** 03



**பிரிட்டனில் இலங்கை பெண்ணுக்கு நீதிபதி பதவி**

மிகவும் இளம் வயதில் கிடைத்த கௌரவம் 03

#### பொலிஸாரின் கடமைக்கு இடையூறு

## கஜேந்திரகுமார் எம்.பி கொழும்பில் கைதாகி பிணையில் விடுவிப்பு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றுக் காலை கொழும்பில் கைதாகி, கிளிநொச்சியில் பிணையில் விடுவிடுவிக்கப்பட்டார். 06



#### பௌத்த மத அவமதிப்பு குற்றச்சாட்டு

## நடாஷா, புருனோவுக்கு விளக்கமறியல் நீடிப்பு



நடாஷா எதிரிசூரிய மற்றும் SLVlog உரிமையாளரான புருனோ திவாகர ஆகியோரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பௌத்த மதத்தை அவமரியாதை செய்யும் வகையில் கருத்துக்களை வெளியிட்ட 06

#### காலிமுகத்திடல் தாக்குதல் சம்பவம்

## ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு ஜுலை 19 இல்



காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, மிலன் ஜயதிலக்க உள்ளிட்டோருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஜுலை (19) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. கொழும்பு, கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் நேற்று (07) இந்த விவகாரம் 06

## நாமல் MPக்கு எதிரான பயணத்தடை நீக்கம்

### முழுமையாக நீக்க நீதிமன்றம் உத்தரவு



காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் தொடரப்பட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினருக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத்தடையை நீக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தில் சந்தேக 06

# நகர்வலம்



## இலங்கை இஸ்ரேலுக்கு இடையிலான பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடல்

### பாதுகாப்பு செயலாளருடன் சந்திப்பு



நாட்டின் பாதுகாப்புப் படையினர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்களை மேலும் மேம்படுத்துவது குறித்து இஸ்ரேல் பிரதிநிதிகளுடன் பாதுகாப்புச் செயலாளர் கலந்தாலோசித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் இலங்கைக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரித்தல் மற்றும் இராணுவத்தினருக்கு பயிற்சி வாய்ப்புக்களை மேலும் மேம்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இரு நாடுகளுக்குமிடையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

புதுடெல்லியில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் அவிஹாய் சஃப்ரானி கடந்த திங்கட்கிழமை பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்னவை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போதே இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி வாய்ப்புகளை மேலும் மேம்படுத்துவது மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரி பிரிகேடியர் தம்மிக்க வெலகெதர உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

### நாட்டுக்குள் கடல் மார்க்கமாக

## போதைப் பொருளுடன் துப்பாக்கிகளும் கடத்தல்

**03 வருடங்களில் 1,163 துப்பாக்கிகள் கைப்பற்றல்; சபையில் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கடல் மார்க்கமான போதைப் பொருள் கடத்தலுடன் துப்பாக்கிகளும் நாட்டுக்குள் கொண்டுவரப்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை அண்மையில் அவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப்பொருளுடன் 10 துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த மூன்று வருடங்களில் விசேட செயலணியினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் சட்டபூர்வமற்ற 1,163 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அந்த துப்பாக்கிகளில் T506,T501,பிஸ்டல் மற்றும் ரிவோல்வர்களும் உள்ளடங்குவதாக அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் சஞ்சீவ எதிரிமான்ன எம்.பி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

நாட்டில் இடம்பெற்ற முப்பது வருடயுத்தம் நிறைவடைந்த பின்னர் தென்பகுதிக்கும் துப்பாக்கிகள் வந்துள்ளன. அத்துடன் கடல் மார்க்கமாக போதைப்பொருள் கடத்தும்போது அதன் ஊடாக துப்பாக்கிகளும் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன. அது தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்தியதுடன் அவ்வாறான நபர்களை கைது செய்வதுடன் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அனுமதிப் பத்திரத்துடன் வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகள் சம்பந்தப்பட்டவர்களின் பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்னரும் அவர்கள் வைத்துக்கொண்டுள்ளார்களா என்பது தொடர்பான கேள்விக்கு பாதுகாப்பு அமைச்சே பதில் வழங்க வேண்டும். எனினும் அதற்கான அனுமதி பத்திரங்களையும் பாதுகாப்பு அமைச்சே வழங்குகின்றது. எவ்வாறெனினும் அனுமதிப் பத்திரத்துடன் வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகள் குற்றச்செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக இதுவரை பதிவுகள் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் வீடுகளில் இடம் பெறும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில்

நாடளாவிய ரீதியில் உள்ள 14,022 கிராம சேவகர் பிரிவுகளிலும் பொதுமக்கள் பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதில் 5,399 கிராம சேவை அதிகாரி பிரிவுகளை அலகுகளாக பிரித்து அங்கு 5,625 பொலிஸ் உத்தியோகத்தர்களை மக்கள் பாதுகாப்பு குழுக்களில் இணைப்பாளர்களாக நிரந்தமாக சேவையாற்றுவதற்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புக்கு மேலதிகமாக வேறு நபர்களுக்கு பாதுகாப்புக்காக 5,400 பொலிஸ் உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டுள்ளனர். அது தொடர்பில் விபரங்களை பெற்றுக் கொள்ள நான் அறிக்கையொன்றைக் கோரியுள்ளேன். அதனையடுத்து மீளாய்வு செய்யப்பட்டு தேவையற்ற பாதுகாப்பு நீக்கப்படும். முடிந்தளவு குறைக்கவும் தேவையற்றதை விலக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## நொச்சியாகம பிரதேச செயலகப்பிரிவில் முக்கிய வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

### மாவட்ட செயலாளர் பாராட்டு

**திறப்பனை தினகரன் நிருபர்**

நொச்சியாகம பிரதேச செயலகப் பிரிவின் கிராமிய பிரதேசங்களில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படும் சில முக்கிய வேலைத் திட்டங்களை நொச்சியாகம பிரதேச செயலகம் நிறைவேற்றியுள்ளது. சர்வோதய சிரமதான சங்கத்தின் ஊடாக (OFDA) நிதியுதவியின் கீழ் இத் திட்டங்களுக்கு ஆதரவளிக்க முடிந்துள்ளதோடு அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தரவின் பாராட்டுதலுக்கு இத்திட்டம் உட்படுத்தப்பட்டுள்ளது.

நொச்சியாகம ரன்கெத்தேகம பகுதியில் உள்ள பொத்தானேகம ஏரியில் ஏற்பட்ட அணை உடைப்பு காரணமாக, 2021ஆம் ஆண்டு முதல் 30 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலையும் அம்பகஹா பகுதி ஏரியும் உடைந்து இரண்டு ஆண்டுகளாக அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியிருந்த நிலையொன்றும் காணப்பட்டது.

இதன் கீழ் உடைந்த பொத்தானேகம ஏரியை மீளமைக்கவும், நொச்சியாகம திம்பிரிவெவ கிராம சேவையாளர் பிரிவின் திம்பிரிவெவ வடிகால் கால்வாயும் இதன் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளது.

புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படாததன் காரணத்தால் வில்பத்து வீதியில் வெள்ளம் பெருக்கெடுத்து போக்குவரத்துக்கும் இடையூறும் ஏற்பட்டிருந்தது.

இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்கும் நோக்கில் சர்வோதய சிரமதான அமைப்பின் உதவியுடன் இவ்வருட மார்ச் இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி மூன்று திட்டங்களும் ஏப்ரல் இறுதியில் முடிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

### பாணந்துறை, தொட்டவத்தை

## ரௌழதுல் அத்கியாவில் 154ஆவது மனாகிப் மஜ்லிஸ் இன்று ஆரம்பம்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

பாணந்துறை, தொட்டவத்தை ரௌழதுல் அத்கியா பெரிய பள்ளிவாசலில் 154 ஆவது வருடாந்த ஷாதுலியா மனாகிப் மஜ்லிஸ் இன்று (08) வியாழக்கிழமை இரவு கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.ரீ.எம். இல்யாஸ் (பஹ்ஜி) மற்றும் உலமாக்கள் தலைமையில் ஆரம்பமாகவுள்ளன. இதில் முகத்தமீன்கள், பள்ளிவாசல் நிர்வாக உறுப்பினர்கள் உள்ளிட்ட ஜமாஅத்தார்களும் கலந்துகொள்ளவுள்ளதாக நிர்வாக சபைத்தலைவர் தெரிவித்தார்.

தொட்டவத்தை பள்ளிவாசல்கள் பரிபாலன சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த வருடாந்த மஜ்லிஸ் இடம்பெறுவதோடு தொடர்ந்து ஒன்பது நாட்கள் மனாகிப் பாராயண மஜ்லிஸ் நிகழ்வுடன் உலமாக்களினால் விசேட சன்மார்க்க உபன்னியாசங்களும் நிகழ்த்தப்படவுள்ளன.



தொட்டவத்தை பள்ளிவாசல்கள் தர்மகர்த்தா ரிஸ்வான் அமீன் ஹாஜியார் மற்றும் பள்ளிவாசல்கள் பரிபாலன சங்கத் தலைவர் இம்தியாஸ் முஸம்மில் ஆகியோரின் வழிகாட்டலில் பரிபாலன சங்கத்தினால் இதற்கான சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செயலாளர் சில்மி சஹீல் தெரிவித்தார்.

இந்த பத்து தினங்கள் கொண்ட தொடர் மனாகிப் மஜ்லிஸில் கலீபதுல் குலபா எம்.இஸட். முஹம்மது ஸுஹ்ர் ஆலிம், கலீபதுஷ் ஷாதுலிகளான எம்.எஸ்.எம்.அஹமத் ஸூபி, எம். இஸ்திஹார் பாரி, ரயீஸுல் முகத்தமீன்களான எம். இக்ராம் பாஸி, எம்.எஸ்.பாரூக், எம்,இஸட். ரிஸ்கான் முஹம்மத் உள்ளிட்ட உலமாக்களினால் தரீக்காவின் மகத்துவம், ஆத்மீக ஞானிகளின் வழிகாட்டல் தொடர்பில் விசேட உரைகள் நிகழ்த்தப்படவுள்ளதாக செயலாளர் சில்மி மேலும் தெரிவித்தார்.

## BISD கல்வி நிலையத்தில் முக்கிய நிகழ்வு





தெஹிவளை காலி வீதியில் அமைந்துள்ளது BISD கல்வி நிலையத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் நிலையத்தின் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைப்பதையும் நிறுவனத்தின் பணிப்பாளர்களான திருமதி. ரஸ்மினா ரமீசுதீன், திருமதிகளான நஸ்ரா ருஷானுதீன், காமிலா நியாஸ் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: ருசைக் பாருக்)

## கொழும்பில் நடைபெற்ற தேசிய சர்வமத மாநாடு; சர்வமத தலைவர்கள் பங்கேற்பு




**கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்**

இலங்கை தேசிய சமாதானப் பேரவை ஏற்பாட்டில் தேசிய சர்வமதங்களுக்கு இடையிலான மாநாடு இலங்கை மன்றக்கல்லூரியில் கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இருதினங்கள் நடைபெற்றன.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வை இலங்கை தேசிய சமாதானப் பேரவை ஏற்பாடு செய்திருந்தது. இதில் சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வமத தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் சிறந்த தலைமைத்துவம், சமூகத்தில் மதத் தலைவர்களுடைய முக்கியத்துவம், மக்களுக்கிடையே இன,மத முறுகல் நிலையை தீர்ப்பதும் சமாதானம்,நல்லிணக்கம் மற்றும் பொருளாதாரம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டன.

### டெங்கு ஒழிப்பு வாரம்

## சுகாதார பரிசோதகர்களால் நாளை திடீர் சோதனை

**வெலிகம தினகரன் நிருபர்**

டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி வெலிபிட்டிய மற்றும் கொலேதண்ட பகுதிகளில் நாளை 9ம் திகதி வெள்ளிக்கிழமை டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை கண்டறிய சோதனை நடவடிக்கைகள் இடம் பெறவுள்ளன.

வைத்திய அதிகாரிகள், சுகாதார பரிசோதர்கள் இச்சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இப்பகுதிகளிலுள்ளவர்கள் தத்தமது பகுதி சுற்றுச்ழசூழல்களை சுத்தமாக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். குறிப்பாக நீர் தேங்கி நிற்கும் இடங்களை இனங்கண்டு அவற்றை அகற்றி விடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். டெங்கு நுளம்பு பெருகும் வண்ணம் சுற்றுச்சூழல்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதோடு அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர வாய்ப்புண்டு. இவற்றை கருத்திற் கொண்டு செயற்படுமாறு இப்பகுதியிலுள்ளோர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## காணாமல்போன நபரின் சடலம் கண்டுபிடிப்பு

### தனியார் காணியிலிருந்து மீட்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கடந்த 06 தினங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த நபர் ஒருவரின் சிதைவடைந்த சடலம் எப்பாவள பொலிஸ் பகுதிக்குட்பட்ட யோத எலகம கிராமத்தில் தனியார் காணி ஒன்றில் இருந்த கிரவல் குழியில் இருந்து நேற்று முன்தினம் (06) கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

எப்பாவள யோத எலகம பகுதியைச் சேர்ந்த 79 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை ஒருவரே உயிரிழந்துள்ளார். குறித்த நபர் கடந்த 01 ம் திகதி மாலை தொடக்கம் காணாமல் போயுள்ளதாக அவரது மகன் (03) ம் திகதி எப்பாவள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.



நேற்று முன்தினம் (06) பொஸ்பேட் வனப் பகுதிக்கு விறகு தேடிச் சென்ற நபர் ஒருவருக்கு துர்நாற்றம் வீசியுள்ளது.

அது தொடர்பில் தேடிப்பார்த்த போது தனியார் காணியொன்றில் பல வருடங்களுக்கு முன்பு கிரவல் மண் வெட்டிய குழியில் இருந்து சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் எப்பாவள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் உயிரிழந்துள்ள நபரின் சடலம் 10 அடி ஆளமுடைய குழியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்துள்ள நபரின் மனைவி கடந்த 11 மாதங்களுக்கு முன்னர் இறந்துள்ளதுடன் அன்று தொடக்கம் ஏதோ ஒரு வகையில் அந்நபர் பாதிக்கப்பட்டிருந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

## முட்டையை அதிக விலைக்கு விற்ற 63 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

**வெலிகம தினகரன் நிருபர்**

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் மே மாதம் 31ஆம் திகதி வரை மாத்தறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில், முட்டையை கூடிய விலைக்கு விற்பனை செய்த 63 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக கொடவில, மொரவக்க மற்றும் தெய்யந்தர ஆகிய இடங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டிருந்தன.

குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட இவர்களுக்கு, மேற்படி நீதிமன்றங்களில் அபராதத் தொகைகளை செலுத்தும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதன் மூலம் 2,118,500 ரூபா அபராதப் பணம் ஐந்து மாதத்துக்குள் அரசுக்கு கிடைத்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜுன் 8 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.31 |
| லுஹர் | 12.11 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.25 |
| இஷா | 07.42 |

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் வைகாசி 25

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# பேலியகொடை மீன் சந்தைக்கு குறைந்த விலையில் ஐஸ் விநியோகிக்க அமைச்சர் டக்ளஸ் உத்தரவு



பேலியகொடை மத்திய மீன் சந்தைக்கு 50 கிலோ ஐஸ் கட்டியொன்றை 500 ரூபாவிற்கு விநியோகிக்குமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஐஸ் உற்பத்தியாளர்களுக்கு ஆலோசனை வழங்கியூள்ளார்.

கடற்றொழில் அமைச்சில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்ற சந்திப்பிலே, அவர் இவ்வாறு ஆலோசனை வழங்கினார்.

பேலியகொடை மத்திய மீன் விற்பனை சந்தைக்கு 50கிலோ எடை கொண்ட ஐஸ் கட்டிகளை 850 ரூபாவிற்குவிற்பனை செய்வதாக அமைச்சரிடம் வர்த்தகர்கள் முறையிட்டிருந்தனர். 06

# 'சினோபெக்' கால் பதித்ததும் எரிபொருள் விலை நிலையாகும்

## அரசின் உயர்மட்ட வட்டாரங்கள் தகவல்

முன்னணி சர்வதேச எரிபொருள் நிறுவனமான சினோபெக்கின் வணிக நடவடிக்கைகளை விரைவில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், எரிபொருளுக்கான நிலையான ஆகக்குறைந்த மற்றும் ஆகக்கூடிய விலையை அரசாங்கம் அறிமுகப்படுத்துமென்று அரசாங்கத்தின் உயர் மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

சினோபெக் நிறுவனம் இலங்கையில் எரிபொருளை விநியோகிக்கும் ஒப்பந்தத்தில் ஏற்கனவே கைச்சாத்திட்டுள்ளது. சினோபெக்குக்கென, நாட்டில் இயக்கப்படும் 150 எரிபொருள் நிலையங்கள் ஒதுக்கப்படும். அத்துடன் மேலும் இரண்டு வெளிநாட்டு எரிபொருள் நிறுவனங்களுக்கும் செயற்பட அனுமதி வழங்கப்படவுள்ளது.

தற்போது, அரசுக்கு சொந்தமான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி ஆகிய நிறுவனங்களே எரிபொருளை விநியோகிக்கின்றன.

சினோபெக் உள்ளிட்ட வெளிநாட்டு நிறுவனங்கள் செயல்படத் தொடங்கியதும் எதிர்காலத்தில் விலை சூத்திரத்தின்படி ஆகக்குறைந்த மற்றும் 06



பாரம்பரிய ரயில் பாதுகாப்பு கடவைகளுக்கான தடுப்புகளுக்கு பதிலாக நவீன தொழில்நுட்பத்துடன் ஹோமாகம, கொடகம ரயில் நிலையத்துக்கருகில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது நவீன ரயில் பாதுகாப்பு கடவைக்கான தடுப்பு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் பொசன் தினத்தன்று திறந்துவைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம்.

# அரச, தனியார் துறைகளில் பணிபுரிபவர்களுக்கு வருமானத்துக்கு ஏற்றவாறு 09 வீட்டு திட்டங்கள்

## கட்டுமானப் பணிகள் துரிதப்படுத்தப்படும்



அரச மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்களுக்கு அவர்களின் வருமானத்திற்கு ஏற்றவாறு ஒன்பது வீட்டுத்திட்டங்களை விரைவாக நிர்மாணிப்பதற்கான அமைச்சரவை பத்திரத்தை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அண்மையில் அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றுபவர்களுக்கென, அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டு இந்த வீட்டுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ், இலங்கையிலுள்ள ஒப்பந்த நிறுவனங்களினால் இந்த வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த வீட்டுத் திட்டங்களை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை ஏற்கனவே 10,430.84 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி காரணமாக, வீட்டுத் திட்டங்களின் கட்டுமானப் பணிகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டன.

ஆனால், அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் உரிய தரப்பினருடன் கலந்தாலோசித்து இந்த வீட்டுத்திட்டங்களை நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அத்துடன், பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் உடன்படிக்கைக்கு உட்பட்டு, இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தை, நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாக சபைக்கு வழங்குவதற்கும் அமைச்சரவை பத்திரம் முன்மொழியப்பட்டுள்ளது.

திறைசேரிக்குச் சுமை ஏற்படாத வகையில் வீட்டுத் திட்டங்களை நிர்மாணிக்கவும், அதற்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கு புதிய உத்திகளைக் கையாளவும் அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

நிர்மாணத்துறையை மேம்படுத்துவதற்காக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு விசேட வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார்.

கஜேந்திரகுமார் MP கைதான விவகாரம்

# யாழ். மருதங்கேணி பொலிஸாருக்கு மனித உரிமை ஆணைக்குழு அழைப்பு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தாக்கப்பட்டமை குறித்து பொலிஸார் மேற்கொண்டநடவடிக்கைகளைஇலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை நடத்தவுள்ளது. இதற்காக, மருதங்கேணி பொலிஸாருக்கு ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகம் ஊடாகவே இந்த அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

மருதங்கேணி பகுதியில், கடந்த (03) மக்கள் சந்திப்பில் ஈடுபட்டிருந்தபோது, அடையாளங்காண முடியாத ஒருவர், துப்பாக்கியை காண்பித்து அச்சுறுத்தியதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

இச்சம்பவம் 06

# சகல அரசியல்வாதிகளும் இனி வருமானத்தை பதிய வேண்டும்

## புதிய விதிமுறைகளின் கீழ் 2024 ஜனவரி முதல் கட்டாயம்



புதிய வரி விதிப்பு முறைகளின் கீழ் சகல அரசியல்வாதிகளும் வருமானத்தை பதிவு செய்ய வேண்டுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல், புதிய விதிகளின் கீழ் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வருமானத்தை பதிவு செய்ய வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது மக்கள் பிரதிநிதிகளாக உள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வருமானப் பதிவேடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆகவே புதிய விதிகளின் படி, குறிப்பாக பாராளுமன்றம், மாகாண சபைகள் அல்லது உள்ளூராட்சி தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்பவர்களும் வருமானத்தை பதிவு செய்ய 06

# எட்டு நாடுகளின் பிளாஸ்டிக் கழிவுகள் இலங்கை கரையில்

சீனா, பங்களாதேஷ், இந்தியா, துருக்கி, தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேசியா மற்றும் சீஷெல்ஸ் ஆகிய எட்டு வெவ்வேறு நாடுகளிலிருந்து கடலில் கொட்டப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள் இலங்கையில் கரை ஒதுங்கியுள்ளன.

இரு நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட பவளப்பாறை சூழலியல் தொடர்பான சீனா – இலங்கை கூட்டுக் 06

வங்கிகளின் அடகு, ஏல விற்பனை மோசடி

# அதிகாரிகளுக்கு எதிராக சட்டத்தில் விரைவில் திருத்தம் கொண்டு வரப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வங்கிகளில் அடகு மற்றும் ஏல விற்பனையில் மோசடிகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படுமென, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வங்கி அதிகாரிகள் சிலர் அடகு, சொத்து மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் ஏல விற்பனைகளின் போது சூழ்ச்சியான வகையில், தமது ஆட்களையே கொண்டு அவற்றை கொள்வனவு செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் நீதிரமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கைத்தொழில் துறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்திலே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில், அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அடகு சட்டத்தின் கீழ் வங்கி, நிதி நிறுவனத்தில், சொத்துக்களை அடகு வைத்து அடகுப் பணத்தை மீளச் செலுத்த முடியாத நிலையில் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும்.

இதில், மக்கள் வங்கி, இலங்கை வங்கி உள்ளிட்ட அரச வங்கிகளுக்கு விசேட சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. குறித்த உடன்படிக்கைக்கு அமைய அந்த வங்கிகளின் நிறைவேற்று சபையின் தீர்மானத்தின் ஊடாகவே, இந்தச் சொத்துக்களை ஏலவிற்பனைக்கு விட முடியும்.

பின்னர், இது தொடர்பான சட்டத்தில் திருத்தத்தை கொண்டுவந்து தனியார் வங்கிகளுக்கும் அந்த சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டன. அந்த நடைமுறையே தற்போதும் உள்ளன.

இந்நிலையில், சில வங்கிகளின் அதிகாரிகள் மிக மோசடியானவர்கள் என்பதை குறிப்பிட வேண்டும். வேண்டுமென்றே கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடுபவர்களை ஏமாற்றி, சூழ்ச்சியான 06

வில்பத்து காடழிப்பு விவகாரம்

# றிசாத் பதியூதீன் எம்.பிக்கு நீதிமன்றம் அழைப்பாணை

## மீள்நடுகை நிதியை அரசுக்கு வழங்காமை குறித்து ஆராயும்



யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை, மீள்குடியேற்றும் போர்வையில் அழிக்கப்பட்ட வில்பத்து காட்டில் மரங்களை மீள நடுவதற்கான நிதியை வழங்காததால்,மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அவருக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

மீள்நடுகைக்காக, ஆயிரத்து 67 மில்லியன் ரூபாவை, அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டுமென 2020 நவம்பர் 16 ஆம் திகதி, மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இத்தொகையை, அமைச்சர் இது வரையில் செலுத்தவில்லை. இதனால், சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையம் மீண்டுமொரு மனுவைத் தாக்கல் செய்து நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுசென்றது. இதனையடுத்தே, நீதிமன்றுக்கு இவர் அழைக்கப்பட்டுள்ளார். மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர், 06

# 06 நாட்களுக்கு முன் காணாமற்போன நபர் உருக்குலைந்த சடலமாக மீட்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஆறு தினங்களுக்கு முன்னர் காணாமல்போயிருந்த நபர் ஒருவர், எப்பாவல காட்டுக்குள்ளிருந்து சிதைந்த சடலமாக மீட்கப்பட்டார்.

எப்பாவல, யோத எலகம கிராமத்தில் தனியார் காணி ஒன்றிலிருந்த கிரவல் குழிக்குள்ளிருந்து (06) இவரின் சடலம் மீட்கப்பட்டது. 79 வயதுடைய இவர்,கடந்த (01) முதல் காணாமல் போயிருந்தார். 06

# ஏற்றுமதி வரலாற்றில் சாதனை 2022 இல் 13.1 பில்லியன் டொலர்

## அமைச்சர் ரமேஷ் பத்திரன சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் ஏற்றுமதி வரலாற்றில் கடந்த வருடத்திலேயே ஏற்றுமதி வர்த்தகம் மூலம் அரசாங்கம் அதிகூடிய வருமானத்தை பெற்றுள்ளதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன பாராளுமன்றத்தில் தெரிவித்தார் .

இந்த வகையில் கடந்த 2022 ஆம் ஆண்டு ஏற்றுமதி வருமானம் மூலம்13.1 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை ஈட்ட முடிந்ததாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, மின்சாரம், எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அரசாங்கம் ஏற்றுமதித் துறையில் இந்தளவு வெற்றியை பெற்றுள்ளதாக குறிப்பிட்ட அவர், இதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிய சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையினர் அனைவருக்கும் அரசாங்கத்தின் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் கைத்தொழில் துறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 06

# பிரிட்டனில் இலங்கை பெண்ணுக்கு நீதிபதி பதவி

## மிகவும் இளம் வயதில் கிடைத்த கௌரவம்



இலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட 34 வயதான ஆயிஷா என்ற பெண், பிரிட்டனின் நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வேல்ஸில் உள்ள கடுமையான குற்றவியல் வழக்குகளை முக்கியமாகக் கையாளும் கிரவுன் நீதிமன்றத்தில், வெள்ளையர் அல்லாத சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மிகவும் இளைய நீதிபதியாகியாக ஆயிஷா உள்ளார்.

ஆயிஷாவின் குடும்பம் பிரிட்டனுக்கு குடிபெயர்ந்த போது ஆயிஷா 14 வயதுச் சிறுமியாக இருந்தார். லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ அறிவியலில் இளங்கலைப் பட்டப்படிப்பை முடிப்பதற்கு முன்பே, ஹாரோகேட் மாவட்ட மருத்துவமனையில் நோயியல் நிபுணராகப் பணியாற்றினார்.

பாரிஸ்டராக பணியாற்றிய அவர், நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 187.20 | 198.68 |
| கனடியன் டொலர் | 210.97 | 223.72 |
| யூரோ | 304.19 | 321.09 |
| ஜப்பான் யென் | 2.0304 | 2.1406 |
| சிங்கப்பூர் டொலர் | 210.03 | 222.35 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 353.88 | 372.53 |
| சுவிஸ் பிராங்க் | 311.71 | 330.77 |
| அமெரிக்க டொலர் | 285.61 | 298.85 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 775.31 | கட்டார் ரியால் | 80.18 |
| குவைத் டினார் | 950.18 | சவூதி ரியால் | 77.93 |
| ஓமான் ரியால் | 759.21 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 79.58 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 25ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்கஃதா பிறை 18

### குறள் தரும் சிந்தனை



உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்

மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தமது சிறப்பை இழப்பது மட்டுமல்ல, மாற்றாரும் அவர்களைக் கண்டு அஞ்ச மாட்டார்கள்.

# போதைப்பொருளை ஒழிப்பதில் பொதுமக்களின் ஆதரவு அவசியம்!

போதைப்பொருள் கடத்தலும் பாவனையும் இலங்கையை மாத்திரமன்றி, உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. உலகம் எதிர்நோக்குகின்ற பாரதூரமான பிரச்சினைகளில் போதைப்பொருள் கடத்தலும் ஒன்றாக இருக்கின்றது.

போதைப்பொருளை ஒழித்துக் கட்டுவதற்கு உலக நாடுகள் ஒன்றிணைந்து போராடிக் கொண்டிருக்கின்றன. அதற்கென மிகக்கடுமையான சட்டதிட்டங்களையும் வகுத்துச் செயற்படுத்திக் கொண்டிருக்கின்றன. போதைப்பொருள் குற்றங்களுக்கு எதிரான தண்டனைகளும் மிகக் கடுமையானதாகவே உள்ளன.

ஆனாலும் போதைப்பொருள் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதென்பது இயலாத காரியமாகவே இருக்கின்றது. போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், கடத்தல்காரர்கள் தங்கள் குற்றத்தைத் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றனர். போதைப்பொருட்களும் நாட்டுக்குள் வந்து கொண்டேயிருக்கின்றன.

போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்துவதென்பது உலகநாடுகளுக்கு பெரும்பாடாகவே அமைந்துள்ளது. அவ்வப்போது போதைப்பொருள் கடத்தல்கள் முறியடிக்கப்படுகின்ற போதிலும், அதனைவிட அதிக தொகை போதைப்பொருட்கள் முறியடிப்பில் அகப்படாமல் சென்று விடுகின்றன என்றே நம்பப்படுகின்றது. அகப்படாமல் தப்பிக் கொள்ளும் ஒவ்வொரு சிறுதொகை போதைப்பொருளும் ஒவ்வொரு மனிதனின் எதிர்காலத்தையும் சீரழிப்பதாகவே அமைந்து விடுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை ஐஸ் என்ற போதைப்பொருளே சமீப காலமாக நாட்டுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளதாக தெரியவந்துள்ளது. வளர்ந்தவர்களை மாத்திரமன்றி, இளவயதினரான மாணவர்களையும் இலக்கு வைத்து போதைப்பொருள் வியாபாரிகள் செயற்படத் தொடங்கியுள்ளதால், எமது நாட்டின் எதிர்கால சந்ததியே சீரழிந்து போகும் அபாயம் உள்ளதாக பலரும் எச்சரிக்கின்றனர். எனவே எவ்வாறாயினும் போதைப்பொருள் கடத்தலையும் பாவனையையும் முற்றாக ஒழித்துக் கட்ட வேண்டியது அவசியமாகின்றது. இல்லையேல் எமது எதிர்கால சந்ததியே இருளுக்குள் தள்ளப்பட்டு விடும் அபாயம் உள்ளது.

ஏனைய போதைப்பொருட்களைப் பார்க்கிலும் ஐஸ் போதைப்பொருளானது அதிக ஆபத்து நிறைந்ததென்று மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை செய்கின்றனர். உடலுக்கு அதிக போதையைக் கொடுக்கின்ற இப்போதைப்பொருளானது இறுதியில் உடலின் அத்தனை அங்கங்களையும் வலுவிழக்கச் செய்து விடுவதாக மருத்துவர்கள் எச்சரிக்கை செய்கின்றனர்.

ஐஸ் என்ற போதைப்பொருளுக்கு அடிமையாகின்ற ஒருவர் அதிகபட்சமாக இரண்டு வருடங்களில் மரணத்தின் விளிம்புக்குச் சென்று விடுவதாகவும் கூறப்படுகின்றது.

ஐஸ் போதைப்பொருளைப் பொறுத்தவரை மற்றொரு ஆபத்தான விடயமும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஐஸ் போதைப்பொருளை ஒரேயொரு தடவை உபயோகித்துப் பார்ப்போமென்ற எண்ணத்தில் அதனைப் பயன்படுத்தும் ஒருவர், இறுதியில் அதற்கே அடிமையாகிப் போகின்றாரென்பதும் தெரியவந்துள்ளது. அதாவது ஒரேயொரு பாவனையிலேயே ஒருவரை முற்றாக அடிமையாக்கி விடக் கூடிய ஆபத்தான போதைவஸ்துவாக ஐஸ் காணப்படுவதாக உலகளாவிய மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் இப்போதைப்பொருள் குறித்து நாம் அலட்சியமாக இருந்து விட முடியாது. ஏனெனில் இளவயதினர் இலக்கு வைக்கப்படுவதால் நாட்டின் எதிர்காலமே இந்த விடயத்தில்தான் தங்கியிருக்கின்றது. அதுவும் மாணவ சமுதாயத்தை இலக்கு வைப்பதை ஒருபோதுமே அனுமதிக்க முடியாது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை உள்ளதாக சமீப காலமாக தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்வதில் சில விஷமக் குழுக்கள் ஈடுபட்டு வருவதாக பலதரப்பினரும் குற்றம் சாட்டி வந்தனர். அதாவது மாணவர்களை போதைப்பொருளுக்கு அடிமையாக்குவதன் மூலம் தங்களது வியாபாரத்தை பெருக்கிக் கொள்ளலாமென்று போதைப்பொருள் கடத்தல்காரர்களும் வியாபாரிகளும் நினைக்கின்றனர். எனவேதான் அவர்கள் மாணவர்களை இலக்கு வைக்கத் தொடங்கியுள்ளனர்.

இளவயதினரை மரணத்தின் விளிம்புக்குக் கொண்டு செல்கின்ற போதைப்பொருளை எவ்வாறாயினும் கட்டுப்படுத்துவது அவசியமாகின்றது. மக்களும் இது குறித்து விழிப்படைந்தால் மாத்திரமே இதற்கு முடிவு காண முடியும். பொலிசாருக்கு மக்கள் தகவல்களை வழங்குதல் மிக முக்கியம். தகவல்களின் அடிப்படையிலேயே பொலிசாரால் குற்றவாளிகளைக் கைது செய்ய முடியும்.

கிழக்கின் சில பிரதேசங்கள் போதைப்பொருள் கடத்தலுக்கு பெயர்பெற்ற இடங்களாக உள்ளன. அவ்விடங்களில் போதைப்பொருட்கள் கைப்பற்றப்படும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. சில பிரதேசங்களில் இருந்துதான் மற்றைய பிரதேசங்களுக்கு போதைப்பொருட்கள் கொண்டு செல்லப்படுவதாக பலரும் கூறுகின்றனர். தூர இடங்களில் இருந்து கிழக்குக்கு எவ்வாறு கடத்தல்காரர்கள் போதைப்பொருளை கடத்திக் கொண்டு வருகின்றார்களென்பது வியப்பாகவே உள்ளது.

போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதில் பொலிசார் மற்றும் கடற்படையினரின் பணிகள் பாராட்டும்படியாகவே உள்ளன. ஆனாலும் பொதுமக்கள் வழங்கும் தகவல்கள் போதுமானதாக இல்லையென்பது புரிகின்றது. போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதற்கு பொதுமக்கள் தாராளமாக உதவி ஒத்தாசைகளை வழங்க வேண்டுமென்பதே இங்கு அவசிமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# தேசிய சுவடிகள் காப்பக தினம்: நாளை கொழும்பில் விழா



இலங்கை தேசிய சுவடிகள் காப்பகம் () கடந்த 30.05.2023 இல் ஆவணங்கள் தொடர்பான உலகளாவிய பிரகடனத்துக்கு தனது ஆதரவை அறிவித்து, அதன் பரப்புரையை உறுதி செய்துள்ளது. இதற்கிணங்க நாளை 9ஆம் திகதி தேசிய சுவடிகள் காப்பகமானது 'தேசிய சுவடிகள் காப்பக தினம்' கொண்டாடவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக பங்கேற்பார். அதிதிகளாக நாலக குணவர்தன, தனுஜா துரைராஜா மற்றும் நைஜல் நுகவெல ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்நிகழ்ச்சியில் பொதுமக்களையும் கலந்து கொள்ள தேசிய சுடிவகள் காப்பகம் அழைப்பு விடுக்கிறது. பதிவுகளுக்கான விபரங்களை 011 2636917 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டோ அல்லது தேசிய சுவடிகள் காப்பகத்தின் முகநூல் மற்றும் டுவிட்டர் பக்கங்கள் ஊடாகவோ அணுகலாம்.

காப்பகங்களுக்கான சர்வதேச கவுன்ஸிலால் () உருவாக்கப்பட்டதும், 2011 இல் பாரிஸில் நடந்த 36 ஆவது மாநாட்டில் யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்டதுமான காப்பகங்களுக்கான உலகளாவிய பிரகடனம், சமூகத்தில் காப்பகங்களில் முக்கியத்துவம், வினைத்திற

தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம்

னான முகாமைத்துவம், பாதுகாப்பு, வழிகாட்டுதல் மற்றும் ஆவணங்களுக்கான அணுகலையும் வழங்குகிறது. இலங்கை தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம் இல் நிறுவன அங்கத்துவத்தையும் பெற்றுள்ளது. இலங்கையின் எழுத்தாவணப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும் அணுகுவதற்கும் பொறுப்பேற்றுள்ள முன்னணி நிறுவனமாக, தேசிய சுவடிகள் காப்பக சமூகத்தில் காப்பகங்களின் பங்கை கோடிட்டுக் காட்டுவது மிக முக்கியமானதாகும். பிரகடனத்தை ஆதரிப்பதன் மூலம், தேசிய சுவடிகள் காப்பகம் தேசத்தின் வரலாற்றைப் பாதுகாப்பதற்கும், அனைவருக்கும் அணுகக்கூடியதாக இருப்பதையும் உறுதி செய்கிறது. இந்த பிரகனடம் உத்தியோகபூர்வமாக சிங்களம் மற்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு ஜூன் 09 ஆம் திகதி வெளியிடப்படும்.

'காப்பகங்கள் தொடர்பாக உலகளாவிய பிரகனடத்தை ஆதரிப்பதில் இலங்கை தேசிய சுவடிகள் காப்பகம் பெருமை கொள்கிறது' என பணிப்பாளர் நாயகம் (தேசிய சுடிவக்கூடம்) கலாநிதி நதீரா ரூபசிங்க தெரிவித்தார்.

காப்பகங்கள் தொடர்பான உலகளாவிய பிரகடனத்திற்கு ஆதரவளித்தல் மற்றும் சமூகத்தில் காப்பகங்களின் மதிப்பை ஊக்குவிப்பதற்காக இலங்கை தேசிய சுவடிகள் காப்பகம் மற்ற நிறுவனங்களையும் தனிநபர்களையும் இணைத்துக் கொள்ள முயற்சிக்கிறது. இதில் ஆர்வமுள்ள தரப்பினர் ஜூன் 09 ஆம் திகதி தேசிய சுவடிகள் காப்பகத்தில் அல்லது www.ica.org என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து பதிவேட்டில் கையொப்பமிடலாம்.

**கலாநிதி நதீர ரூபசிங்க**
பணிப்பாளர் நாயகம் தேசிய சுவடிக்கூடம் dgna@archives.gov.lk
தொலைபேசி இல.: 011 2671042/ 011 3696917/076 8874158
தொலைநகல் இல: 0112 694419

# கிழக்கு ஆளுநரின் நியமனம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மகிழ்வும் திருப்தியும் தருகின்றது



## மருதமுனை ஊடக பேரவை வாழ்த்து

மொழியினால் இணைந்த ஆளுநரின் நியமனம் கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களுக்கான தொடர்பாடல் தடையற்ற, உணர்வுப் பரிமாறலுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக மருதமுனை ஊடக பேரவை தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண ஆளுனராக செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டதை தொடர்ந்து மருதமுனை ஊடக பேரவை விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

பேரவையின் தலைவர் எம்.எல்.எம்.ஜமால்டீன்,செயலாளர் ஜெஸ்மி எம்.மூஸா ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிழக்கு மாகாண மக்களுக்கும் ஆளுநருக்குமிடையிலான மொழி இடைவெளியால் கடந்த காலங்களில் தங்கள் பிரச்சினைகளை சாதாரண மக்கள் வெளியிடக்கூடிய நிலைமை இருந்திருக்கவில்லை. மலையக மக்களின் பிரச்சினைகளை செவியேற்றுப் பழகிய புதிய ஆளுனரின் வருகையினை கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் தங்கள் நேரடி உறவாகப் பார்க்க எத்தனிப்பது ஆளுநருக்கும் மக்களுக்கும் இடையிலான இடைவெளினைக் குறைத்து,பரஸ்பர உறவுகளுடன் செயற்படக் கூடிய சந்தர்ப்பமொன்று ஏற்படுத்தியுள்ளது.

கல்முனை கல்வி மாவட்டத்தில் குறிப்பாக கல்முனை வலயத்தில் மேலதிக ஆசிரியர் என்ற போர்வையில் வெளிவலய இடமாற்றமொன்றுக்கான முன்னெடுப்பொன்று இடம்பெறுவதாக அறிகிறோம். அதிபர் சேவையில் புதிய நியமனம் இடம்பெறுவதற்கான நேர்முகப் பரீட்சை நடந்தேறியுள்ளது.

இவ்வாறான நியமனம் வழங்கப்படும் போது அதிபர் சேவைக்குள் உள்வாங்கப்படும் ஆசிரியர்களால் பாட ரீதியான வெற்றிடம் ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்விடயத்தை கவனத்திற்கொண்டு கல்முனை வலய மேலதிக ஆளணியினை சமப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும் போதே எதிர்கால செயற்பாடுகளைத் தடையின்றி மேற்கொள்ள முடியும்.

கல்விக் கல்லூரி ஆசிரியர்களுக்கான நியமனமொன்று அடுத்த சில வாரங்களில் இடம்பெறவுள்ளது. இதில் வெளிமாகாணத்திற்கு கிழக்கு மாகாண ஆசிரியர் நியமனத்தை வழங்க முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுவதாக அறிய முடிகிறது. நாட்டின் கடந்த கால சூழ்நிலையினால் கிழக்கு மாகாண ஆசிரிய மாணவர்கள் மிகவும் சவால்மிக்க நிலைமையினைக் கடந்தே வெளிமாகாண கல்விக் கல்லூரிகளில் கற்கை நெறிகளை முடித்து வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் மீண்டும் வெளிமாகாணத்திற்கு அவர்களை அனுப்ப முயற்சி மேற்கொள்ளப்படுமானால் பொருளாதார ரீதியில் பெரும் சிக்கல்களை அவர்கள் எதிர்நோக்க வேண்டிவரும். வெளிமாகாணத் திணிப்பானது தொழிலை விட்டுவிடுவதற்கான நிலைமையினையும் தோற்றுவிக்கும் அபாயத்தை ஏற்படுத்தலாம். சாதாரண மக்களின் உணர்வுகளைப் புரிந்து செயல்பட்டுவரும் அரசியல் தலைவரான நீங்கள் இவ்விடயத்தினைக் கவனத்திற்கொண்டு தீர்வொன்றினை முன்வைப்பீர்கள் என ஆசிரியர்களின் குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் தங்களுக்கு நெருக்கமான ஒருவர் முதலமைச்சராக வந்துள்ளதாக மக்கள் உணருகின்றனர். அதனை உண்மைப்படுத்தும் வகையில் தங்களது முன்னெடுப்புக்கள் அமையும் என்ற எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வீர்கள் என நம்புகிறோம். பதவியேற்றுள்ள தங்களுக்கு எமது ஊடக பேரவை நிறைவான வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
(மருதமுனை தினகரன் நிருபர்)

# உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மரநடுகைத் திட்டம்





ஆனந்த செனவிரெட்ன

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு 'இன்றைய இயற்கையின் சுவாசத்தை வளர்ப்பதற்கான ஒரு நிறுவனத்தின் சமூகப்பொறுப்பு' எனும் தொனிப்பொருளில் 10 ஆயிரம் நிழல் தரும் மரங்களை நடுகை செய்யும் திட்டம் கல்முனையில் முன்னெடுக்கப்பட்டது. சம்பத் வங்கியின் நிதி நிறுவனமான சியாபத நிதி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், தவிசாளருமான ஆனந்த செனவிரெட்னவின் பணிப்புரையின் கீழ் நாடு தழுவிய ரீதியில் பல்வேறு நிறுவனங்களில் மர நடுகை திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அம்பாறை மாவட்டத்தின் கல்முனையில் அமைந்துள்ள 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவில் மர நடுகையின் ஆரம்ப கட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.இதன் போது கல்முனை இராணுவ முகாமின் இரண்டாவது நிர்வாக கட்டளை அதிகாரி மேஜர் தயானந்த மற்றும் இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக கல்முனையில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா நெள தீகாயு கடற்படை முகாமில் இத்திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.இதன் போது குறித்த முகாமின் கட்டளையிடும் அதிகாரி பி.இ.எம்.டி தம்மிக கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாக இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.





இதேவேளை சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரி என்.எம்.அப்துல் மலீக் தலைமையில் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்திலும் மரநடுகை திட்டமானது முன்னெடுக்கப்பட்டது. இதன் போது சாய்ந்தமருது கல்விக் கோட்டத்தை சேர்ந்த 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு பெறுமதி வாய்ந்த மரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.


இந்நிகழ்வில் சியாபத திதி நிறுவனத்தின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் முஹம்மட் பிரிம்சாத்,சியாபத நிதி நிறுவன கிளை முகாமையாளர் முஹம்மட் பரீஹ், கல்முனை கிளை முகாமையாளர் முஹம்மட் பாயிஸ், அதன் ஊழியர்களான ஜவாத், முஜீப், ஆதீஸ் திசிதரன் அஜய் பவாகரன், றிஹான் ஆகியோர் கலந்து கொண்டனர். பின்னர் குறித்த பாடசாலை வளாகத்திலும் மரநடுகை முன்னெடுக்கப்பட்டது.

இந்த மாபெரும் மரநடுகை திட்டத்தில் தென்னை,மா, தோடை, மாதுளை, ஜம்பு, மரமுந்திரிகை உள்ளிட்ட பழமரக்கன்றுகளும் நிழல்தரு மரங்களும் உள்வாங்கப்பட்டு நடப்பட்டதுடன் அதிகமான இராணுவத்தினர், கடற்படையினர், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தனர்.

எதிர்காலத்தில் சூழலை பசுமையாக்கும் திட்டத்தின் கீழ் பொதுஇடங்கள், கடற்கரைப் பிரதேசங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மதஸ்தாபனங்கள், வயல் காணிகள், பாடசாலைகள் உள்ளிட்ட சகல இடங்களிலும் பொதுமக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் சியாபத நிதி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# மனிதநேயத்துக்கு உதாரண புருஷராக வாழ்ந்தவர் ஓய்வுநிலை நிர்வாகசேவை சிரேஷ்ட உத்தியோகத்தர் ஏ.எல்.இப்றாலெப்பை



அட்டாளைச்சேனையில் பன்முக ஆளுமைகளுடன் மிளிர்ந்த, ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாகசேவை சிரேஷ்ட உத்தியோகத்தர் ஏ.எல்.இப்றாலெப்பை அவர்கள் 2022.06.10 ஆம் திகதி தனது 90வது வயதில் காலமானார். எளிமையும் அறிவும் குடிகொண்ட தோற்றம், சிந்தனை கூடிய சாந்தமுகம், மென்மை, இனிமை, நகைச்சுவை நிறைந்த பேச்சு, அமைதியான நடை, மனிதன் என்றால் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற பக்குவம்... போன்ற உயர் பண்புகள் மொத்தமாகக் குடிகொண்ட மர்ஹூம் இப்றாலெப்பை அவர்களின் மறைவு பேரிழப்பாகும்.

அன்னார் இவ்வுலகைவிட்டு மறைந்து 2023.06.10 அன்று ஒருவருடம் நிறைவடைந்தாலும், அவரது ஆளுமை மற்றும் பணிகள் காலத்தால் அழியாது. அன்னாரது நாமம் மக்கள் மனங்களில் நீண்டகாலம் நிலைத்திருக்கும்.

மனிதனுக்குரிய உயர் பண்புகளுடன் வாழ்ந்து மரணித்த மர்ஹூம் ஏ.எல்.இப்றாலெப்பை அவர்களின் வாழ்க்கை தற்கால இளந்தலைமுறையினருக்கு சிறந்த முன்னுதாரணமாகும்.

மர்ஹூம் இப்றாலெப்பை போன்றதொரு உத்தமனை சமூகம் மிக நீண்டகால இடைவெளிக்குப் பின்னரும் பெறமுடியாது என்பதை அவரை புரிந்து கொண்டவர்கள் தெரிந்து கொள்வர். சமூக, பொதுநலப்பணிகளில் அவரது ஈடுபாடு, அக்கறை அதிகரித்திருந்தது. அதற்காக அன்னார் கால, நேரத்தை அதிகம் செலவு செய்தார்.

தான் பெற்றிருந்த அரச பதவிகளின் ஊடாக மாத்திரமின்றி, தான் உயிர்வாழ்ந்த இறுதிக் காலம்வரை இன, மத, மொழி, பிரதேச, அரசியல் வேறுபாடுகளின்றி பணிசெய்தார். தன்னை நாடிவரும் மக்களுக்கு தன்னால் முடிந்தளவு உதவி, ஒத்துழைப்புக்களை மனங்கோணாது வழங்கிய மகானாக அவர் விளங்கினார்.

தான் பெற்றிருந்த ஆங்கில மொழிப் புலமையின் மூலமும் அவரது உதவிகள் அதிகமாக மக்களைச் சென்றடைந்தன. அவரினால் பலர் நன்மையடைந்தனர் என்பதற்கு அவர்களே சாட்சியாகவுள்ளனர். ஆங்கிலமொழியில் கடிதங்களை தயாரிப்பதுடன் மாத்திரம் நின்றுவிடாது அதனை உரியவரின் வீடு தேடிச் சென்று கொடுத்த சம்பவங்கள் அதிகமுள்ளன.

மனிதர்களிடம் நட்புடன் பழகுவதற்கு அவர் ஒரு போதும் தகுதி, தராதரம் பார்த்தது கிடையாது. ஒருவர் ஒருமுறை சந்தித்தால் போதும், அவருடனான நட்பு நீண்டகாலத்திற்குத் தொடரும். அன்னாரது நேர்மை, நேர முகாமைத்துவம், உற்சாகம், சுறுசுறுப்பு இளந்தலைமுறையினருக்கு சிறந்ததொரு முன்னுதாரணமாகும்.

உறவுகள், நண்பர்களின் சுக, துக்க நிகழ்வுகளில் அன்னார் விருப்பத்துடன் கலந்து கொள்வது வழக்கமான பழக்கமாக இருந்தது. நோய் அல்லது துக்க நிகழ்வுகளில் ஆறுதல் சொல்வதிலும் அன்னார் முதன்மையானவராக விளங்கினார். நேரடியாக செல்ல முடியாத தூரப் பிரதேசங்களுக்கு அவசர தொலைபேசி அழைப்பு, தந்தி, கடிதம் மூலம் செய்திகளைப் பகிர்ந்து கொள்ளும் நல்ல பழக்கமும் அன்னாரிடம் நிறையவே காணப்பட்டது.

அட்டாளைச்சேனையில் மர்ஹூம்கள் அஹமட்லெப்பை மரைக்கார், செய்னம்புநாச்சி தம்பதியருக்கு கனிஷ்ட புதல்வராக 1932.07.15 ஆம் திகதி பிறந்த அன்னார், துஹ்பதுல் ஹுஸ்னா அவர்களின் கணவராவார்.

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# இந்தியாவுடன் நட்புறவை மென்மேலும் பலப்படுத்துவதால் இலங்கைப் பொருளாதாரம் துரித வளர்ச்சியடையும் சாத்தியம்

எந்தவொரு நாடும் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமானால், மற்றைய நாட்டின் உதவி தவிர்க்க முடியாததாகும். அதேசமயம் உதவி புரிகின்ற நாடு இதயபூர்வமான வெளிப்படைத்தன்மையுடன் நடந்து கொள்வதும் முக்கியம்.

உதவி புரிகின்ற நாடானது மறைமுக நோக்கங்களையோ அல்லது தனது நன்மைகளை எதிர்பார்த்தோ உதவி புரியுமானால் அந்நாடு குறித்து அவதானமாக இருப்பது அவசியம்.

இந்தியாவைப் பொறுத்தவரை அந்நாடானது இலங்கை விடயத்தில் சரித்திர காலம் முதலே உதவிகளை வழங்கி வருகின்றது இலங்கையானது நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் வேளையில் எல்லாம் விரைந்து வந்து உதவிய நாடு இந்தியா ஆகும். அதேநேரம் இந்த விடயத்தில் இந்தியா பதிலுதவியை என்றுமே எதிர்பார்த்ததில்லை.

உலகில் பொருளாதார ரீதியில் வேகமாக வளர்ந்து வருகின்ற நாடு இந்தியா ஆகும். உலகில் பொருளாதார ரீதியில் ஐந்தாவது உயர் இடத்தில் இந்தியா உள்ளது. இலங்கையானது பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை படிப்படியாகவே முன்னேறி வருகின்றது. இலங்கை பொருளாதாரத்தில் வளர்ச்சியடைய வேண்டுமானால் அயலில் உள்ள நட்புநாடான இந்தியாவின் உதவி தவிர்க்க முடியாததாகும். அதுவும் தன்னலம் கருதாது உதவுகின்ற இந்தியாவின் கரங்களை இலங்கை பற்றிக் கொண்டாலேயே எமது நாடு முன்னேற்றமடைய முடியும். இதுவே யதார்த்தம்.

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான நிதி உத்தரவாதத்தை அளிக்க இந்தியா நடவடிக்கை மேற்கொண்டதை மறந்துவிட முடியாது.

இலங்கையை மீண்டும் மீட்டெடுப்பதற்கு கடன் வழங்குனர்கள் செயற்திறனுடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தியா உறுதியாக நம்புகின்றது. அதனால் ஏனைய தரப்புகளைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் சரியானவை என தான் நினைக்கும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் இந்தியா உறுதியாக உள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சரும் இந்த உறுதிப்பாட்டை பலதடவை குறிப்பிட்டிருக்கின்றார்.

தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார சவாலை இலங்கை வெற்றிகொள்ளுமென இந்தியா நம்புகின்றது. இந்த இக்கட்டான காலகட்டத்தில் இலங்கையின் நம்பிக்கை மிகுந்த நண்பராக செயற்படுவதற்கும் இந்தியா விரும்புகின்றது.

இலங்கையின் நம்பகமான அண்டைய நாடு மற்றும் நம்பகமான பங்காளி என்ற அடிப்படையில் இக்கட்டான நேரத்தில் எல்லாம் இலங்கையின் மீட்சிக்காக பல நடவடிக்கைகளை இந்தியா கடந்த காலத்தில் முன்னெடுத்திருந்தமை நினைவிருக்கலாம்.



இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளாக விளங்கும் வலுசக்தி, சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி போன்றவற்றில் முதலீடு செய்வதில் இந்திய முதலீட்டாளர்களை இந்தியா ஊக்குவித்து வருகின்றது.

இலங்கையில் இதுபோன்ற செயற்பாடுகளை மேலும் அதிகரிக்க வேண்டுமானால் இலங்கையில் சிறந்த வர்த்தக நட்புச் சூழல் உருவாக்கப்பட வேண்டும். அதாவது இந்தியாவின் கரங்களைப் பற்றிக் கொண்டாலேயே இலங்கையானது பொருளாதார முன்னேற்றத்தை எட்ட முடியுமென்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளது.



## உலகின் பொருளாதார வல்லரசாக வளர்ந்துள்ள இந்தியா, இலங்கையுடன் நெருக்கமான பொருளாதார உறவை வளர்ப்பதில் அதிக அக்கறை

சுற்றுலாக் கைத்தொழில் இலங்கைப் பொருளாதாரத்தின் உயிர்நாடியாகத் திகழும் அதேநேரம், இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவதில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர். இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் செல்வதை இந்தியா அதிகம் ஊக்குவித்து வருகின்றது என்பது தெரிந்த விடயம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவதன் மூலமே சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதில் சாதகமான பலனை இலங்கையினால் அடைய முடியும்.

இந்தியா விரைவில் உலகில் பொருளாதாரத்தில் முதலாவது உச்சநிலையில் இருக்கும் நாடாகும் என்பதே சர்வதேச பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும். இந்தியாவின் இந்த பொருளாதார வெற்றியையும் அதற்குள்ள சர்வதேச நற்பெயரையும் இலங்கை மிகுந்த அபிமானத்துடன் நோக்குவதுடன் பொருளாதார நட்புறவை மேலும் நெருக்கமாக்கும் விதத்தில் கைகோர்த்து செயற்படுவது மிகவும் அவசியம்.

இந்தியாவின் இந்த அபார வளர்ச்சியானது, பிராந்தியத்திற்கும் அதேபோல் இலங்கைக்கும் நன்மை பயக்கும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

இலங்கையும் இந்தியாவும் நீண்டகாலமாக பொருளாதார உறவுகளைப் பகிர்ந்து கொண்டு வந்துள்ளன. இந்தியா இலங்கையின் மிக முக்கியமான வர்த்தக பங்காளியாக உள்ளது. பொருளாதார வளர்ச்சியின் இலக்கை முன்னோக்கிய இந்த நகர்வில், இரு நாடுகளும் பொருளாதார உறவுகளை உறுதிப்படுத்தவும், பிராந்திய ரீதியாக தங்கள் பொருளாதார முக்கியத்துவத்தை வலுப்படுத்தவும் ஆற்றல்களைக் கொண்டுள்ளன.

இலங்கையும் இந்தியாவும் தங்களுடைய மத, கலாசார, பாரம்பரியம் தொடர்பான நெருக்கமான சுற்றுலா இணைப்புகளைப் பகிர்ந்து கொள்கின்றன.

கடந்த காலங்களில் இலங்கைக்கான உல்லாச பிரயாணிகளின் மொத்த வருகையில் 18% வீதத்தை இந்திய பயணிகள் கொண்டிருந்ததாக தரவுகள் கூறுகின்றன.

இந்த இரு நாடுகளின் புவியியல் ரீதியிலான நெருக்கத்தைப் பயன்படுத்தி, நன்கு நிறுவப்பட்ட சுற்றுலா இணைப்புகள் மூலம் மேலும் சுற்றுலாத் துறையை வலுப்படுத்த முடியும்.

ஆயுர்வேதம் தொடர்பான இலங்கையின் நீண்ட வரலாறு உடல், உள ஆரோக்கியத்திற்கான உலகளாவிய தேவையை உல்லாச பிரயாணிகளுக்கு வழங்குகிறது. இலங்கையின் இயற்கையான சுகாதாரப் பாதுகாப்பு முறைமைக்கான உலக சுகாதார அமைப்பின் அங்கீகாரம் பிராந்தியத்தில் அதன் நம்பகத்தன்மையையும் போட்டித்தன்மையையும் மேம்படுத்தியிருக்கிறது. எனவே, மத மற்றும் ஆயுர்வேத சுற்றுலா போன்ற வளர்ந்து வரும் சுற்றுலாப் பிரிவுகள் இரு நாட்டு முதலீட்டாளர்களுக்கும் சாத்தியமான வாய்ப்புகளை வழங்குகின்றன.

கொவிட்19 காலப்பகுதியில், மருந்துப் பொருட்கள் மற்றும் தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் திறனை இந்தியா பெற்றது. இது இலங்கைக்கான இந்தியாவின் மனிதநேய பங்கை வலுப்படுத்துவதற்கான மற்றொரு வாய்ப்பைக் கொடுத்தது. தடுப்பூசியை உற்பத்தி செய்வதிலும், இலங்கை உட்பட உலகம் முழுவதும் குறைந்த விலையில் அதனை விநியோகம் செய்வதிலும் இந்தியா முன்னணி வகிக்கும் ஆற்றலைப் பெற்றது.

அதேநேரத்தில், இராஜதந்திர உறவுகளை வளர்ப்பதற்கான முயற்சிகள் இன்னும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் எண்ணமாக உள்ளதையும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது. இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வருவதாக கருதப்படும் விடயங்களில் இலங்கை தூரநோக்கொடு செயற்படல் வேண்டும் என்பதே இந்தியாவின் எண்ணம்.

**எஸ். சாரங்கன்...**

# புளியந்தீவு கோட்டடி பிள்ளையார் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம்

மட்டக்களப்பு நகரின் இதயமெனக் கருதப்படும் புளியந்தீவில் மரபுரிமைமிக்க கோட்டை பிரதேசத்தில், நீதிமன்றத்துக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள புளியந்தீவு கோட்டடிப் பிள்ளையார் ஆலயத்தின் மஹா குடமுழுக்கு கும்பாபிஷேகம் நாளை 9 ஆம் திகதி நடைபெறுகின்றது.



**ஆலய வரலாறு:**

1967 காலப்பகுதியில் பிறீமன் தண்ணீர்ப் பந்தல் அருகாமையில் வீதி ஓரமாகப் பரந்திருந்த அரசமர அடிவாரத்தில் இந்த ஆலயம் அமைந்திருந்தது. மட்டக்களப்பு நீதிமன்றம், கச்சேரி, பொதுநூலகம் நோக்கி அவ்வழியால் செல்வோர் வழிபாடு நடத்தி வந்தனர்.

அப்போது மட்டக்களப்பு கச்சேரியில் ஆராச்சியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த எல்லோராலும் 'சாமியார்' என்று அன்பாக அழைக்கப்பட்ட விநாயக பக்தரான அமரர் பொன்னம்பலம் அவர்கள் தினமும் பிள்ளையாரை பராமரித்து பூஜித்து வந்தார். இவருக்குப் பின் இச்சேவையை கல்லடித் தெருவைச் சேர்ந்த 'மணியம்' என்று அழைக்கப்பட்ட அமரர் சுப்பிரமணியம் என்னும் அடியாரும் செய்துவந்தார்.

காலப்போக்கில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வீதியை விஸ்தரிப்புச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டபோது பிள்ளையார் ஆலயம் அமைந்திருந்த அரசமரத்தைத் அகற்ற மட்டக்களப்பு மாநகர சபை நடவடிக்கை மேற்கொண்டது. அப்போது மட்டக்களப்பு மாநகர சபையின் விசேட ஆணையாளராக இருந்த ஏ.பி. நுகப்பிட்டியா அவர்களுடன் தற்போதைய ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி. சின்னராசா தொடர்பு கொண்டு மட்டக்களப்பு மாநகர சபை வளவிற்குள் பிள்ளையாருக்கு ஆலயம் ஒன்று அமைத்துத் தரும்படி கோரினார். அதனை ஏற்றுக்கொண்ட அவர் மாநகர சபைச் செலவில் ஆலயம் ஒன்றை அமைத்துத் கொடுத்தார்.



பின்னர் 23.11.1978 இல் வீசிய சூறாவளியினால் ஆலயத்தின் கூரை முற்றாகச் சேதமடைந்தது. ஆனால் விநாயகரின் விக்கிரகத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படாத நிலையில் ஆலயத்தின் இடிபாடுகள் அப்பொழுது மாவட்ட நீதிபதியாக இருந்த அமரர் ரி சுந்தரலிங்கம் அவர்களின் உதவியினால் அகற்றப்பட்டு வழக்கம் போல வழிபாடுகள் நடந்து வந்தன.

அப்போது மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதியாக இருந்த கே. பாலகிட்ணர், பிரபல சட்டத்தரணியான கா. தங்கவடிவேல், கட்டட நிர்மாணிப்பாளர் இலகுப்பிள்ளை, பொதுநூலக பொறுப்பாளராகவிருந்த சி. சின்னராசா, செயலாளரான மு. சித்திரவேலாயுதம், பொருளாளர் செ. சந்திரசேகரம், மாவட்ட நீதிபதி விசுவநாதன் ஆகியோர் ஒன்றிணைந்து செயற்பட்டு ஆலயத்தை நன்கு பராமரித்து வந்தனர். இவ்வாலயம் அமைப்பதற்கான இடத்தை மாநகர சபை, ஆலய பரிபாலனசபைக்கு மனமுவந்து கையளித்தது.

1987 ஆம் ஆண்டு அனைவரதும் ஒத்துழைப்டன் தியாகராஜ ஐயர் தலைமையில் இவ்வாலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. ஆலய வேலைகள் நடந்துகொண்டிருந்த போதிலும் நிதிப் பற்றாக்குறை ஏற்படவே வேலைகள் இடைநிறுத்தப்பட்டன.

அப்போது மட்டக்களப்பு மாவட்ட நீதிபதிகளாகவிருந்த ஜேசுரெட்ணம், கே. பி. எஸ். வரதராஜன் வழங்கிய நிதி உதவியினாலும், அப்போது உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக இருந்த நிஹால் கருணரட்ண, மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரபல சட்டத்தரணி கா. தங்கவடிவேல், பொதுநூலகப் பணியாளர்கள், கூ.மொ.வி நிலையப் பணியாளர்கள், மட்டக்களப்பு பஸார் வீதியிலுள்ள வர்த்தகர்கள், இன்னும் பல அடியவர்கள் மனமுவந்தளித்த நிதி ஒத்துழைப்பினால் ஆலய திருப்பணி வேலைகள் முடிவடைந்து 29.03.1993 இல் சிறப்பான முறையில் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக கடமை வகித்து வந்த மாணிக்கவாசகர் கணேசராஜா மேற்கொண்ட முயற்சியின் பலனாக சேகரிக்கப்பட்ட நிதி மூலமாக ஆலயத்தின் முன்மண்டபம், முன்எல்லைச் சுவர் என்பன அமைக்கப்பட்டன. அத்துடன் 15.12.2016 இல் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு செயற்பட ஆரம்பித்தது. இந்த நிலையில் நீதிபதியும் இங்கிருந்து இடமாற்றலாகிச் சென்று விட்டார். அதன் பின்னர் சிறிய அளவிலான புனரமைப்புப் பணிகளே இடம்பெற்று வந்ததுடன் பாரிய புனரமைப்பு பணிகள் எதுவும் இன்றி முழுமையுறாத நிலை காணப்பட்டது.

இந்த ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 12 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் பெரியபோரதீவைச் சேர்ந்த செ.யோகராஜா ஆலயத்தை பார்வையிட்டு ஆலய மகாகும்பாபிஷேகத்தை உடனடியாக நடத்த வேண்டிய ஒழுங்குகளை செய்யுமாறு நிர்வாக தரப்பினரை வேண்டிக் கொண்டார். அவரே நேரில் வந்து நிர்வாகத்தினருடன் ஒருவராக நின்று நிதியினை வழங்கியதன் காரணமாக ஆலயம் புதுப்பொலிவு பெற்றது. இன்று (08) 2 ஆவது மகா கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது.

அதனைத் தொடர்ந்து 11 நாட்கள் மண்டலாபிஷேகப் பூஜைகள் நடைபெற்று செவ்வாய்க்கிழமை (20) காலை 108 சங்காபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகளை சிவஸ்ரீ வெ.கு.பரமானந்தக் குருக்கள், சிவஸ்ரீ ஜி.என். திருக்கணேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ ஸ்கந்தவரதீஸ்வர குருக்கள், சிவஸ்ரீ க.வடிவேல் குருக்கள், சிவஸ்ரீ கா.யதார்த்தன சர்மா மற்றும் ஆலய பிரமத குரு சிவஸ்ரீ ப.துஷந்த சர்மா ஆகியோர் நிகழ்த்துவர்.



**சிவம் பாக்கியநாதன்...**
(ஆலய கும்பாபிஷேகக் குழு)

# பதுளை மண்ணுக்கு புகழ் சேர்க்கும் மைந்தன் பேராசான் நித்தியானந்தன்

பதுளை ஊவா கல்லூரியில் தமிழ்ப் பிரிவு இயங்கிய காலப்பகுதி. 1967/68 காலப்பகுதி அது. க.பொ.த. கலைத்துறை உயர்வகுப்பு அங்கு நடந்த காலம் அது. பண்டிதர் க.கனகசபாபதி, செல்வி.எஸ்.குமாரசாமி, திருமதி நளாயினி சண்முகநாதன் போன்ற அர்ப்பணிப்புமிக்க ஆசிரியர் குழாம் அக்கறை கொண்டு கற்பித்தலில் ஈடுபாடு காட்டியிருந்தது.

காலைநேரத்தில் தமிழ் மாணவர்களும் மாலை நேரத்தில் கீழ்ப்பிரிவுச் சிங்கள மாணவர்களும் பயின்று கொண்டிருந்தனர்.

காலைநேரம் பாடசாலை ஆரம்பமாகியதும், தமிழ் மாணவர்கள் சிங்களப் பிரிவு வகுப்புகளிலிருந்து நாற்காலிகளைத் தேடிக்கொண்டு வருவதற்குள் முதல் பாடம் அநேகமாக முடிந்து விடும்.

பாடசாலையில் நாற்காலி தேடும் படலம் அதிகாலையில் தமிழ் மாணவர்களுக்கு அன்றாடம் பெரும் சோதனையாய் இருந்தது.

பாடசாலைப் புனரமைப்பு என்ற பெயரால் தமிழ் மாணவர்களுக்கு எதிரான பாரபட்சம் நிலவியது. இதனால் சிங்கள மாணவர்கள் வசதியான, வளமான பாடசாலைகளுக்கு மாற்றம்பெற, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் வசதி குறைந்த, ஒதுக்கப்பட்ட புறப்பகுதிகளில் உள்ள கட்டடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டார்கள்.

இக்காலத்தில், 1967,1968 ஆம் ஆண்டுகளில் பதுளை ஊவா கல்லூரியில் க.பொ.த. உயர்தர வகுப்பில் நண்பர் மு.நித்தியானந்தனுடன் நாங்கள் பயின்ற பொன்னான நாட்கள் மனதை விட்டு அகலாத சித்திரமாய் உள்ளன.

பதுளை ஊவா கல்லூரியில் தமிழ் மாணவர்களின் பொறுமையைச் சோதிக்க உருவாக்கப்பட்ட பாரபட்சம், அடக்குமுறை, சமத்துவமற்ற சம்பவங்களுக்கு எல்லையே இல்லை எனலாம்.



இதனால் மாணவர்களுக்கு விரக்தி. தோட்டங்களிலிருந்தும், வெகுதொலைவிலிருந்தும் அதிகாலையில் நீண்டதூரம் நடந்து, களைப்புடன் பாடசாலைக்கு வந்தால் சற்றுக் களைப்பாறவும் முடியாத நிலை. இது பாடசாலைப் புனரமைப்பு என்ற திட்டமிட்ட செயலால் தமிழ் மாணவர்களின் கல்விக்கு ஆப்புவைத்த செயல் என்றே கூறவேண்டும்.

இந்தப் பாரபட்ச நிலையிலிருந்து விடுபட, பாடசாலையில் கல்வி பயின்ற தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒற்றுமையுடன் வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். பாடசாலை வளவிற்குள் நடைபெற்ற போராட்டம் அது.

'பாடசாலையில் போதிய நாற்காலி, மேசை, தளபாடங்கள் இல்லை. நாங்கள் மேலிடத்திற்கு அறிவித்துள்ளோம். பகிஷ்கரிப்பை விட்டு நீங்கள் வகுப்பிற்குச் செல்லலாம். இன்றேல் நடவடிக்கை எடுப்போம்' என்று அதிபர் அச்சுறுத்தினார்.

மாணவர்கள் அசையவில்லை. இந்த ஆர்ப்பாட்டத்திற்கும் வகுப்பு பகிஷ்கரிப்பிற்கும் காரணமான மாணவர்களின் பிரச்னைகளை பாடசாலை நிர்வாகத்திற்கு எடுத்துக்கூறிய நண்பர் மு.நித்தியானந்தனின் செயற்பாடு, எதிர்கால வெகுஜனப் போராட்டத்திற்கும் அடக்குமுறைக்கும் அவர் களத்தில் முன்நிற்பார் என்பதைப் பறைசாற்றியது.

மாணவர் போராட்டம் தொடர்ந்ததால் திடீரென்று பொலிசார் வரவழைக்கப்பட்டனர்.

மாணவர்களிடம் 'இந்தப் பகிஷ்கரிப்பிற்குத் தலைவர் யார்?' என்று வினவினார் பொலிஸ் அதிகாரி. இச்சந்தர்ப்பத்தில் மாணவர் மத்தியிலிருந்து ஒரு குரல் ஒலிக்கிறது: 'இந்தப் பகிஷ்கரிப்பிற்கு மாணவர்கள் ஆகிய நாங்கள் எல்லோரும் தலைவர்கள்' அது நித்தியானந்தனின் குரல். பொலிஸ் அதிகாரி முகத்தில் ஏமாற்றம். நித்தியின் பதில் அவருடைய அறிவுபூர்வமான யுக்தியை வெளிக்காட்டியது. மீண்டும் பொலிஸ் அதிகாரியுடன் வந்த அதிபர் பாடசாலை மூடப்படுகிறது என்றும் மீண்டும் பாடசாலை திறக்கப்படும் நாள் அறிவிக்கப்படும் என்றும் அறிவித்து, பாடசாலை மூடப்பட்டது.

அதன்பின் ஊவாக்கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தை உடனடியாகக் கூட்டுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு நித்தியானந்தன் செயலில் இறங்கினார்.

இரு வாரங்களுக்குப்பின் பாடசாலை திறக்கப்பட்டது. பாடசாலயில் புதிய அதிபரும் பிரதி அதிபரும் கடமையேற்றிருந்தனர்.தளபாடப்பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டது. ஆனால் ஊவா கல்லூரியில் இயங்கிய தமிழ்ப் பிரிவு மூடப்பட்டு, பதுளை சரஸ்வதி மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டது.

பதுளை ஊவாக்கல்லூரியில் இயங்கிய தமிழ் மாணவர் மன்றத்தின் செயலாளராக மு.நித்தியானந்தன் இருந்தபோது, அவரின் பெருமுயற்சியால் நடைபெற்ற கலைவிழாவும் மலர் வெளியீடும் அவரின் இலக்கிய முயற்சிக்குக் கிடைத்த வெற்றி எனலாம்.

1968ஆம் ஆண்டு க.பொ.த. (உ.த) மாணவர்கள் பாடசாலையின் விடுகையின்போது நடைபெற்ற இராப்போசன விருந்தில் மு.நித்தியானந்தன் ஆங்கிலத்தில் ஆற்றிய உரையினை கல்லூரி அதிபர் கே.ஹரிச்சந்திர பெரிதும் பாராட்டினார்.

உயர்வகுப்பில் பயின்று கொண்டிருந்தபோதே நித்தியானந்தனின் இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் இலங்கையின் வார ஏடுகளில் வெளிவர ஆரம்பித்திருந்தன.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவனாக இருந்தகாலத்திலும் சரி, பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த காலத்திலும் சரி, பதுளைக்கு வருங் காலங்களில் பதுளைப் பாடசாலைகளில் அவர் வகுப்பெடுத்த காலங்களை மாணவர்களும் பெற்றோரும் நினைவில் கொண்டிருந்தனர். நித்தியின் பெயர் பதுளை நகரின் வீட்டுப்பெயராகவே அறியப்பட்டிருந்தது.

பேராசான் மு.நித்தியானந்தன் பதுளை மண்ணிற்கு அணி சேர்க்கிறார் என்றால் மிகையாகாது. எங்கிருந்தாலும், எந்த மண்ணில் வாழ்ந்தாலும் அகவை எழுபத்தைந்தை கடந்துள்ள அவரின் இலக்கியப் பணிகள் மேலும் வளம்பெற வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.



**பி.வேதாந்தமூர்த்தி...**
(ஹாலிஎல)

## பொலிஸாரின் கடமைகளில்...

அதிகாரிகள் எனக்கு அறிவுறுத்தினர் . கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கைது செய்ய நீதிமன்றத்துக்கு அறிவித்து நடவடிக்கை எடுப்பதாகவும் எனக்கு அறிவித்தார்கள். அவர் பாராளுமன்றத்துக்கு வருவதை தடுப்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாதென, அவர்களுக்கு நான் அறிவித்தேன். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. மற்றும் பிரதிபொலிஸ்மா அதிபர் ஆகியோர் நேற்று என்னுடன் பேசினர். கைது செய்யப்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியை கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர்,பாராளுமன்றம் அழைத்து வர நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் தெரிவித்தனர். இதுதான், அவர்களின் திட்டமாக இருந்தது. பொலிஸாரின் கடமையில் எம்மால் தலையிட முடியாது. கைது செய்த பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவேண்டியது பொலிஸாரின் பொறுப்பாகும் என்றும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டிலிருந்து திரும்பிய...

(IDH) தொற்று நோய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். டுபாயிலிருந்து நாடு திரும்பிய தாய் மற்றும் மகள் ஆகிய இருவருக்கும், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சோதனை நடத்தப்பட்டது.இதில், இவர்களுக்கு குரங்கு அம்மை தொற்றியிருப்பது உறுதி செய்யப்பட்டது. இதேவேளை, குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்ட இப்பெண்ணின் கணவர், வெளிநாட்டிலிருந்த போது குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டு குணமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயேசஸ், 2022 நவம்பரில் தொற்று நோயை உலகளாவிய அவசரநிலையாக அறிவித்தமை குறிப்பிடத்தகது.

## அரச சேவையை டிஜிட்டல் மயமாக்க...

செயலிகளை" உருவாக்கும் பணி தனியார் நிறுவனங்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும், எதிர்காலத்தில் டிஜிட்டல் ஊக்குவிப்பு முகவர் நிறுவனங்களினாலேயே இந்த செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று (07) பாராளுமன்ற கட்டிடத் தொகுதியின், 01 ஆம் இலக்க குழு அறையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார். அரசாங்க நிதிக்குழுவின் புதிய தலைவராக ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி கலாநிதி ஹர்ஷ டி சில்வாவை நியமிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இங்கு முன்மொழிந்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ரணில் விக்ரமசிங்க மேலும் கூறியதாவது,

குழுக்கள் மற்றும் ஆலோசனைக் குழுக்களுக்கான தலைவர்கள் நியமனம், நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் எதிர்க்கட்சி எம்.பிகளுக்கு வழங்கப்பட வேண்டும். அதற்காக ஹர்ஷ டி சில்வாவின் பெயரும் வேறு சில உறுப்பினர்களின் பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டன.

மயந்த திசாநாயக்க எம்.பி தலைவர் பதவியிலிருந்து விலகினார். ஆனால் எதிர்க்கட்சிகள் முன்மொழிவதாக இருந்தால், பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுக்கு அரச நிதிக்குழுவின் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும். ஜனப ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனால், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைவர் இதற்கமைய செயல்பட வேண்டும்.

குழுக்கள் மற்றும் ஆலோசனைக் குழுக்களின் விதிகள் குறித்து அந்தக் குழுக் கூட்டங்களில் எம்.பி.க்கள் கூடி முடிவு எடுக்க வேண்டும். பாராளுமன்றத்தில் குழுக் கூட்டத்திற்கு இடமில்லை என்றால் எமக்கு வேறு கட்டிடம் ஒன்றை பெறமுடியும். இதில் பங்கேற்பவர்களுக்கு தனியான கொடுப்பனவு செலுத்த முடியும். பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்றை சமர்ப்பிக்கும் முன்னர், குழுக்களில் குறைந்தது ஒரு வாரமாவது ஆராய்ந்து உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வுடன் முன்வைக்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். நாளை சமர்ப்பிக்கப்படும் சட்டமூலத்தை இன்று எம்.பி.க்களிடம் கொடுத்தால் பயனில்லை. அதற்கு குறைந்தபட்சம் இரண்டு வாரங்களாவது எம்.பி.க்களுக்கு அவகாசம் கொடுப்பது உகந்தது.

உலக வங்கி உதவியின் கீழ் இடைக்கால வரவு செலவுத் திட்ட அலுவலகத்தை நிறுவ நிதி பெறப்பட்டுள்ளது. இதைத் தொடர உங்கள் உதவி தேவை. குழுக்கள் மற்றும் ஆலோசனைக் குழுவின் தலைவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் பொறுப்புகளை குழுவில் கூடி முடிவு செய்து வழங்க வேண்டும்.

கடந்த காலங்களில், உள்ளூராட்சி சபை மட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரிகள் (DRO) இருந்தனர். இந்தியாவில் வசூல் செய்யும் அதிகாரிகள் இருந்தனர். ஆனால் இலங்கையில் பிரதேச செயலகங்கள் விரிவடைந்ததும் மாவட்ட வருவாய் உத்தியோகத்தர்கள் காணாமல் போயினர். அதற்காக நியமிக்கப்பட்டிருந்த முன்னாள் அதிகாரிகள், அரசுக்கு வருவாயை வசூலிக்காமல், அரசின் பணத்தை செலவழித்ததாகவும் ஜனாதபதி தெரிவித்தார்.

## வெளிநாட்டு நிபுணத்துவத்தை...

இவ்விருவரும் சந்திக்கலந்துரையாடிபோதே, ஆளுநர் இக்கோரிக்கையை முன்வைத்தார். சுற்றுலாத்துறை, கடற்றொழில், கனிம மணல் மற்றும் விவசாயம் போன்ற துறைகளை கிழக்கில் முன்னேற்ற வேண்டியுள்ளது. இதற்கான அனுபவங்களை வெளிநாடுகளிலிருந்து பெறுவது குறித்து வெளிநாட்டமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. ஆளுநரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் சாத்தியங்களை ஆராய்ந்து தக்க பதிலளிப்பதாக, வெளிநாட்டமைச்சர் உறுதியளித்தார்.

## மணல் அகழ்தல் நடவடிக்கைகளில்...

மணல் அகழ்வுகளில் மாபியாக்களுக்கு இடமளிக்க முடியாது. மண் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடிகளை களைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எமது அமைச்சின் கீழ் வரும் கனிய வளம் மற்றும் அதனுடான உற்பத்திகள் தொடர்பில் வெளிநாட்டு கனயவள நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இவற்றின் ஏற்றுமதி மூலம் எமது நாட்டுக்கு பெருமளவு வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும். அதேபோன்று மண்ணகழ்வு உள்ளிட்ட செயற்பாடுகளில் காணப்பட்ட மோசடிகளை களைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மணல் போக்குவரத்து செய்வதற்கான தூரம் உள்ளிட்ட கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. இதற்கான அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி ஊழல் மோசடிகள் இடம் பெறுகின்றன அவ்வாறு இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்காக இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. எக்காரணமுமின்றி விசேட விதமாக அது வழங்கப்பட்டிருந்தது. அதனை கவனத்திற் கொண்டு நாம் அந்த எண்ணிக்கையை 60 ஆக குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பாராளுமன்ற நிதிக் குழு...

காலமாக இழுபறி நிலையில் காணப்பட்டதுடன், சபையில் பல சந்தர்ப்பங்களில் அது தொடர்பான பெரும் சர்ச்சைகளும் இடம் பெற்றுள்ளன. அந்த சிக்கலை நிவர்த்திக்கும் வகையில் ஹர்ச டி சில்வா பாராளுமன்ற அரச நிதிக்குழுவின் தலைவராக நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற அரச நிதிக்குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று கூடியது. ஜனாதிபதியின் பரிந்துரையின் அடைப்படையில் ஹர்ஷ டி சில்வா எம்.பியை தலைவர் பதவிக்கு நியமிக்க நிதிக்குழு உறுப்பினர்கள் ஆதவு வழங்கியுள்ளனர். பாராளுமன்றத்தின் அரச நிதிக்குழு நியமிக்கப்பட்டிருந்தாலும் அந்த குழுவுக்கு தலைவர் ஒருவரை நியமிப்பதில் பெரும் இழுபறி நிலை ஏற்பட்டிருந்தது.

ஹர்ஷ டி சில்வா எம்.பி.யின் பெயரை பிரதான எதிர்க்கட்சி முன்மொழிந்திருந்த நிலையில் முதலில் மயந்த திஸாநாயக்கவுக்கே அந்தப் பதவி வழங்கப்பட்டது. அதற்கு எதிர்க்கட்சி கடும் எதிர்ப்புத்தெரிவித்த நிலையில் மயந்த திசாநாயக்க தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தததன் பின்னர் தற்காலிக தலைவர்களுடனேயே பாராளுமன்ற அரச நிதிக்குழு செயற்பட்டு வந்தது இந்நிலையிலேயே நிதிக்குழுவின் தலைவர் பதவிக்கு ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

## பாராளுமன்ற சிறப்புரிமையை...

கலந்துகொள்ள உரிமை இருக்கிறது. பாராளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டத்தின் 05 ஆம் உறுப்புரையில் அந்த உரிமை இருக்கிறது.இருந்தாலும் அவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

அத்துடன் வடக்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு ஏற்பட்ட சம்பவம் தொடர்பாக, சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.இது தொடர்பாக பாராளுமன்றத்துக்கு வந்து அவர்,உரையாற்ற உரிமை இருக்கிறது. அதேநேரம், பாராளுமன்றத்துக்கு வந்து, சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்த பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு சென்று வாக்குமூலம் வழங்குவதாக அவர் பொலிஸாருக்கும் தெரிவித்திருக்கிறார். சபாநாயகராகிய உங்களுக்கும் தொலைபேசியில் தெரிவித்திருக்கிறார். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைது செய்யும்போது பின்பற்றவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, 2015 மார்ச் மாதம் (03) வழங்கிய மிகவும் தெளிவான தீர்ப்பொன்று இருக்கிறது. அதனை நினைவூட்டுகிறேன். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அரசியல் தொடர்பாகவும் அவரின் கொள்கை தொடர்பாகவும் எங்களுக்கு மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றன. என்றாலும், பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில்

இச்சபைக்கு வருவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. பாராளுமன்ற சபை அமர்வுக்கு வரும்போது அவரை கைதுசெய்ய முடியாது. அதனால் சபாநாயகராகிய நீங்கள், உடனடியாக சட்டப்பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கி, பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என்றார்.

## நாமல் MPக்கு எதிரான...

நபர்களாக பெயரிடப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பொ'னாண்டோ, சனத் நிஷாந்த, மிலான் ஜயதிலக்க உள்ளிட்டவர்களுக்கு எதிரான முறைப்பாட்டை எதிர்வரும் ஜுலை மாதம் 19ஆம் திகதி மீளவும் அழைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இம்முறைப்பாடு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் நேற்று (07) விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இச் சம்பவத்தின் சந்தேகநபா'கள் தொடர்பில் சட்ட மாஅதிபரின் ஆலோசனை பெறப்பட்டதாகவும், அந்த ஆலோசனையைச் சவாலுக்கு உட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டதாகவும், குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது. இது தொடர்பான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்வரும் 23 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதுடன், இந்த வழக்கை அதன் பின்னர் வரும் தினத்தில் விசாரணைக்கு அழைக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களம் கோரியுள்ளது.

## கஜேந்திரகுமார் எம்.பி...

மருதங்கேணியில் பொலிஸாரி கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் பொலிஸாருடன் அவதூறான வார்த்தைகளை பயன்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ், இவரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக் குற்றச்சாட்டுகளின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தால் அவருக்கு தற்காலிக வெளிநாட்டுப் பயணத் தடையும் விதிக்கப்பட்டது.

மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் அவர் வாக்கு மூலம் வழங்கிய பின்னர், அவர் மீதான வெளிநாட்டு பயணத் தடை நீக்கப்படுமென்றும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.

இதேவேளை இந்தக் குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் இருவர், கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 6.30 அளவில், கஜேந்திரகுமார் எம்.பியை கைதுசெய்வதற்காக, பொலிஸார் அவரது வீட்டுக்கு சென்றனர்.

இவ்விடயம் தொடர்பில், தான் சபாநாயகருக்கு அறிவித்ததாகவும் பொலிஸ் மாஅதிபருக்கு இவ்விடயத்தை தெரியப்படுத்துவதாக சபாநாயகர் தன்னிடம் கூறியதாகவும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி தெரிவித்துள்ளார். எவ்வாறிருப்பினும், நேற்றுக் காலை 8.15 அளவில், பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர்.

மருதங்கேணியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில், மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பிக்கு நேற்று முன்தினம், மதியம் கொள்ளுப்பிட்டி பொலிஸார் அறிவித்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில், நேற்று பாராளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினையை முன்வைக்க கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திட்டமிட்டிருந்தார். பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் நேற்று பிணையில் விடுதலை செய்த்து.

கொள்ளுப்பிட்டியிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்ட அவர் பின்னர்நேற்று மாலை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டபோது அவரை 05 இலட்சம் ரூபாய் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

## இறக்குமதி தடை ஓரிரு...

இப்போது 24.9 மில்லியன் டொலராகவிருந்த அந்நியச் செலாவணி இந்த வருடத்தின் ஏப்ரல் மாதத்தில் 45.4 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. இந்நிலையில் பண வீக்கம் 70 வீதத்திலிருந்து 25.5 விதமாக குறைவடைந்துள்ளது. அத்துடன் வெளிநாட்டுக் கையிருப்பு மூன்று பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. வங்கி வட்டி வீதம் 2 5 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிபலன்களை மக்களும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கான பொருட்களின் இறக்குமதித் தடையை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.


## நடாஷா, புருனோவுக்கு...

நடாஷா எதிரிசூரிய, மே (28) நாட்டை விட்டு வெளியேற முற்பட்டார். இதன்போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர். இதையடுத்து, SLVlog இன் உரிமையாளர் புருனோ திவாகராவும், நடாஷா எதிரிசூரியவுக்கு உதவியதற்காக கைது செய்யப்பட்டார்.

## ஜோன்ஸ்டனுக்கு எதிரான...

விசாரணைக்கு வந்தது.இதன்போதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தொடர்பில், சட்ட மாஅதிபரின் அறிவுறுத்தல்கள் தமக்கு கிடைத்துள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்தது. இதனையடுத்தே, நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.




## 'சினோபெக்' கால் பதித்ததும்...

(03 ஆம் பக்கத் தொடர்)

ஆகக்கூடிய நிலையான விலை அறிமுகப்படுத்தப்படுமென்று அரசாங்கத்தின் உயர்மட்ட தகவல் தரப்புகள் தெரிவிக்கின்றன. "இந்நிறுவனங்கள் நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்குள் போட்டித் தன்மையுடன் இருப்பது அவசியம். இருப்பினும், விரைவில் கடுமையான விலைக் குறைப்பை எதிர்பார்க்க முடியாது, "என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் ஒதுக்கீட்டுக்கான QR குறியீட்டு முறையிலிருந்தும் அரசாங்கம் விரைவில் விலகுமென்றும் அந்த தரப்பு தெரிவித்தது.

இதற்கிடையில், RM ParksShell நிறுவனம் இன்று (08) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் பின்னர், இலங்கையில் எரிபொருள் வர்த்தகத்தை தொடங்கும்.

முக்கிய மசகு எண்ணெய் விநியோகஸ்தரான சவூதி அரேபியா, விநியோகத்தை குறைக்க முடிவு செய்ததால், உலக சந்தையில் எரிபொருள் விலை உயர வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ். மருந்தங்கேணி...

(03 ஆம் பக்கத் தொடர்)

தொடர்பான காணொளி, சமூக வலைதளங்களிலும் பகிரப்பட்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனையடுத்து இவ்விடயம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின், யாழ். மாவட்ட அலுவலகத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முறைப்பாடு செய்திருந்தார்.

இதற்கமைய, விசாரணைகளை மேற்கொள்ள மருதங்கேணி பொலிஸாருக்கு நேற்று அழைப்பு விடுக்கப்பட்டதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்துள்ளார்.நான்கு பொலிஸாருக்கு

இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இருவர் தமது அலுவலகத்தில் ஆஜராகவுள்ளதாக நேற்று அறியப்படுத்தினர். சாதாரணதரப் பரீட்சைக் கடமைகளின் நிமிர்த்தம் ஆஜராக முடியாமல்போன ஏனைய இருவரும், பிறிதொரு தினத்தில் வரவுள்ளதாக தெரியப்படுத்தியுள்ளனர்.

## சகல அரசியல்வாதிகளும்...

(03 ஆம் பக்கத் தொடர்)

வேண்டுமெனக் கூறியுள்ளார். இவ்விடயத்தில் எந்தவொரு தரப்பினருக்கும் விசேட சலுகை வழங்கப்படமாட்டாது. நாட்டில், யார் வரி செலுத்த வேண்டும் என்பதை இத்திட்டம் தீர்மானிக்குமென்றும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## றிசாத் பதியூதீன்...

(03 ஆம் பக்கத் தொடர்)

நீதியரசர் நிஸ்சங்க பந்துல கருணாரத்னவே, முன்னாள் அமைச்சர் றிசாத் பதியூதீனுக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இவ்வழக்கு விசாரணைகள் ஜுலை (28) ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டனில் இலங்கை...

(03 ஆம் பக்கத் தொடர்)

தனது திறமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், சாதி, இனம், நிறம், வயது போன்றவற்றின் தாக்கம் வெற்றியில் இல்லை என குறிப்பிட்டார்.

பிரிட்டனில் ஒரு நீதிபதியாவதற்கான செயல்முறை சிக்கலானது, இரண்டு தேர்வுகள், பயிற்சி மற்றும் ஒரு நேர்காணல் ஆகியவற்றை உள்ளடக்கியது. அத்துடன் இறுதி ஒப்புதல் மன்னரால் வழங்கப்பட வேண்டும். எனினும், இந்தச் செயல்முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற இலக்குடன் செயற்பட்டு அதில் வெற்றி பெற்றதாக ஆயிஷா தெரிவித்துள்ளார்.

## ஏற்றுமதி வரலாற்றில்...

(03 ஆம் பக்கத் தொடர்)

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாட்டில் கைத்தொழில் துறையினர் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அவற்றில் நிதி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக அரசாங்கம் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

வங்கிகளின் ஊடாக கடன்களை பெற்றுக்கொள்ளல், கடனை மீளச் செலுத்துவதற்கு நிவாரண காலத்தை வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக அமைச்சின் மூலம் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோன்று மூலப்பொருட்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தியா போன்ற நாடுகளின் ஊடாக கிடைக்கும் உதவிகள் ஊடாக அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் சந்தை வாய்ப்பு தொடர்பான பிரச்சினைகளின் போது பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால், உற்பத்தி செலவுகள் அதிகரிக்கப்பட்டு உற்பத்தி பொருட்களின் விலைகளும் உயர்வடைந்துள்ளன. அதனால் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதில் பெரும் அசௌ கரியங்களை, எதிர்நோக்க நேரிட்டது. எனினும், தற்போது நெருக்கடியிலிருந்து மீண்டு பொருளாதாரம் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. அதேபோன்று நாட்டில் பணவீக்கம் குறைவடைந்து வரும் நிலையில் இத்தகைய பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்றார்.

## எட்டு நாடுகளின்...

(03 ஆம் பக்கத் தொடர்)

கருத்தரங்கில் விஞ்ஞானி ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார். பல்வேறு நாடுகளிலிருந்து கடல் நீரோட்டங்கள் மூலம் கடத்தப்படும் கழிவுகளில் , 32 மில்லியன் கிலோ பிளாஸ்டிக் கழிவுகள் இலங்கைக் கரையோரத்திலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளதாக ருஹுணு பல்கலைக்கழகத்தின் கலாநிதி டெர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார். கொழும்பு துறைமுக நகரம், பவளப்பாறைகளின் தற்போதைய நிலை மற்றும் அவற்றின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புக்கான உத்திகளை ஆராய்வதற்காக அத்துறையில் புகழ்பெற்ற நிபுணர்களை ஒன்றிணைத்துள்ளது.

## 06 நாட்களுக்கு முன்...

(03 ஆம் பக்கத் தொடர்)

இது குறித்து அவரது மகன் (03) பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.இந்நிலையில்,பொஸ்பேட் வனப் பகுதிக்கு விறகு தேடிச் சென்ற நபர் காட்டுப் பகுதியிலி ருந்து துர்நாற்றம் வீசுவதை அவதானித்து,அப்பகுதியில் தேடியபோது இவரது சடலம் மீட்கப்பட்டது. இவரது மனைவி 11 மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்ததிலிருந்து ஏதோவொரு வகையில் இவர் பாதிக்கப்பட்டது தெரிய வந்துள்ளது.மனைவியைத் தேடி அலைந்ததில், இவர் குழிக்குள் விழுந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

## அதிகாரிகளுக்கு எதிராக...

(03 ஆம் பக்கத் தொடர்)

வகையில் அந்த சொத்துக்களை தங்களின் ஆட்களையே அனுப்பி அவற்றை விற்பனை செய்யும் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அதேவேளை, மத்திய வங்கியின் அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கும் சில நிதி நிறுவனங்கள் நாட்டில் உள்ளன.

இந்நிறுவனங்களின் பலர், தமது வாகனங்கள் உள்ளிட்ட சொத்துக்களை அடகு வைத்து பணம் பெறுகின்றனர். இதன் போது அவர்களின் காணிகள், வீடுகள் உள்ளிட்ட ஏனைய சொத்துக்களையும் எழுதிக்கொள்கின்றனர். அவற்றையும் அந்த பணத்தை மீள செலுத்திய பின்னரே கையளிப்பர். இதனைக் கவனத்திற் கொண்டு, நொத்தாரிஸ் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள உள்ளோம்.ஆனால், பல நொத்தாரிசுகள் எவ்வித பொறுப்புக்களுமின்றி உரித்து போன்று அதனை எழுதுகின்றனர்.இனி நொத்தாரிசுகள் உரித்துக்களை எழுதும் போது, கையெழுத்து தொடர்பில் கவனம் செலுத்தி கொடுக்கல் வாங்கல் முறையாக உறுதிப்படுத்தப்பட்டே அதனை எழுத வேண்டும். அவ்வாறின்றி அவர்கள் செயற்பட்டால் அவர்கள் தண்டனைக்கு உள்ளாகும் வகையில் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்றார்.

## பேலியகொடை மீன் சந்தை...

(03 ஆம் பக்கத் தொடர்)

இதனைத் தொடர்ந்து ஐஸ் உற்பத்தியாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஐம்பது கிலோ நிறையுள்ள ஐஸ் கட்டிகளை 500 ரூபாவிற்கு விநியோகிக்குமாறும், அவ்வாறு செய்யின், மீன் வியாபாரிகளுக்கு அவற்றை 650 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியுமென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் குறைந்த விலையில் ஐஸ் கட்டிகளை விநியோகிப்பதற்கு உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்தனர். அதற்கு அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்களும் உடன்பட்டனர். இக் கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## யாழ். பலாலிசென்னை விமான...

தடவையாக சேவையை பூர்த்தி செய்துள்ளது. இதன் மூலம் 10,500க்கும் மேற்பட்ட பயணிகள் பயனடைந்துள்ளதாக விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது. சென்னை மற்றும் யாழ்ப்பாணம் இடையேயான எலையன்ஸ் எயர் மூலம் இயக்கப்படும் 100 ஆவது விமானச் சேவை நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

கொரோனா தொற்று இடர்காலத்தில் இடைநிறுத்தப்பட்ட பின்னர் இந்த விமான சேவை 2022 டிசம்பர் 12 அன்று மீண்டும் தொடங்கியது. இந்த வழித்தடத்துக்கு இடையேயான இருவழி பயணிகள் போக்குவரத்து டிசம்பர் 12 இலிருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வரை மொத்தம் 10,500 க்கும் அதிகமாக உள்ளது. இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான மக்கள் உறவுகளை மேலும் வலுப்படுத்துமென இந்திய தூதரனம் தெரிவித்துள்ளதுடன் அதிகரித்த இணைப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பது மட்டுமன்றி சுற்றுலாப் பயணிகளின் வருகையைத் தூண்டி இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவும் என்றும் தெரிவித்துள்ளது. வாரத்தில் 04 தடவை நடைபெற்றுவரும் சேவையை 07 தடவையாக அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# மாலைதீவின் பாரிய வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்தியா உதவி

இந்தியாவுடன் நெருங்கிய நட்பு கொண்ட மாலைதீவு, தன் உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் பொருட்டு பல புரிந்துணர்வு உடன்படிக்கைகளை இந்தியாவுடன் செய்து கொண்டுள்ளதோடு அவை நடைமுறைப்படுத்தப்பட்டும் வருவதாக மாலைதீவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாலே ஜனாதிபதி இப்றாஹீம் மொஹமட் சோலிஹ் கடந்த ஆகஸ்ட் மாதம் நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு புதுடில்லி விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அப்போது பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதோடு 6.74 கி.மீ. தூரம் கொண்டதும் தலைநகர் மாலேயுடன் மூன்று தீவுகளை இணைக்கும் 500 மில்லியன் டொலர் பெறுமதியான



பாதை அமைக்கும் திட்டத்துக்கான பணியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பிரதமர் மோடியும் மாலைதீவு ஜனாதிபதியும் நிகர்நிலை தொழில்நுட்பத்தின் ஊடாகக் கலந்து கொண்டனர். இந்தியாவுக்கு வெளியே இந்திய உதவியுடன் ஆரம்பமான மிகப்பெரிய வளர்ச்சித் திட்டமாக இது கருதப்படுகிறது.

மேலும் 2021 இல் இந்தியா ஹூல்மாலே தீவில் நான்காயிரம் வீடுகளை அமைப்பதற்காக இந்திய ஏற்றுமதி வங்கி 227 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கியிருந்தது. மேலும் 34 தீவுகளில் சுகாதார, நீர் வழங்கல், சுத்திகரிப்பு, நிலம் மீட்டெடுத்தல் போன்ற அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காக 800 மில்லியன் டொலர்களை இந்தியா தன் கடன் வசதித்திட்டத்தின் கீழ் வழங்கியிருந்ததாகவும் இந்தியாவின் தொடர்ச்சியான உதவிகளுக்காக மாலைதீவு மக்கள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்றும் தகவல்கள் தெரிவித்துள்ளன.



அகில இலங்கை எம்.ஜி.ஆர் மன்ற தலைவர் இத்ரீஸ், தமிழகத்தில் உள்ள மனித நேய அறக்கட்டளை ஐஏஎஸ் பயிற்சி மைய இயக்குனரும் முன்னாள் மேயருமான சைதை துரைசாமியை சந்தித்துப் பேசினார். எம்ஜிஆர் நற்பணி சங்கம் நிர்வாகி ஏ.ஆர்.உசேனும் இவருடன் கலந்து கொண்டார்.

# சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் முப்பெரும் விழா 25 ஆம் திகதி



சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் நடத்தும் முப்பெரும் விழா எதிர்வரும் 2023.06.25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டை பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புரவலர் ஹாசிம் உமர் முன்னணியில் நடைபெறும் இம் முப்பெரும் விழா தே. செந்தில்வேலவர் (தினகரன் பிரதம ஆசிரியர்) தலைமையில் நடைபெறும். கௌரவ அதிதியாக துரைராசா சுரேஸ் (சங்கவி பிலிம்ஸ் நிறுவனம்) கலந்து கொள்கிறார். இந்த முப்பெரும் விழாவில் மாதம் ஒரு கலைஞரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இலங்கையின் பழம்பெரும் நடிகரும் இயக்குனரும் தயாரிப்பாளருமான கலைஞர் S. N. நடராஜா கௌரவிக்கப்படவுள்ளார். இவர் மேடை நாடகங்கள், தமிழ்த் திரைப்படங்கள் ஆகியவற்றில் நடித்துள்ளதோடு ஓம் சரவணா புரோடக்‌ஷன் என்ற அமைப்பை அமைத்து பல்வேறு கலைப்பணிகளை ஆற்றியுள்ளார். இந்த விழாவில் இலங்கையில் தமிழ், சிங்கள திரைப்படங்களை தயாரித்து இயக்கி வரும் எழுத்தாளர் பேராதனை A. A. ஜுனைதீன் எழுதிய இலங்கை தமிழ் சினிமா வரலாறு என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இங்கு மூன்றாவது நிகழ்வாக புதிய பாடகர்களை அறிமுகப்படுத்தும் இசை நிகழ்வொன்றும் நடத்தப்படவுள்ளது.

# காட்மண்டு சர்வதேச யோகா போட்டியில் பங்கேற்கும் சவூதி அராபிய யோகா குழு

இம்மாதம் எட்டு முதல் பத்தாம் திகதிவரை நேபாளர் காட்மண்டுவில் நடைபெறவுள்ள இரண்டாவது எவரஸ்ட் சர்வதேச யோகா சம்பியன்ஷிப் போட்டியில் முதல் தடவையாக சவூதி அராபிய தேசிய யோகா குழு கலந்து கொள்கிறது. இக்குழு கடந்த முதலாம் திகதியே காட்மண்டுவுக்கு வந்து தொடர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாக அதன் பயிற்றுவிப்பாளரான விஜய் யாதவ் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். காட்மண்டு வந்துள்ள சவூதி யோகா குழுவில் எட்டு வயது சிறுவனும் கலந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இளையோருக்கான பிரிவில் தான் கலந்து கொண்டு வெற்றிபெற எதிர்பார்ப்பதாக அல்காம்தி என்ற இச்சிறுவன் சவூதியில் இருந்து புறப்படுவதற்கு முன்னர் அரப்நியூஸ் ஊடகத்துக்கு தெரிவித்திருந்தான். சுவாசிப்பது எப்படி, உடற்பயிற்சிகளை மேற்கொண்டு உடலை நடுநிலையில் வைத்துக் கொள்வது



எப்படி என்பனவற்றை இதன்மூலம் கற்றுக் கொள்ள முடிகிறது என்றும் சிறுவன் மேலும் தெரிவித்தார்.

தமது குழு புத்தி கூர்மையும் தேர்ச்சியும் கொண்ட எந்தவொரு குழுவுடனும் சர்வதேச ரீதியாக போட்டியிடும் வல்லமை கொண்டது என்று சவூதி யோகா கமிட்டியின் நிறைவேற்று அதிகாரியான அஹமட் அல்சாதி கூறியுள்ளார்.

இதேசமயம், செப்டம்பரில் இந்தியாவில் நடைபெறவுள்ள ஜி20 உச்சிமாநாடு தொடர்பாக நடத்தப்பட்ட யோகா பயிற்சிகளில் இக்குழுவைச் சேர்ந்த அல் மார்பாஸ் கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவிலூர் செல்வராஜனின் பொன்விழா நிகழ்வு



கோவிலூர் செல்வராஜனின் பொன்விழா நிகழ்வும் இலக்கியத் தென்றல் மலர் வெளியீடும் எதிர்வரும் 11.06.2023 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வானது மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப் புரவலர் விநாயக மூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி.மு.கோபால ரெத்தினம் அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில், இறைவணக்கம், தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடல் என்பன இடம்பெறும்.

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் கு. விநாயகமூர்த்தி தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட, தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் கி. பிரணுஜா, வரவேற்புரை நிகழ்த்துவார். தமிழ்ச்சங்கத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி மு. கணேசராஜா அறிமுகவுரை நிகழ்த்துவார்.

# கொடிகாமம் விபத்தில் இளைஞர் படுகாயம்

*சாவகச்சேரி விசேட நிருபர்*

யாழ்ப்பாணம், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை கொடிகாமம் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். வரணி சிட்டிவேரம் ஆலயத்திலிருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (06) கொடிகாமம் நோக்கிச் சென்ற தூக்குக்காவடியின் பின்னால் நடந்து வந்த இந்த இளைஞர் வீதியை கடக்க முற்பட்ட போது, பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இதில் படுகாயமடைந்த இளைஞர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பான விசாரணையை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மலேசிய வர்த்தக மாநாட்டில் தமிழக அரசு வழிகாட்டுதலில் களமிறங்கும் வர்த்தக சங்கங்கள்

பன்னாட்டு வர்த்தக மாநாடு (INTERNATIONAL MSME B2B MEET) ஜூன் 27 , 28 ஆம் தேதிகளில் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் பிளாட்டினம் சென்ட்ரல் SME Corp வளாகத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில், தமிழ்நாட்டில் பாரம்பரியமிக்க வர்த்தக அமைப்பான தமிழ்நாடு சேம்பர் ஆப் காமர்ஸ் மற்றும் கொடிசியா (CODISSIA) சௌராஷ்டிரா சேம்பர், டிவைன் சேம்பர் ஆப் காமர்ஸ் போன்ற முன்னணி வர்த்தக சங்கங்கள் உறுப்பினர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்நிகழ்வில் மலேசிய இந்திய வர்த்தக சங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட உள்ளது. இதன் மூலம் வியாபார பரிமாற்றங்கள், வியாபார தொழில் நுட்பங்கள் போன்றவைகள் மட்டுமல்லாது இரு நாடுகளிலும் முதலீடுகளை ஈட்டவும், கிளை அமைக்கவும், புதிய தொழில் முனைவோர்களை உருவாக்கவும், இந்த வர்த்தக மாநாடு பயனுள்ளதாக இருக்கும்.

மேலும் 12க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து வரும் தொழிலதிபர்கள் B2B மூலம் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்தவும் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தவும், கிளை அமைக்கவும், துறை சார்ந்த வல்லுநர்களை பரிமாற்றம் செய்யவும் பேரு உதவியாக இருக்கும் இந்நிகழ்விற்கு தமிழக அரசின் சிறு குறுந்தொழில் அமைச்சகத்தின் கீழ் செயல்படும், FaMe தமிழ்நாடு வழிகாட்டுதலின்படி இந்நிகழ்வு நடைபெற உள்ளது.

இதன் மூலம் தென்னகத்தில் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யவும், இரு நாடு உறவுகளில் அந்நிய செலாவணியை ஈட்டவும் பேருதவியாக இருக்கும் என உலகத் தமிழ் வர்த்தக சங்க தலைவரும் நிகழ்ச்சி ஏற்பாட்டு குழு தலைவர் செல்வகுமார் இணைய வழியாக நேர்காணலில் தெரிவித்தார்.

மேலும் தொடர்புக்கு +6016167708 என்ற whatsapp எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# குழந்தைகளுக்கான மின்னஞ்சலை உருவாக்கும்போது அவர்களின் சரியான வயதை உள்ளிடுங்கள்

பாடசாலை அல்லது கல்வித் தேவைகளுக்காக பிள்ளைகளுக்கு மின்னஞ்சல் முகவரிகளை உருவாக்கும்போது பிள்ளைகளின் சரியான விபரங்களையே உள்ளிடுமாறு பொலிஸ் குற்றப்பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர். நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவிடமே இவ்வாறான பரிந்துரையை அவர்கள் முன்வைத்தனர். பாடசாலை மாணவர்களுக்கான மின்னஞ்சல் கணக்குளை உருவாக்கும் போது பெற்றோரின் விபரங்களை வழங்காமல் குழந்தைகளின் சரியான வயதை உள்ளிடுவதன் மூலம் உருவாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தனர். இணையக்கல்வி அவசியமாகியுள்ள நிலையில், கணினியை அணுகவோ அல்லது கைத்தொலைபேசிகளின் மூலம் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ மின்னஞ்சலொன்றை உருவாக்க வேண்டியது அவசியம் என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

எவ்வாறாயினும், கை தொலைபேசிகளுக்கான மின்னஞ்சல் கணக்குகளை உருவாக்கும்போது பெற்றோர்களின் தகவல்களை வழங்கினால், குழந்தைகள் எந்தவொரு வலைத்தளத்தையும் அணுகுவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள் என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். ஆனால், குழந்தைகளின் சரியான வயது உள்ளிட்ட தகவல்கள் வழங்கப்பட்டால், தகாத வீடியோக்கள் மற்றும் இணையதளங்களைப் பார்க்கும் வாய்ப்பை இணையதள அமைப்பே கட்டுப்படுத்தும்.

தேசிய நல்லிணக்கம், சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவானது பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தலைமையில் கூடியது.

# சுவனத்தென்றல் போட்டி நிகழ்ச்சியில் வெற்றியீட்டிய மாணவர்கள் கௌரவிப்பு

*(புத்தளம் தினகரன் நிருபர்)*

புத்தளம் அல் மத்ரஸதுல் இஸ்லாமியாவினால் வருடாந்தம் ரமழான் காலங்களில் நடத்தப்பட்டுவரும் சுவனத்தென்றல் போட்டி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் மத்ரஸாவின் அதிபர் ஏ.ஒ.பாத்திமா நஸீஹா தலைமையில் மத்ரஸா கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா புத்தளம் கிளையின் தலைவர் அஷ்ஷேக் எச். எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி), புத்தளம் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் எம்.எஸ்.எஸ். ரஜியா ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். மத்ரஸா நிர்வாக குழு தலைவர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். மஹ்ரூப் (இஸ்லாஹி), உறுப்பினர் அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம். இர்பான் (நளீமி), புத்தளம் ரவ்லதுல் அத்பால் பாலர் பாடசாலை அதிபர் நஸ்முன் தௌபான் மற்றும் பாடசாலை ஆசிரியைகள், மத்ரஸா முஅல்லிம்கள், முஅல்லிமாக்களும் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கிவைத்தனர்.



# அங்குரார்ப்பண வைபவம்

புதிய அலை கலை வட்டம் அதன் கலை, இலக்கிய பிரிவை அண்மையில் நிறுவியது. இதன் அங்குரார்ப்பண வைபவம் வரும் 18.06.23 அன்று பி.ப 3 மணிக்கு கொழும்பு14 அமைந்துள்ள கலைமகள் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இந்நிகழ்வுக்கு தலைமை ஏற்கிறார் எக்ஸலன் சர்வதேச பாடசாலையின் அதிபர் ஸ்ரீ வைகுந்தன்.

சிறப்பு அதிதிகளாக தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் தே.செந்தில்வேலவர், அஸிஸ் மன்ற நிறுவனர் அஷ்ரப்அஸிஸ், பிரபல வர்த்தகர் ஜே.பி.ஜெயராம், பட்டிமன்றப் பேச்சாளர் ஆர்.வைத்தமாநிதி மற்றும் முன்னாள் மாநகரசபை உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோவும் சிறப்பு அதிதிகளாக கலைஞரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ராதாமேத்தா, புதிய அலை கலை வட்டத்தலைவர் சன்மு, செயலர் பி.ரி.செல்வம், பொருளாளர் ஒவியன் மற்றும் உப தலைவர் சந்திரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

நிகழ்வுக்கான ஏற்பாடுகளை கலை, இலக்கிய பிரிவின் தலைவர் சனாதனன் சர்மா மற்றும் செயலர் பிரியதர்ஷனி ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — செவ்வாய்க்கிழமை 2023.06.06 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5137 | ரூ. 10,188,356.00 | Z | 0 0 8 6 4 5 |
| கொவிசெத | 3379 | ரூ. 60,785,465.60 | S | 21 32 71 77 |
| தன நிதானய | 1167 | ரூ. 93,417,111.20 | T | 23 60 72 77 |
| ஜாதிக சம்பத | 1592 | ரூ. 11,995,350.00 | வெற்றி இலக்கினம்: மீனம் | 0 0 3 7 9 4 |

ராசி சுப பலன் (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம் 446 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,164,105.40 — வெற்றி இலக்கினம்: துலாம் — வெற்றி இலக்கங்கள் 22 24 33 56 — விசேட இலக்கினம்: துலாம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1485 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 327,345,442.00 — ஆங்கில எழுத்து T — சுப்பர் இலக்கம் 23 — வெற்றி இலக்கங்கள் 04 25 65 72 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# வடக்கின் உதயம்
Vadakkin Uthayam

## யாழ். இந்திய துணைத் தூதுவருடன் வடமாகாண ஆளுநர் சந்திப்பு



யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீ ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றதுடன், வடக்கு மாகாணத்தில் இந்தியாவினுடைய அபிவிருத்தித் திட்டங்களின் நிலை மற்றும் பல்வேறு துறைகளில் இந்தியாவுக்கும் வடக்கு மாகாணத்துக்கும் இடையில் ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான வழிகள் தொடர்பாக அவர்கள் இருவரும் கலந்துரையாடியதாக, இந்திய துணைத் தூதரகம் தெரிவித்தது.

இதன்போது, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கு இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீ ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், இந்திய நூல்கள் சிலவற்றை அன்பளிப்பாக வழங்கினார்.

அரச தொழில்வாய்ப்பு பெற்றுத் தருவதாக

# மன்னாரில் குழுவொன்று பலரிடம் பண மோசடி!



(தலைமன்னார் விசேட, மன்னார் குறுப் நிருபர்கள்)

## இளைஞர், யுவதிகளை அவதானமாக இருக்க அரச அதிபர் வலியுறுத்தல்

வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி இளைஞர், யுவதிகளிடம் ஒரு குழுவினர் பண மோசடியில் ஈடுபட்டு வருவது தொடர்பாக தெரியவந்துள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பாக இளைஞர், யுவதிகளை அவதானத்துடன் இருக்குமாறும், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (06) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

வேலைவாய்ப்பின்றி உள்ளவர்களுக்கு மன்னார் மாவட்ட செயலகம் உட்பட அரசாங்கத் திணைக்களங்களில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி ஒரு குழுவினர் பண மோசடியில் ஈடுபட்டு வருவது தொடர்பாக அண்மைக் காலமாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன.

கடந்த திங்கட்கிழமையும் (05) வேலை பெற்றுத்தருவதாகக் கூறி பணத்தை பெற்றுக்கொண்ட குழுவினர், உயரதிகாரிகளுடன் உரையாடுவது போன்று தொலைபேசியில் பாவனை செய்து ஏமாற்றியமை தெரியவந்துள்ளது.

பிரதேச செயலகங்களிலோ, அரசாங்கத் திணைக்களங்களிலோ பணம் பெற்றுக்கொண்டு, அரசாங்க வேலைவாய்ப்புகள் வழங்கப்பட மாட்டாதென்பதை அனைவருக்கும் தெரியப்படுத்துவதுடன், இதற்கான எந்தவித ஏற்பாடுகளும் இல்லையென்பதையும் தெரிவித்துக்கொள்வதாகவும், தெரிவித்தார்.

மேலும், இவ்வாறான செயல் சட்டத்துக்கு முரணானதெனச் சுட்டிக்காட்டிய அவர், இவ்வாறான மோசடிகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக உங்களுக்கு தெரிய வரும் பட்சத்தில் கிராம அலுவலர்கள் அல்லது பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குமாறும், அவர் கேட்டுக்கொண்டார்.

ஆகையினால், இவ்வாறான மோசடிகள் மன்னார் மாவட்டத்தில் இடம்பெறாமலிருப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவையெனவும், அவர் தெரிவித்தார்.

## யாழ். மாம்பழச் சந்தியில் விபத்து; இளைஞர் காயம்

யாழ்ப்பாணம் குறுப் நிருபர்

யாழ்ப்பாணம் மாம்பழச் சந்தியில் நேற்று புதன்கிழமை (07) நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இவர் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், அதன் வேகக் கட்டுப்பாட்டை இழந்து குளத்துக்குள் பாய்ந்து விபத்துக்கு உள்ளானதாக பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதன்போது, மேற்படி இளைஞரின் இரண்டு கால்களும் உடைந்த நிலையில் இவர், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடவுச்சீட்டுக்கான கைவிரல் அடையாளம்

## தென்மராட்சி, பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் தெரிவு

(சாவகச்சேரி விசேட நிருபர்)

கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்காக கை விரல் அடையாளங்களை பதிவு செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் தென்மராட்சி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக, அவ்வப் பிரதேச செயலகங்களிலுள்ள துறைசார் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்த செயற்பாடு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு பின்னர் நடைமுறைக்கு வருமென்று எதிர்பார்ப்பதாகவும், அந்த உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பாக மேற்படி பிரதேச செயலக துறைசார் உத்தியோகத்தர்களை நேற்று புதன்கிழமை (07) தொடர்பு கொண்டு கேட்ட போதே, அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்த விடயம் நடைமுறைக்கு வரும் பட்சத்தில் கடவுச்சீட்டுகளுக்கு இணையவழியூடாக விண்ணப்பிப்பவர்கள், திணைக்களத்திலிருந்து தகவல் கிடைத்த பின்னர், பரிந்துரைக்கப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு சென்று தமது கை விரல் அடையாளங்களை பதிவு செய்ய முடியுமெனவும், அவர்கள் தெரிவித்தனர்.

## துன்னாலையில் வயோதிப பெண்ணின் நகைகள் திருட்டு!

நாகர்கோவில் விசேட, யாழ். விசேட நிருபர்கள்

யாழ்ப்பாணம், துன்னாலை வடக்கு பிரதேசத்திலுள்ள மாதா கோவிலடியில் வயோதிபப் பெண்ணொருவரின் கழுத்தை கயிற்றினால் இறுக்கி மயக்கமடையச் செய்து விட்டு, அவர் அணிந்திருந்த ஒரு சோடி தங்கக் காப்பையும் தங்கத் தோட்டையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (06) திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

84 வயதுடைய பெண்ணின் இரண்டு பவுண் தங்க நகைகளே திருட்டுப் போயுள்ளன. மாடு கட்டுவதற்காக அயல் காணிக்கு இந்த வயோதிபப் பெண் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், மயக்கம் தெளிந்து இந்தப் பெண் எழுந்து பார்த்த போது, அவரின் தங்க நகைகள் திருட்டுப் போனமை தெரியவந்தது.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக நேற்று புதன்கிழமை (07) பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பாதிப்பட்ட அவ்வயோதிபப் பெண் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## தென்மராட்சியில் வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவுப்பட்டியல்

சாவகச்சேரி விசேட நிருபர்



யாழ். தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் வீட்டுத்திட்ட தேவைப்பாடுடைய பயனாளிகளின் தெரிவுப்பட்டியல் அப்பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினூடாக தென்மராட்சி பிரதேசத்துக்கு ஒரு மில்லியன் பெறுமதியில் 40 வீடுகளும் 0.6 மில்லியன் பெறுமதியில் 16 வீடுகளும் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இதற்காக 56 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை, பொருளாதார நிலைமை, 60 வயதுக்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், இடம்பெயர்வு, யுத்தத்தால் அங்கத்தவர்களை இழந்த குடும்பங்கள், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளை அங்கத்தவர்களாக கொண்ட குடும்பங்கள் வீட்டுத்திட்டத்துக்காக முன்னுரிமைப் படுத்தப்பட்டன.

இந்நிலையில், புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் தெரிவுப்பட்டியல் தயார் செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக, தென்மராட்சி பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வேலூர் தொழில்நுட்பப் பல்கலையுடன் யாழ். பல்கலைக்கழகம் ஒப்பந்தம் கைச்சாத்து



யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்துக்கும் இந்தியாவின் வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் கல்விசார் கூட்டுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கடந்த திங்கட்கிழமை (05) கைச்சாத்தாகியது. பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகியது. யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீ ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். இந்திய துணைத் தூதரக அதிகாரிகளான ஸ்ரீ மனோஜ்குமார், ஸ்ரீ நாகராஜன் ராமஸ்சுவாமி, பல்கலைக்கழக பதிவாளர் வி.காண்டீபன், பொறியியல் பீடாதிபதி கே.பிரபாகரன், முன்னாள் பீடாதிபதியும் பேராசிரியருமான ஏ.அற்புதராஜா, குடிசார் பொறியியல் துறைத் தலைவர் கலாநிதி பி.கேதீசன் ஆகியோர் இதன்போது கலந்துகொண்டனர். வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் பாடசாலையின் (SCOPE) பீடாதிபதி கலாநிதி கே.ரமேஸ் பாபு, பேராசிரியர் பி.சுவர்ணலதா, சர்வதேச உறவுகளுக்கான உதவிப் பணிப்பாளர் கலாநிதி ஜே.என்.வி.ரகுராம் ஆகியோர் நிகழ்நிலை வாயிலாக இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்த உடன்படிக்கைக்கு அமைய இரண்டு தரப்புகளிலிருந்தும் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பரிமாற்றம், கல்வி, ஆய்வு நடவடிக்கைகளில் கூட்டு முயற்சிகள் போன்றவை கவனம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உருகுணை பல்கலைக்கழகம், வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்துடன் கூட்டு ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் குடிசன தொகை மதிப்பு கருத்தரங்கு



பரந்தன் குறுப் நிருபர்

கிளிநொச்சி மாவட்ட செயலக தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரக் கிளையின் ஏற்பாட்டில் குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அம்மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (06) நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் தொகை மதிப்பு மாவட்ட ஆணையாளருமான றூபவதி கேதீஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கு, எதிர்வரும் 2024ஆம் ஆண்டுக்கான 15ஆவது குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பு நிகழ்ச்சி திட்டத்துக்கான விழிப்புணர்வு செயற்றிட்டமாக அமைந்திருந்தது.

இதன்போது தொகை மதிப்பின் அமைப்பு, தொகை மதிப்பீட்டின் கடமைகள், நிதி ஒதுக்கீடு, காலவரையறை, ஆளணி போன்ற விடயங்கள் தொடர்பாக உரிய அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்பட்டன.

## யாழ். அல்வாயில் சடலம் மீட்பு

நாகர்கோவில் விசேட நிருபர்

யாழ். அல்வாய் வடமத்தி, அல்வாய் மாவிலங்கடி வீதியிலிருந்து வயோதிபரொருவரின் சடலத்தை நேற்று புதன்கிழமை (07) பொலிஸார் மீட்டுள்ளனர்.

வேதார்வளவு, வியாபாரிமூலையைச் சேர்ந்த 81 வயதுடைய வேலுப்பிள்ளை சேதுராமலிங்கம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா, மரண விசாரணை நடத்தியதுடன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து, அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## முல்லைத்தீவில் 1,113 கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணைய் நிவாரணம் வழங்கல்

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு அரசாங்கத்தின் மானிய எரிபொருளான மண்ணெண்ணைய் வழங்கும் நடவடிக்கை நேற்று புதன்கிழமை (07) ஆரம்பிக்கப்பட்டது.

முல்லைத்தீவில் 1,113 கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணைய் நிவாரணம் வழங்கப்படுவதுடன், படகொன்றுக்கு 75 லீற்றர் மண்ணெண்ணைய் கடற்றொழில் அமைச்சினூடாக இலவசமாக வழங்கப்படுகின்றது. இந்நிலையில், முல்லைத்தீவில் சாலை தொடக்கம் கொக்கிளாய் வரையான கரையோரப் பகுதிகளில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணைய் நிவாரணம் வழங்கப்படுகின்றது.

கரைதுறைப்பற்று பிரதேசத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் புதுக்குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் நாயாற்று பிரதேசத்திலும் முல்லைத்தீவு நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணைய் வழங்கப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கடற்றொழில் சம்மேளனத் தலைவர், கடற்றொழில் அமைப்புகளின் தலைவர்கள், கடற்றொழில் அமைச்சரினுடைய இணைப்பாளர்களின் பங்குபற்றுதலுடன் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



## முல்லைத்தீவில் புதையல் தோண்டிய 8 பேர் கைது

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதவாளசிங்கன் குளம் காட்டுப்பகுதியை அண்டி அமைந்துள்ள நாகஞ்சோலை பகுதியில் சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் 8 பேரை கடந்த திங்கட்கிழமை (05) அதிகாலை முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, மேற்படி இடத்துக்குச் சென்று சோதனை நடத்திய அவர்கள், ஸ்கானர் இயந்திரம், 2 மண்வெட்டிகள் மற்றும் பூஜை பொருட்கள் உள்ளிட்ட பொருட்களுடன் இச்சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

முள்ளியவளையின் கணுக்கேணி, பூதன்வயல், நொச்சியாகம, இராஜாங்கனை, சாலிய அசோகபுர, அம்பலாந்தோட்டை, தம்புத்தேகம பிரதேசங்களைச் சேர்ந்தவர்களையே பொலிஸார் கைது செய்துள்ளனர்

# கிழக்கின் குரல்



# மட்டு. அரசாங்க அதிபர் தலைமையில் 15ஆவது குடிசன மதிப்பு கலந்துரையாடல்

(ஏறாவூர் சுழற்சி, புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)




தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ள, 15ஆவது குடிசன வீட்டு வசதிகள் தொகைமதிப்பு தொடர்பில் தெளிவூட்டும் கலந்துரையாடல், செவ்வாய்க்கிழமை (06) மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் தொகைமதிப்பு ஆணையாளருமான திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட புள்ளிவிபரக் கிளையின் புள்ளிவிபரவியலாளர் ரீ.ஜெய்தனனின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், தொகைமதிப்பு கடமைகளில் பிரதி மற்றும் உதவி தொகைமதிப்பு ஆணையாளர்களாக செயற்படவுள்ள பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ் விழிப்புணர்வு கலந்துரையாடலில் 2024ம் ஆண்டு நடைபெறவுள்ள குடிசன வீட்டு வசதிகள் தொகைமதிப்பினை முன்னிட்டு, 2023ம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள கள நடவடிக்கைகள் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் வெளிக்கள முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் எஸ்.எச். மன்சூர் கலந்து கொண்டு கள நடவடிக்கை தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

இம்முறை சனத்தொகை கணக்கெடுப்பு கணினி தொழில்நுட்பத்தின் மூலம் ரெப்லட் கணினிகளைப் பாவித்து செய்யப்பட இருக்கின்றது. இந்த கணக்கெடுப்பானது தற்போதைய பொருளாதார நெருக்கடியான சூழலுக்கு மத்தியிலும் சுமார் 03 பில்லியன் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளதால், மாவட்ட மட்டத்தில் உள்ள நிர்வாக அதிகாரிகளின் ஒத்துழைப்பு இதற்கு மிகவும் இன்றியமையாததாகும் என அவர் தெரிவித்தார்.

இதில் ஈடுபடுத்தப்படவுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களின் கடமைப் பொறுப்புக்கள், இதற்கான நிதி ஒதுக்கீடுகள், இதன் காலவரையறை மற்றும் ஆளணி போன்ற விடயங்கள் தொடர்பாக தெளிவூட்டல் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளரும் மாவட்ட ஒருங்கமைப்பாளருமான ஜெயசம்பத் லியனகே மற்றும் புள்ளிவிபரவியலாளர் சந்தன சுகுன் உட்பட மாவட்டத்தின் உதவி மற்றும் மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# அருட்தந்தை சந்திரா பேர்னாண்டோவின் 35 ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு



(மட்டக்களப்பு விசேட நிருபர்)

சமாதானத்தின் காவலன் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ அடிகளாரின் 35 ஆவது நினைவு தினம் , செவ்வாய்க்கிழமை (06) புளியந்தீவு புனித மரியாள் பேராலய வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் சமாதியில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை கே. ஜெகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மலரஞ்சலி செலுத்தப்பட்டதோடு நினைவு மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு ஆத்ம சாந்தி வேண்டி சர்வமதப் பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

சந்திரா பெர்னாண்டோவிடம் நேரடியாக பணியாற்றியவர்களான மட்டக்களப்பு மாவட்ட காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் கதிர் பாரதிதாசன், பல்சமய ஒன்றியத்தின் பொருளாளர் முகமட் இக்பால், அருட்சகோதரர் ஸ்டீபன் ஆகியோர் தங்கள் சாட்சியங்களை நினைவுரையாக வெளிப்படுத்தினர்.

நிகழ்வில் அருட்சகோதரர்கள், சிவில் சமூக அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

# பழைய இரும்பு பொருட்கள் களஞ்சியசாலையில் தீ

(அட்டாளைச்சேனை குறூப், வாச்சிக்குடா விசேட நிருபர்கள்)



அக்கரைபற்று – அம்பாறை பிரதான வீதியிலுள்ள பழைய இரும்புகள் மற்றும் நானாவித பொருட்களின் பாரிய களஞ்சிய சாலையொன்று செவ்வாய்க்கிழமை காலை தீ அனர்த்தத்துக்குள்ளாகியது.

அக்கரைபற்று மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர், அக்கரைப்பற்று, ஆலயடிவேம்பு, அட்டாளைச்சேனை பிரேதேச சபைகளின் நீர் பவுசர்களின் உதவியைக்கொண்டு இத் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

மாநகர சபையின் ஆணையாளர் எ.ரீ.எம். ராபி, அக்கரைப்பற்று 241 வது இராணுவப்பிரிவின் கேணல் தணிக்க பத்திரத்ன மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி ரீ.பீ.விஜயதுங்க போன்றோர் ஸ்தலத்துக்கு தமது குழுவினருடன் விரைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

பொது மக்களும் இப்பணியில் ஈடுபட்டனர். நீண்டகாலமாக இயங்கிவரும் இந்தக் களஞ்சியசாலை, பழைய இரும்பு மற்றும் நானாவித மின்சார உபகரணங்களை கொள்வனவு செய்து மீள்சுழற்சிக்காக வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கும் களஞ்சிய சாலையாகும்.

வெற்றுப்போத்தல்கள், மின் உபகரணங்கள் இவ்வனர்த்தத்தின் போது வெடித்து சிதறியதையும் காணக்கூடியதாக இருந்தது. இவ்வனர்த்தத்தின் போது அக்கரைப்பற்று அம்பாறை வீதியின் போக்குவரத்து சற்று நேரம் தடைப்பட்டிருந்ததும் குறிப்படத்தக்கது.

# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம்



திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் புதன்கிழமை (07) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கபில அத்துகோரால மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட அரச அதிபர்கள், திணைக்கள அதிகாரிகள் மற்றும் உயர்மட்ட அரச உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் அபிவிருத்திகள் தொடர்பாகவும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

# லொத்தர் சீட்டிழுப்பு மூலம் புடவை வியாபாரம்

(சவளக்கடை குறூப் நிருபர்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மாதாந்த வீட்டு லொத்தர் சீட்டிழுப்பு அதிர்ஷடத்தின் மூலம் பெற்ற இரண்டு இலட்சம் ரூபாய் நிதியினை கொண்டு, தனது வாழ்வாதாரத்தினை விருத்தி செய்வதற்காக சாய்ந்தமருது 09 ஆம் பிரிவைச் சேர்ந்த பயனாளி ஒருவர் புடவை வியாபார தொழில் முயற்சியை ஆரம்பிக்கின்ற நிகழ்வு,சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் செவ்வாய்க்கிழமை (06) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம். ஜாபீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் காணியின் ஒரு பகுதி விடுவிப்பு

(புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் கல்லடி குறூப் நிருபர்கள்)



மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனைஇராணுவ முகாம் அமைந்துள்ள தனியாருக்கு சொந்தமான காணிகள் 32 வருடங்களின் பின்னர் செவ்வாய்க்கிழமை (06) விடுவிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய படையினர் வசம் இருந்த தனியார் காணிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் விடுவிக்கப்பட்டு வந்த நிலையில், அதன் ஒரு கட்டமாக மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் அமைந்திருந்த காணியின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டுள்ளது.

தனியாருக்கு சொந்தமான 8.6 ஏக்கர் காணியே இவ்வாறு கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ ஹெட்டியாராட்சியினால் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்ராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 59 தனிநபர்களுக்கு சொந்தமான காணிகளே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.நவரூபரஞ்ஜினி முகுந்தன், 231ஆவது இராணுவ படைப்பிரிவின் கொமாண்டர் தீலூப பண்டார, கட்டளைத் தளபதி மேஜர் இசுறு சேனாநாயக்க, வாழைச்சேனை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் உள்ளிட்ட காணி உரிமையாளர்கள் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் தலைமையில்

# மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம்



மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில், கிழக்கு மாகாண ஆளுநரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான செந்தில் தொண்டமான், வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், இரா.சாணக்கியன் போன்ற அரசியல் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும், அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியினை வழங்குவது தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் இம் மாவட்டத்தின் விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல் உட்பட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் ஆராயப்பட்டு அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

அத்தோடு மாவட்டத்தின் மேச்சல் தரை மற்றும் மகாவலி தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், அவற்றிற்கான தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கான கலந்துரையாடல் ஒன்றினை எதிர்வரும் 26 ஆந் திகதி நிகழ்த்துவதற்கான தீர்மானமும் எட்டப்பட்டிருந்தது.

இக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பணிக்குழுவினர் உள்ளிட்ட உயரதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி.நவரூபரஞ்ஜனி முகுந்தன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள் என பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# மீனவர்களின் தொழில் பாதிப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் கொட்டியாரக்குடாக் கடலில் பலமான காற்று வீசுவதனால் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள், அன்றாட தொழிலுக்கு செல்ல இயலாது பெரும் முடக்கத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

அன்றாட ஜீவனோபாய தொழிலாக மீன்பிடியில் ஈடுபடும் தக்வாநகர், சம்பூர், பஹ்ரியா நகர் மற்றும் கடற்கரைச்சேனை உள்ளிட்ட கிராமங்களில் வசிக்கும் மீனவர்களே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மக்கள் கடல் உணவுகளை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமப்படுவதுடன், பிற இடங்களில் இருந்து கொண்டுவரப்படும் மீன்களும் மிக அதிகரித்த விலையில் மூதூர் மீன் சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

# மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் நடமாடும் சேவை

(ஏறாவூர் சுழற்சி நிருபர்)

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மண்முனை வடக்கு பிரதேச செயலகம் மற்றும் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பன இணைந்து நடாத்துகின்ற ஒரு நாள் நடமாடும் சேவை இன்று (08) கொக்குவில் விக்னேஷ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையில் கொக்குவில், பனிச்சையடி, சத்துருக்கொண்டான் மற்றும் சின்ன ஊரணி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு, தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியுமென, மட்டக்களப்பு வடக்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஆர். ஸியாஉல் ஹக் தெரிவித்தார்.

இந் நடமாடும் சேவையின் போது, சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலம் மாதாந்த உதவிக் கொடுப்பனவுக்கான விண்ணப்பங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் உட்பட பல சேவைகள் வழங்கப்படவுள்ளதோடு, இலவச வெளிநோயாளர் பிரிவுச் சேவை, சுதேச மருத்துவச் சேவை மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான மருத்துவச் சான்றிதழ் வழங்கல் போன்ற சேவைகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இயற்கையை பாதுகாப்பது ஒவ்வொருவரினதும் கடமை

அக்கரைப்பற்று வனஇலாகா பிராந்திய அதிகாரி

(ஒலுவில் விசேட நிருபர்)

ஒரு நாட்டின் நிலையான அபிவிருத்திக்கு இயற்கையை பாதுகாப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகுமென, அக்கரைப்பற்று வனஇலாகா பிராந்திய வன அதிகாரி ஏ.எல். இல்யாஸ் தெரிவித்தார்.

சர்வதேச சுற்றாடல் தினத்தையொட்டி "பிளாஸ்டிக் மாசுபடுத்தலை கட்டுப்படுத்தல்" எனும் தொனிப்பொருளில் பாலமுனை விவசாய கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு கருத்தரங்கும் மர நடுகை நிகழ்வும் திங்கட்கிழமை (05) பாலமுனை விவசாய கல்லூரியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

பாலமுனை விவசாய கல்லூரியின் அதிபர் ஏ.எஸ்.எம். ஹரீஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது நாட்டின் சூழலை பாதுகாத்து எதிர்கால சந்ததினருக்கு சிறந்த நாடொன்றை கட்டியெழுப்புவதற்கு நாம் ஒவ்வொருவரும் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

எமது பிரதேசத்தில் சட்டவிரோத காடழிப்பு, சமூக விரோத செயல்கள் என்பன அதிகரித்து காணப்படுகின்றன. இதனால் எமது பிரதேசத்தின் இயற்கை வளங்கள் அழிந்து வருகின்றன. இதனை தடுப்பதற்கு நாம் எல்லோரும் ஒன்றினைந்து செயற்பட வேண்டுமென்றார்.

# ஓய்வு பெற்று செல்லும் தாதிய உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி, தாதிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச்செல்லும் தாதிய உத்தியோகத்தர்களான எம்.ஏ.ஆப்தீன், ஜரினா சாதீக் ஆகியோரை பாராட்டிக் கௌரவிக்கும் பிரியாவிடை நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தாதிய பரிபாலகர் பி.ரி.நௌபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

ஓய்வு பெற்றுச்செல்லும் தாதியர்கள் இருவரும் அரச சேவையில் 30 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்வதோடு, அதிதிகளினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் கணக்காளர் எம்.ஆர். நஸிமுல் ஹக், நிருவாக உத்தியோகத்தர் கே. விஜயகுமார், தாதிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




# மலையக மக்களின் போசாக்கு, தற்சார்பு பொருளாதார பிரச்சினைகளுக்கு பிரான்ஸ் அரசாங்கம் உதவவேண்டும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

மலையக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், அவர்கள் எதிர்நோக்கும் போசாக்கு மற்றும் தற்சார்பு பொருளாதார பிரச்சினைகளுக்கு பிரான்ஸ் அரசாங்கம் தனது பங்களிப்பை செய்ய முன்வர வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டு தூதுவர் ஜோன் போன்ஷுவா பெக்டே, அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி காந்தி சௌந்தர்ராஜன் ஆகியோர் கொண்ட குழுவினரை நேற்று கொழும்பில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.



இதன்போது, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிக்கையில்,

இந்த நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் அரசாங்கம் செய்து வரும் உதவிகளையும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் என்ற வகையில் மக்களின் சார்பாக நன்றிக் கூற கடமைப்பட்டுள்ளேன்.

இதேவேளை தாங்கள் எமது மலையக மக்களின் அபிவிருத்திக்கும் அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் உதவவேண்டும். மலையகப் பகுதிகளில் பிரான்ஸ் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், போசாக்கு அபிவிருத்தி போன்றவற்றில் பிரான்ஸ் தூதுவர் என்ற வகையில் தங்களின் அரசின் வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டும். மேலும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரான்ஸ் அரசாங்கம் எமது நாட்டின் முதலீடுகளை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும். இதுதொடர்பாக தான் பிரான்ஸ் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதுடன் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக பெருந்தோட்டப் பகுதிகளில் பால் உற்பத்தியை அதிகரித்தல், சிறு மற்றும் நடுத்தர பால் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், நீர்வளங்கள் கொள்கை மறுசீரமைப்பில் தொழில்நுட்ப மற்றும் திறன் சார் ரீதியான உதவிகளை வழங்க இணக்கத்தை தன்னிடம் தெரிவித்ததாகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# உதவி இந்தியத் தூதுவராலயத்தின் ஆதரவுடன் சுற்றாடல் தினம்



(அக்குறணை குறூப் நிருபர்)

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கண்டி ஸ்ரீ தலதா மாளிகை சுற்றாடலில், கண்டி உதவி இந்தியத் தூதுவராலயத்தின் ஆதரவுடன் சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் கண்டி உதவி இந்தியத் தூதுவர் டாக்டர் எஸ்.ஆதிரா, ஆதிவாசிகள் தலைவர் ஊருவருகே வன்னியலத்தோ உட்பட பலர் கலந்து கொண்டனர். பாடசாலை மாணவர்களுக்கிடையே பல்வேறு போட்டி நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. மாணவர்களின் விழிப்புணர்வு நிகழ்வுகளும் இடம்பெற்றன. 1500 ற்கும் மேற்பட்டவர்களுக்கு மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

# சுற்றுச்சூழல் வழக்குகளை துரிதப்படுத்த முறையான திட்டம் அவசியம்



(எம்.ஏ.அமீனுல்லா)

சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பான வழக்குகளை துரிதப்படுத்த முறையான திட்டமொன்று வகுக்கப்படுவது காலத்தின் கட்டாய தேவையென வேடுவ தலைவர் ஊருவருகே வன்னியலே எத்தோ வலியுறுத்தியுள்ளார்.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கண்டி தலதா மாளிகையில் நேற்றுமுன்தினம் (06) நடைபெற்ற சுற்றாடல் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பான நீதிமன்ற வழக்கு விசாரணைகள் நிறைவுபெற்று தீர்ப்புகள் அறிவிக்கப்படுவதற்கு நீண்டகாலம் எடுக்கின்றது. அவ்வாறு கால தாமதமான தீர்ப்புகள் கிடைக்கும் பொழுது, பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு எல்லாம் இழக்கப்பட்டு விடுகின்றது.

பொல்லேபெத்த ரம்பகன் ஓயாவின் 7500 ஏக்கர் பரப்பளவில் இடம்பெற்று வரும் சுற்றாடல் அழிவு தொடர்பில் தான் சுற்றாடல் நீதி நிலையத்திற்கு சட்டப்பூர்வமாக அறிவித்தேன்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு தற்போதைய சட்டங்கள் போதுமானதாக இருந்தாலும், அச்சட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமை பெரும் பிரச்சினையாக உள்ளது. ஜெனீவாவில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் மாநாட்டில் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தில் தற்போது உலக நாடுகள் கவனம் செலுத்தி வருகின்றன.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், சுவிட்ஸர்லாந்தில் கடுமையான சட்டங்கள் உள்ளன, அங்கு மரத்தை நாடாமல் மரத்தை வெட்ட அனுமதி இல்லை .

சுற்றுச்சூழலை சீர்குலைப்பதால் இயற்கை சீற்றமடைந்து பல விதமான பேரிடர்களை சந்திக்க நேரிடுகிறது, வெள்ளம், வறட்சி, கொரோனா, டெங்கு போன்றவை சில உதாரணங்களாகும். இப்படியாக ஒவ்வொரு பிறந்தநாளுக்கும் ஒரு மரக் கன்றை நட்டு வளர்த்து பராமரியுங்கள். அதுவே சுற்றுச்சூழலை நேசிக்கும் உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தும் என்றார்.

# பிறந்து 5 நாட்களேயான குழந்தையை நண்பியிடம் தந்திரமாக கையளித்து தப்பிச் சென்ற தாய்

(அக்குறணை குறூப் நிருபர்)



கலேவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கைக்குழந்தையொன்றை தனது நண்பியிடம் தந்திரமாக கொடுத்து விட்டு தாயொருவர் தப்பிச் சென்றுள்ளார்.

இதுதொடர்பில் கைக்குழந்தையை பெற்ற யுவதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவுசெய்துள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

புத்தளம் வைத்தியசாலையில் குழந்தையின் தாய்க்கு பிரசவம் நடந்துள்ளது. ஐந்து நாட்களின் பின்னர் அவர் கலேவெல பகுதியிலுள்ள நண்பியை தொடர்பு கொண்டு கலேவெலவில் ஹோட்டல் அறையொன்றை வாடகைக்கு எடுத்துத் தரும்படியும் கேட்டுள்ளார்.

அதன்படி இருவரும் ஹோட்டல் அறையை வாடகைக்கு பெற்றுக் கொண்டு கைக்குழந்தையுடன் அங்கு வந்து தங்கியுள்ளனர். நேற்றுமுன்தினம் (6) கைக்குழந்தைக்கு தாய், பால் கொடுத்து விட்டு அவசர தேவையின் நிமித்தம் சற்று வெளியே சென்று வருவதாகவும் அதுவரை குழந்தையை பார்த்துக் கொள்ளுமாறு நண்பியிடம் கூறிச் சென்றுள்ளார். எனினும் அவர் மாலையாகியும் ஹோட்டல் அறைக்கு வரவில்லை. இதனால் யுவதி கைக்குழந்தையுடன் கலேவெல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். குழந்தையின் தாய் வெலிமட மொரகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது யுவதி என தெரியவந்துள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கலஹாவில் தீ விபத்து

(அக்குறணை குறூப் நிருபர்)

கலஹா, தெல்தோட்டைப் பிரதேசத்திலுள்ள உணவகமொன்றில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி உணவகத்தில் உணவு தயாரித்துக் கொண்டிருக்கும் போதே திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்த போதே நால்வர் காயமடைந்து கலஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஒருவர் மேலதிக சிகிச்சைக்கான கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

எரிவாயு சிலிண்டரில் கசிவு ஏற்பட்டதால் இச்சம்பவம் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் மரம் முறிந்து வீழ்ந்து போக்குவரத்து பாதிப்பு

## குளவிக் கூடுகளால் மரத்தை அகற்றுவதில் தாமதம்

(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் முதல் கடும் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஹற்றன் – நுவரெலியா பிரதான வீதியில் பெரும் போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது.

ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் லிந்துலை மட்டுக்கலை பிரதேசங்களுக்கிடையில் நேற்று (7) காலை பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்தமையால் வீதியின் இருபுறமும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது. சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் போக்குவரத்து தடை நீடித்தது. அதுமட்டுமின்றி குறுக்கே விழுந்த மரத்தில் பெரிய குளவிக் கூடுகள் இருந்தமையால், மரம் வெட்டும் பணி சற்று தாமதமானது. லிந்துலை பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து மரத்தில் இருந்த குளவிகளை வெளியேற்றி மரத்தை வெட்டி அகற்ற நடவடிக்கை எடுத்தனர். கடும் மழைக்கு மத்தியில் வீதியின் குறுக்கே விழுந்த மரத்தை வெட்டி அகற்றும் பணியில் லிந்துலை பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் ஈடுபட்டனர்.

இதனால் நுவரெலியா வீதியூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து மரத்தை அகற்றும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டது.





பண்டாரவளை, அருள்மிகு ஸ்ரீ சிவசுப்ரமணியர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ சித்திரத் தேர் நகர் வலத் திருவிழா நேற்று 7 நடைபெற்றது. இதன்போது பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ், சமிந்த ஜயசிறி உள்ளிட்ட பிரமுகர்கள், அறங்காவலர்கள கலந்துகொண்டனர். பறவைக் காவடி,கலை கலாசார ஊர்வலங்கள், சித்திரத்தேர் நகர்வலம் வருதல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. இந் நிகழ்வுகளை படங்களில் காணலாம். (படம் .ஊவா சுழற்சி நிருபர்)

# ரோந்தில் ஈடுபட்ட பொலிஸ் ஜீப் விபத்து; மூவர் படுகாயம்

(தலவாக்கலை நிருபர்)



நோர்வூட் பொகவந்தலாவை பிரதான வீதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொலிஸ் ஜீப் வண்டியொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால் இதில் பயணம் செய்த மூன்று பொலிஸார் படுகாயமடைந்துள்ளனர். நோர்வூட் பொகவந்தலாவை பிரதான வீதியில் தேயிலைத்தொழிற்சாலைக்கு அண்மையிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

நோர்வூட் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் இரவு ரோந்து சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே விபத்து இடம்பெற்றுள்ளது.

மூன்று பொலிஸாரும் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# வலப்பனையில் தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம்



சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நுவரெலியா வலப்பனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட வலப்பனை நகரில் சுற்று சூழல் பாதுகாப்பு மற்றும் நகரை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம் பிரதேச செயலாளர் லிந்தகும்பர தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது வலப்பனை பிரதேச செயலகம், பிரதேசசபை, மற்றும் நகரின் ஒன்றிணைந்த வர்த்தக சங்கத்தினர் உள்ளிட்ட பலரின் பங்குப்பற்றலுடன் வலப்பனை நகரை தூய்மைப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. சூழல் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆ.ரமேஸ்

# தேயிலை கொழுந்து பறிக்கும் போட்டி

தரமான பச்சை தேயிலை கொழுந்து பறிக்கும் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வை நுவரெலியா ஹொரன பிலான்டேசனுக்கு உரித்தான 12 தோட்டங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு இடையே நடைபெற்றது. இப்போட்டியில் முதலிடத்தைப் பெற்று கொண்ட சாமிமலை ஹொரன பிளான்டேசனுக்கு உரித்தான ஒல்ட்டன் தோட்டத்தைச் சேர்ந்த என்.விக்னேஸ்வரிக்கு ஒரு பவுண் தங்க குற்றியும் ஒரு இலட்சம் ரூபாய் பணமும் பரிசாக தோட்ட நிர்வாகம் வழங்கியது, இரண்டாமிடத்தைப் பெற்ற சாமிமலை மாநெலி தோட்டத்தைச் சேர்ந்த ஜீ.பெரியம்மாவுக்கு அரை பவுண் தங்கம், 75 ஆயிரம் ரொக்கப்பணம் பரிசாக தோட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்டது.

# நவீன தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பயன்பாட்டில் இந்தியா உச்சம் பெறும்

## தொழில்நுட்பவியலாளர்கள் எதிர்வு

நவீன மற்றும் நுணுக்கமான தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் புதிய டிஜிட்டல் கண்டு பிடிப்புகளில் இந்தியாவின் வேகமான வளர்ச்சி, விரைவிலேயே டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் உச்ச வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஒன்றாக இந்தியாவை மாற்றி அமைக்கும் என இந்திய தொழில்நுட்பவியலாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

மோடி அரசு அறிமுகம் செய்த டிஜிட்டல் இந்தியா மற்றும் மேக்இன் இந்தியா ஆசிய திட்டங்கள் குறுகிய காலத்திலேயே சாதாரண இந்தியனும் உணரும் வகையில் வளர்ச்சி பெற்றுவிட்டதாகவும், பணத் தாளுக்குப் பதிலாக பண அட்டைப் பயன்பாடு சமூகத்தின் அடி மட்டத்தில் புழங்கும் ஒன்றாக மாறிவிட்டதாகவும் இவர்கள் உதாரணமாக சுட்டிக் காட்டுகின்றனர்.

தற்போது இந்தியாவில் இணைய பயன்பாடு மற்றும் டிஜிட்டல் தொடர்பாடல் வேகமாக வளர்ச்சி பெற்று வருவதோடு 70 கோடிக்கும் அதிகமானோர் இணையத்தை பயன்படுத்தி வருகின்றனர். ஸ்மார்ட் கைபேசிகளின் வருகை இணைய பாவனையை மக்களிடம் எளிதாக்கி இருக்கிறது. தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பாவனையில் எந்தெந்த நாடுகள் முன்னணி வகிக்கின்றனவோ அவையே 21ஆம் நூற்றாண்டை வசப்படுத்தும் என்ற வகையில் இந்தியாவும் விரைவில் அந்நிலையை அடையும் என இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மேலும் புதிய தொழில்முயற்சிகள், நவீன தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் பயன்பாடுகளுடன் நடத்தப்படுவது அதிகமாகி வருவதை சுட்டிக்காட்டும் தொழில்நுட்பவியலாளர்கள் இது எதிர்கால இந்தியாவை தொழில்நுட்ப செயற்பாட்டுக் களமாக மாற்றி அமைக்கும் என்றும் ஒருங்கிணைந்த கொடுப்பனவு, நடமாடும் பணப்பை என்பன பொதுவான பயன்பாட்டுக்கு வரும் என்றும் எதிர்வு கூறுகின்றனர்.

# எதிர்கால நவீன யுத்தத்துக்கு சீனா தன்னை தயார்படுத்த வேண்டும்

## சீன இராணுவ ஜெனரலின் அறிக்கையில் சுட்டிக்காட்டு

சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முறுகல்நிலை ஒரு கட்டத்தில் யுத்தமாக வெடிக்கும் வாய்ப்பு இருப்பதாக எச்சரிக்கை விடுத்திருக்கும் சீன இராணுவ ஜெனரலான வாங்ஹைஜிவ், அவ்வாறான ஒரு யுத்தம் வழமையான இரு தரப்பு படையினருக்கு இடையிலான யுத்தமாகவும் படை வீரர்களின் எண்ணிக்கையை மையப்படுத்தியதாகவும் இருக்காது என்றும் கூறியுள்ளார்.

நவீன யுத்தம் என்பது சைபர் போர் முறையாகவும், உயர் தொழில்நுட்பம், விஞ்ஞானம், பொருளாதாரம் மற்றும் நாட்டின் உறுதித்தன்மை என்பனவற்றை உள்ளடக்கியதாக அமையும் என்றும் சீனாவுக்கு இன்னும் முற்றிலும் கைவராத வெப் 3.0 தொழில்நுட்பம், குவாண்டம் கணிப்பு, செயற்கைக்கோள் தொடர்பான மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாடு என்பவற்றை நவீன யுத்தம் கொண்டிருக்குமென இவர் நவீன யுத்தமும் சீனாவும் என்ற பொருள் பற்றிய ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சீன இராணுவம் எதிர்கால யுத்தத்துக்கு தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும். தொடர்ச்சியாக பயிற்சிகளை மேற்கொள்ளவும் சமாதானப் படைகளின் அங்கம் வகிக்கவும் வேண்டும். சீனா தன் இராணுவத்துக்கு புறம்பான விஞ்ஞானம், பொருளாதாரம், தொழில்நுட்பத்திறன் என்பனவற்றிலும் தேசிய வளத் திறனிலும் வளர்ச்சி காண்பது முக்கியம். ஏனெனில் ஒரு யுத்தம் என்பது போர்க்களத்தில் மட்டும் மட்டுப்படப் போவதில்லை. சைபர், தொழில்நுட்பம் மற்றும் நிதிமுறைமைகளுக்கும் அது பரவும் வாய்ப்பு இருக்கிறது என்று இந்த அறிக்கையில் ஜெனரல் வாங்ஹைஜிங் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் ஆதரவு இல்லாததால்தான் அமெரிக்கா வியட்நாம் யுத்தத்தை முடித்துக் கொள்ள வேண்டியிருந்ததாகவும் 1990 வளைகுடா யுத்தம் வரை அமெரிக்க இராணுவம் வெளிநாடொன்றில் போர் புரியவில்லை என்பதையும் எடுத்துக் காட்டியுள்ள இந்த அறிக்கை, யுத்தமொன்றுக்கு செல்வதற்கு முன் அந்நாட்டின் மக்கள் அந்த யுத்தத்துக்கு ஆதரவாக இருக்கிறார்களா என்பது முக்கியம் என்றும் இராணுவரீதியாக தைவானை சீனாவுடன் இணைத்துக் கொள்வதற்கு 33 சதவீதமான சீனர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. தைவானை பணியவைக்க முழு அளவிலான யுத்தம் நடத்தப்படக் கூடாது என்பதையே பெரும்பாலான சீனர்கள் விரும்புகின்றனர் என்பதை கருத்துக் கணிப்புகள் தெரிவித்துள்ளன.

யுத்தமொன்றின் போது எதிரி நாட்டு மக்கள் மத்தியில் 'வெற்றி நிச்சயமல்ல' என்ற மனநிலையை ஏற்படுத்த நவீன யுத்தத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

# சவர்க்கார உற்பத்தி; மன்னாரில் 32 பேருக்கு அனுமதிப்பத்திரம் வழங்க ஏற்பாடு



**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் மெசிடோ நிறுவனத்தினால் நடத்தப்பட்ட சவர்க்கார உற்பத்திப் பயிற்சியில் தெரிவு செய்யப்பட்ட 32 பேருக்கு சவர்க்கார உற்பத்தியை மேற்கொள்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான பயிற்சியுடன் கூடிய கலந்துரையாடல், மன்னார் மாவட்ட செயலக ஜெய்க்கா மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (06) மெசிடோ நிறுவனப் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்றது.

சவர்க்கார உற்பத்தியில் ஈடுபடவுள்ளவர்களுக்கான பயிற்சியை தொழில் அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலய அதிகாரி வழங்கினார்.

சவர்க்கார உற்பத்தியாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையை தேசிய அபிவிருத்தி உற்பத்தி சபை முன்னெடுத்துள்ளது.



யாழ். தென்மராட்சி, வரணி மாசேரி திருவருள்மிகு புராதன குருநாதர் ஆலய மணவாளக் கோலத் திருவிழாவும் சேக்கிழார் குருபூஜையும் அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.
(படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)

## வேகமாக வாகனம் செலுத்திய இளைஞருக்கு விளக்கமறியல்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், மானிப்பாய் பிரதேசத்தில் வேகமாக வாகனத்தைச் செலுத்தி சாகசம் காட்டி, வீதியில் போத்தலொன்றை உடைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞரை நாளை (09) வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சன நடமாட்டம் அதிகளவாக காணப்பட்டு, போக்குவரத்து நெரிசல் காணப்பட்ட மானிப்பாயில் கடந்த திங்கட்கிழமை மேற்படி இளைஞர் இந்தச் சம்பவத்தை புரிந்தமை தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் இளைஞரை கைது செய்து, நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (06) முன்னிலைப்படுத்திய போதே, இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது.


# கேள்விக்கான அழைப்பு

## மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

### வடமத்திய மாகாணம்

01. வடமத்திய மாகாண சபையின் சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் கீழ்க்காணும் கொள்வனவிற்காக தகைமையும் தகுதியுமுடைய கேள்விதாரர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி சமர்ப்பிக்கும் முறைமையில் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களுக்கு பிரதம கணக்காளர் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், பண்டாரநாயக்க மாவத்த, அநுராதபுரம் (025-2050718/ 071-2126088) இடம் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், கேள்வி ஆவணங்களை மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு வருகைதந்து இலவசமாகப் பரீசித்துப் பார்க்கலாம்.

03. மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்னர் 2023.07.04 வரை மு.ப. 9.00 இற்கும் பி.ப. 3.00 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குள் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை பெற்றுக்கொள்ள முடிவதுடன் மாகாண சுகாதார சேவைத் திணைக்கள உத்தியோகபூர்வ இணையதளமான www.pdhsncp.lk மூலமும் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

| தொடர் இல. | வேலை பற்றிய விபரம் மற்றும் இலக்கம் | நிதித் தன்மை | அளவு | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூ) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|---|
| 01 | supply & installation of 01 No of High End Laparos copy system | PSSP | 01 | 308,000.00 | 7,000.00 |

04. கேள்விகள் நகல் பிரதியுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வேறுவேறாக கடித உறையில் இட்டு அவற்றை ஒரு உறையில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'மெதிரிகிரிய வைத்தியசாலைக்காக Laparoscopy இயந்திரத்தை பெற்றுக் கொள்ளல்' என்று குறிப்பிட்டு 2023.07.05ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், பண்டாரநாயக்க மாவத்த, அநுராதபுரம் என்ற முகவரிக்கு புதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிறுவனத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் இவ் வேளையில் சமுகமளித்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

05. சகல கேள்வியுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்குச் சமமான இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் இருந்து விநியோகிக்கப்பட்ட 2023.07.05 முதல் 2023.12.31ம் திகதி வரை செல்லுபடியாகும் நிபந்தனையற்ற கேள்விப் பிணையொன்றை 'மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் - வட மத்திய மாகாணம்' என்ற பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்/ மாகாண சுகாதார சேவைப் பணிப்பளார்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்.**
**2023.06.07**

# செலான் வங்கி பீ.எல்.சீ.

(2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.O.9 ன் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04 ம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ. இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990 ஆம் ஆண்டின் 4 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ம் பிரிவின் கீழ் 2023.03.28 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது:
கிளை : கம்பஹா
கணக்கு இலக்கம் : 0110-35395997-001
(2007 ம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம்: P.Q.9 கீழ் பதிவு செய்யப்பட்ட) செலான் வங்கி பீ.எல்.சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு கே.டி.ரீ.கே. கழுஆரச்சி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016 மார்ச் 18ம் திகதியிடப்பட்ட 1286ம் இலக்க பிணைமுறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.ஏ.ஆர்.ஜே. வெல்லப்பிளி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018 மே 31ம் திகதியிடப்பட்ட 1563, 1562 மற்றும் 1561ம் இலக்க பிணைமுறிகளின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவரான/அடகு வைத்தவரான" 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு இலக்கம் PV 80020 இன் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கல்கிசையில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள அபூர்வா வீ (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்தினால் மற்றும் ஜா-எலயைச் சேர்ந்த கல்கந்தகே நலிந்த பிரசாத் பெரேரா என்பவரால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணைமுறிகளின் மீது பெறப்பட்ட தவணைக் கடன் வசதிக்காக 2023 ஜனவரி 27ம் திகதி வரை அசல் மற்றும் வட்டித் தொகையாக பதினைந்து மில்லியன் முந்நூற்று எண்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று ஒன்பது ரூபா அறுபத்திரண்டு சதத் (ரூ.15,389,709.62) தொகையை மற்றும் 2023 ஜனவரி 28ம் திகதி தொடக்கம் பத்து மில்லியன் இருநூறாயிரம் ரூபா (ரூ.10,200,000.00) தொகை மீது பதினெட்டு வீத (18%) வருடாந்த வட்டியுடன் சேர்த்து செலான் வங்கி பீ.எல்.சீ க்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படி தொகையான பதினைந்து மில்லியன் முந்நூற்று எண்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று ஒன்பது ரூபா அறுபத்திரண்டு சதத் (ரூ.15,389,709.62) தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2023 ஜனவரி 28ம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை மேல் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித் தொகையையும், விளம்பர செலவுகளையும், மற்றும் மேற்படி சட்டத்தின் 13 ம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் ஏனைய கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீ யிடம் மேற்படி 1286, 1563, 1562 மற்றும் 1561ம் இலக்க பிணை முறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் அதன் வளாகங்கள் உத்தரவு பெற்ற ஏலதாரர் திருமதி. சந்திமா கமகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் 1990 ஆம் ஆண்டின் 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

**மேற் குறிப்பிடப்பட்ட முதலாவது ஆதன அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் கம்பஹா காணி பதிவாளர் பிரிவில் அலுத்குரு கோரளையின் ராகம் பத்துவில் கம்பஹா பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் 218A மாகவிட்ட தெற்கு கிராம சேவகர் பிரிவிற்குள் மாகவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள "வலவ்வத்த மறுபெயர் கஹட்டகஹவத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான ஏ.ஏ.பீ.ஜே. பெரேரா என்பவரால் 2014.05.07ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 3287ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 1 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள் பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: ஆர்.ஜே.கே.நிஷாந்த மற்றும் எஸ்.ஏ.பீ. ஷாந்தினி என்பவர்களின் காணி கிழக்கு: 1214ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 2, 6 மற்றும் 4 தெற்கு: 3285ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 10 மேற்கு: லின்டன் பாயோ என்பவரின் காணி ஆகிய எல்லைகளைக் கொண்ட லொட் 1 எனக் காட்டப்படும் காணியின் பரப்பளவானது பதினைந்து பேர்ச் (ஏ.0-றூ.0-பே.15) ஆகும்.

மேற்குறித்த காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான ஏ.பீ.ஜே. பெரேரா என்பவரால் 2022.10.22ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 1214ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 3 என பிரித்தொதுக்கப்பட்ட காணித்துண்டின் மீள் அளவையாகும்.

அத்தோடு குறித்த 1214ம் இலக்க நிலவரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 1184ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 3 மற்றும் லொட் 6 (10 அடி அகலமான பாதை) மீதான வழியுரித்துடன் சேர்த்து ஆகும்:

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு கே.டி.ரீ.கே. கழுஆரச்சி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016 மார்ச் 18ம் திகதியிடப்பட்ட 1286ம் இலக்க பிணைமுறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.ஏ.ஆர்.ஜே. வெல்லப்பிளி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018 மே 31ம் திகதியிடப்பட்ட 1563ம் இலக்க பிணைமுறி ஆகிய பிணைமுறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**மேற் குறிப்பிடப்பட்ட இரண்டாவது ஆதன அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் கம்பஹா காணி பதிவாளர் பிரிவில் அலுத்குரு கோரளையின் தாசிய பத்துவில் மினுவங்கொட பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் 138/1, மதுருவிட்ட கிராம சேவகர் பிரிவிற்குள் மதுருவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள "மீகஹவத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான ஏ.ஏ.பீ.ஜே. பெரேரா என்பவரால் 2005.07.16ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 1836ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 1 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள மரங்கள்,பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். எல்லைகளாவன: வடக்கு: 1088P எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் F கிழக்கு: பாதை மற்றும் 1088P எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் H மற்றும் I தெற்கு: கந்தார எல மேற்கு: 1088P எனும் இலக்க நில வரைபடத்தின் காணித்துண்டு F ஆகிய எல்லைகளைக் கொண்ட லொட் 1 எனக் காட்டப்படும் காணியின் பரப்பளவானது ஒரு றூட் இரண்டு புள்ளி ஐந்து பேர்ச் (ஏ.0-றூ.1-பே.2.5) ஆகும்.

(மேற்குறித்த காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எம்.எஸ். பெரேரா என்பவரால் 1960.07.23ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 1088P எனும் இலக்க நில வரைபடத்தின் லொட்G என பிரித்தொதுக்கப்பட்ட காணித்துண்டின் மீள் அளவையாகும் என்பதோடு குறித்த லொட் G இன் பரப்பளவு ஒரு றூட் மற்றும் இரண்டு புள்ளி ஐந்து பேர்ச் ஆகும்)

அத்தோடு உத்தரவு பெற்ற நில அளவையாளரான எம்.எஸ். பெரேரா என்பவரால் 1960.07.23ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 1088ம் எனும் இலக்க நில வரைபடத்தில் பிரித்தொதுக்கப்பட்ட லொட் 1 இன் பொதுவான வழியுரித்துடன் சேர்த்து ஆகும்.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.ஏ.ஆர்.ஜே. வெல்லப்பிளி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018 மே 31ம் திகதியிடப்பட்ட 1562ம் இலக்க பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**மேற் குறிப்பிடப்பட்ட மூன்றாவது ஆதன அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் கம்பஹா காணி பதிவாளர் பிரிவில் அலுத்குரு கோரளையின் ராகம் பத்துவில் கம்பஹா பிரதேச சபை எல்லையில் கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் இல. 217, மாபிம கிராம சேவகர் பிரிவிற்குள் மாபிம கிராமத்தில் அமைந்துள்ள "பெலிகஹவத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில ஏ.ஏ.பீ.ஜே. பெரேரா என்பவரால் 2017.12.08ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 4038ம் இலக்க நில வரைபடத்தின் அளவையாளரான லொட் 1 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள மரங்கள்,பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: நாலக விஜேசூரிய என்பவரின் காணி கிழக்கு: பி.ச. பாதை தெற்கு: சுமித் குமார என்பவரின் காணி மேற்கு: எஸ்.ஏ. ஹேமபால என்பவரின் காணி ஆகிய எல்லைகளைக் கொண்ட லொட் 1 எனக் காட்டப்படும் காணியின் பரப்பளவானது பதினான்கு புள்ளி ஆறு பேர்ச் (ஏ.0-றூ.0-பே.14.6) ஆகும்.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.ஏ.ஆர்.ஜே. வெல்லப்பிளி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018 மே 31ம் திகதியிடப்பட்ட 1561ம் இலக்க பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**(திருமதி) வீ.ஏ. பரணகம**
**சட்டத்தரணி,**
**உதவிப் பொது முகாமையாளர் சட்டம்**




# விலைமனுக்களுக்கான அழைப்பு (NCB)

## குளிர் அறை பழுதுபார்த்தலின் பெறுகை கொழும்பு 10, தேசிய எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம்

1. குளிர் அறை பழுதுபார்த்தலின் பெறுகைக்காக தகுதியுடைய வழங்குநர்களிடம் இருந்து பி.பெ.கு. (பிராந்திய பெறுகைக் குழு) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
2. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 10, டி சேரம் பிளேஸ், தேசிய பாலியல் நோய்/ எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு அலுவலக நேரங்களில் கீழ் முகவரி இடப்பட்ட அலுவலகத்தில் விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.
3. ஒவ்வொரு கூறுக்காகவும் 2,000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து 2023.06.08 ஆம் திகதி தொடக்கம் 2023.06.27 ஆம் திகதி வரை திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெற முடியும். கட்டணம் ரொக்கப்பணமாக இருத்தல் வேண்டும்.
4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட அசல் மற்றும் ஒரு பிரதியிலான அனைத்து விலைமனுக்களையும் வெற்று கடித உறையில் இட்டு விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன் 2023 ஜூன் 28 ஆம் திகதி மு.ப. 10.30 க்கு தேசிய எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம், 29, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது A/O அறையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்ட உருப்படியின் பெயருடன் "குளிர் அறை பழுதுபார்த்தலுக்கான கூறுவிலை" என்று குறிப்பிடுதல் வேண்டும். 2023.06.28 ஆம் திகதி மு.ப. 10.30க்கு NSACP கேட்போர் கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
5. விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க விரும்பு விலைமனுதாரர்கள் முன்னிலையில் பொதுவெளியில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
தேசிய பாலியல் நோய்/ எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம்,
டி சேரம் பிளேஸ், 29,
கொழும்பு 10

தொலைபேசி: 011-2696433/ 071-2667163

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கைத்தொழில் அமைச்சு

## லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிட்டட்

### புல்மோட்டை தொழிற்சாலையில் கூரை மீது 40 கிலோவாட் சூரிய சக்தி அமைப்பை வழங்கல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்

1. கீழ் விபரிக்கப்பட்டவாறு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிட்டட் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை (DPC) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

| இல. | விலைமனு இல. | பொருட்களின் விபரம் | ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) | விலைமனு பிணை (ரூபா) | விலைமனு பிணை செல்லுபடிக் காலம் | விலைமனு செல்லுபடி நாட்கள் | விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | LMSL/SUP/ DPC/07/2023 | புல்மோட்டை தொழிற்சாலையில் கூரை மீது 40 கிலோவாட் சூரிய சக்தி அமைப்பை வழங்கல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் | 2,000/= | 50,000/= | 2023.09.20 வரை | 77 | 2023.06.22 14.30 மணி |

3. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் வழங்கல் முகாமையாளர், லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிட்டட், 341/13, சரண மாவத்தை, ராஜகிரிய என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு, 2023.06.08 ஆம் திகதி தொடக்கம் 2023.06.21 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் 14.30 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
   தொடர்பு இல.: 011-2882025/ 2883951/ 2883952
4. மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023.06.08 ஆம் திகதி தொடக்கம் 2023.06.21 ஆம் திகதி வரை 9.00 மணி தொடக்கம் 14.30 மணி வரையில் வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்திற்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணமானது லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிட்டட்டின் நிதிப் பிரிவு, காசாளர் கருமபீடத்திற்கு ரொக்கப்பணத்தில் செலுத்த வேண்டும்.
5. பூரணமான விலைமனுக்களை இரு பிரதிகளில் "அசல்" மற்றும் "நகல்" என வெவ்வேறு கடித உறைகளில் மூடப்பட்டு தொடர்ந்து அவைகளை ஒற்றை கடித உறைகளில் இட்டு மேல் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிட்டட், 341/13, சரண மாவத்தை, ராஜகிரிய என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது குறிப்பிட்ட முகவரியின் ல.மி.சா.லி. இன் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் மேல் விபரிக்கப்பட்டவாறு விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிட்டட்**

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண சபை

ஊவா மாகாண பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) பணிமனையின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் கைத்தொழில்களை நிறைவேற்றுவதற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) மற்றும் குறித்த துறையில் பதிவுடன் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிர்மாண நிறுவனங்களில் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இலக்கம் | கைத்தொழிலின் பெயர் | சிவில் வேலை பெறுமதி (ரூ. மி.) (வெட் இன்றி) | குறித்த துறையில் தேவைப்படும் CIDA தரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை (காசாக செலுத்துவதாயின்) (ரூ) | நிர்மாண கால எல்லை (நாட்கள்) | கேள்வி ஆவணக் கட்டண தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | DCS/ED/ PSDG/2023/01/01 | மொ/ மஹவெலமுல்ல முஸ்லிம் வித்தியாலயத்தில் 70 x 25 இருமாடி கட்டிடத்தை நிர்மாணித்தல் - இறுதிக் கட்டம் | 13.55 | C7, C6 மற்றும் C5 | 68,000.00 | 150 | 5,000.00 |
| 02 | DCS/ED/ PSDG/2023/01/02 | ஹாலிஎல சம்பத் நிலையத்தின் கணனி நிலையத்திற்கு மூன்று மாடி கட்டிடமொன்றை நிர்மாணித்தல் (தரை மாடியின் மிகுதிவேலை) 1ம் கட்டம் | 7.87 | C8, C7 மற்றும் C6 | 39,500.00 | 120 | 3,000.00 |

**கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல்** : 2023.06.08 முதல் 2023.06.28ம் திகதி 15.00 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம் : 2023.06.30ம் திகதி 14.00 இற்கு

**கேள்விகள் திறத்தல்** : 2023.06.30ம் திகதி 14.00 இற்கு இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு குறித்த நிபந்தனை மற்றும் அறிவுறுத்தல்களை கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களை அழைத்து மற்றும் E-Mail மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) பணிமனை** - 055-2222217 / dcsengupc@gmail.com
**மாகாண கட்டிடப் பணிப்பாளர் பணிமனை** - 055-2229629/ bdplanningunit@gmail.com

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) பணிமனை,**
**பிங்அராவ, பதுளை. பெக்ஸ் இலக்கம் :- 055-2222218**

திகதி : 2023.06.06

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் | கேள்வி முன்னோடிக் கூட்டத் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| CMS/LP/23/ PT/04/060 | 2400000 – Nos – Food Grade PLA Coated Paper Lunch Box | 480,000.00 | 3,500.00 | 30-06-2023 பி.ப. 1.30 மணி | 21-06-2023 மு.ப. 10.00 மணிக்கு **SLPA** பொது நூலகத்தில் |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஒரு (1) வருடம் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஜூன் 12ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

# பெறுகை அறிவித்தல்

**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக் கோரல்

1. 2023ஆம் ஆண்டுக்காக கூட்டுப் பசளை வழங்குவதற்காக தேசிய போட்டிரீதியான நடைமுறையின் கீழ் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. கொள்வனவு செய்வது தொடர்பில் கூட்டுப் பசளைக்கான குறிப்பிட்ட விபரக்குறிப்பு கீழுள்ளவாறு அமையும்.

| கூட்டுப் பசளைக்கான தரநிலை | | |
|---|---|---|
| i. ஈரப்பதம் 25% க்கு மேற்படாதிருத்தல் வேண்டும். | **குறைந்தபட்ச ஊட்டச்சத்து (உலர் எடை)** | **உச்ச கன உலோக அளவு (உலர் எடைக்கு) mg/1 kg** |
| | vi. நைட்ரஜன் (N) 1% | xi. கெட்மியம் Cd 3 |
| ii. C.N விகிதம் 10-25 வரை. | vii. பொஸ்பேட் ($P_2O5$ என) 0.5% | xii. க்ரோமியம் Cr 50 |
| iii. P.H அளவு 6.5-8.0 இடையே இருத்தல் வேண்டும். | viii. பொட்டாசியம் ($K_2O$ என) 1% | xiii. ஈயம் Pb 50 |
| iv. மணல் உள்ளடக்கம் 20% க்கு மேற்படாதிருத்தல் வேண்டும் | ix. மெக்னீசியம் (MgO) 0.5% | xiv. பாதரசம் Hg 0.5 |
| v. துர்நாற்றம் இன்றி இருத்தல் வேண்டும் | x. கரிம கார்பன் விகிதம் குறைந்தது 25% | xv. நிக்கல் Ni 50 |
| | | xvi. ஆசனிக் As 3 |

3. ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் 2023.06.28 ஆம் திகதிக்கு முன்னர் தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தில் மற்றும் கீழுள்ள முகவரிகளில் உள்ள பிராந்திய அலுவலகங்களில் இருந்து மீளளிக்கப்படாத 5000 ரூபா தொகையை செலுத்தி வார நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை குறித்த விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்ய முடியும்.
4. நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.
5. கீழ் குறிப்பிடப்பட்ட அனைத்து மாவட்டங்களுக்காகவும் கூட்டுப் பசளை வழங்குவதற்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதாயின் ஒவ்வொரு மாவட்டங்களுக்காகவும் வெவ்வேறான விலைமனு ஆவணங்களை வாங்கி பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

| | மாவட்டங்கள் மற்றும் கூட்டுப் பசளை தேவை / அலுவலகம் மற்றும் முகவரி | விலைமனு இலக்கம் | தொலைபேசி இலக்கம் | தேவையான அளவு (மெ. தொ.) |
|---|---|---|---|---|
| i | தலைமை அலுவலகம், இல. 70, பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்லை. | | 011-7909044 | - |
| ii | காலி பிராந்திய அலுவலகம், வலஹன்துவ தோட்டம், வலஹன்துவ | TSHDA/NCB/2023/ COMPOST/GALLE | 091-7201126/ 076-3798374 | 1,680 |
| iii | மாத்தறை பிராந்திய அலுவலகம், இல. 31, காலிதாச மாவத்தை, மாத்தறை | TSHDA/NCB/2023/ COMPOST/MATARA | 041-7200396/ 077-7006446 | 1,240 |
| iv | இரத்தினபுரி பிராந்திய அலுவலகம், இல. 1/28, புதிய நகர், இரத்தினபுரி | TSHDA/NCB/2023/ COMPOST/RATNAPURA | 045-7201243/ 077-3725520 | 1,200 |
| v | நுவரெலியா பிராந்திய அலுவலகம், புதிய நகரம், கொத்மலை | TSHDA/NCB/2023/ COMPOST/NUWARAELIYA | 052-4930247/ 077-7006417 | 190 |
| vi | கண்டி பிராந்திய அலுவலகம், இல. 2/7/1, கன்னொருவ வீதி, பேராதனை | TSHDA/NCB/2023/ COMPOST/KANDY | 081-7200827/ 077-7006704 | 390 |
| vii | ஊவா பிராந்திய அலுவலகம், புதிய பதுளை வீதி, பண்டாரவளை | TSHDA/NCB/2023/ COMPOST/UVA | 057-7200083/ 077-7006540 | 380 |
| viii | கேகாலை பிராந்திய அலுவலகம், ஈரியகொல்ல, தெஹியோவிட்ட | TSHDA/NCB/2023/ COMPOST/KEGALLE | 035-7201254/ 077-9741028 | 510 |
| ix | களுத்துறை பிராந்திய அலுவலகம், தடுகொடயாவத்த வீதி, இத்தகொட மத்துகம | TSHDA/NCB/2023/ COMPOST/KALUTHARA | 074-2275320/ 077-7005330 | 410 |
| | முழுத் தேவை | | | 6,000 |

6. சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை 2023.06.30 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் மேல் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது கைகளால் கொண்டுவந்து அந்த முகவரியில் உள்ள அலுவலகத்தில் விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதன் மூலம் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்பதோடு தாமதித்து கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. விலைமனுக்களை திறப்பது மேல் குறிப்பிடப்பட்ட அலுவலகங்களில் 2023.06.30 ஆம் திகதி பி.ப. 2.30க்கு மேற்கொள்ளப்படும். அதற்கு விலைமனுதாரர்களுக்கு அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளுக்கு பங்கேற்க முடியும்.
8. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் கூட்டுப் பசளையில் 1 கிலோ கிராம் அளவு வீதம் 03 மாதிரிகளை வழங்குவது அவசியம் என்பதோடு அந்த மாதிரிகளை பரிசோதிக்கும் செலவையும் அவர்கள் ஏற்க வேண்டும்.
9. தயாரிக்கப்படும் கூட்டுப் பசளை தொடர்பில் 06 மாதங்களுக்குள் அரசின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட தரச் சான்றிதழ் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
10. கூட்டுப் பசளைகளின் விலைமனுக்கள் மற்றும் மேல் குறிப்படப்பட்ட இடங்களுக்கான போக்குவரத்து, ஏற்றுதல் மற்றும் பைகளுக்காக ஏற்படுகின்ற செலவுகளையும் வேறாக குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
11. கோரிய திகதியில் இருந்து 05 நாட்களுக்குள் கோரப்பட்ட அளவை குறிப்பிட்ட இடத்திற்கு எடுத்துச் செல்லல் வேண்டும்.
12. விலைமனுவுடன் எந்த ஒரு புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்தும் பெறுக்கொண்ட முழுமையான விலைமனு பெறுமதியில் 1% அளவு கொண்ட 90 நாட்கள் செல்லுபடியான விலைமனு பிணை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனு பிணை தலைவர், தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் பெயருக்கு இருத்தல் வேண்டும். குறித்த கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனு இலக்கம் குறிப்பிடப்படுதல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிட்டு இரு பிரதிகளில் விலைமனு விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்**
**தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை**
**இல. 70, பாராளுமன்ற வீதி, பெலவத்த,**
**பத்தரமுல்லை.**

# அம்பகமுவ பிரதேச சபை

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலையை நிறைவேற்றுவதற்கு தகுதி வாய்ந்த மற்றும் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாத விலைமனுதாரர்களிடமிருந்து அம்பகமுவ பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப் படி இல. | வேலை மற்றும் விலைக் கோரல் இல. | பொறியியலாளரின் அளவுப் பத்திர பெறுமதி (VAT இன்றி) (ரூபா மில்.) | ஒப்பந்தக் காலம் (வாரங்கள்) | (CIDA/ ICTAD) பதிவு | விலைக்கோரல் பிணை முறி | | | மீளளிக்கப் படாத விலைக் கோரல் ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை முறியின் பெறுமதி (ரூபா) | ரொக்கப் பணமாக வைப்புச் செய்ய வேண்டிய பெறுமதி (ரூபா) | செல்லுபடியாக வேண்டிய திகதி | |
| 01. | அம்பகமுவ பிரதேச சபையில் தகனச்சாலையை நிர்மாணித்தல் - கட்டம் II | 11.8 | 12 வாரங்கள் | C5 அல்லது C6 அல்லது C7 | 200,000.00 | 100,000.00 | 2023-10-10 | 5,000.00 |

01. இந்த விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். இந்த பெறுகையின் கீழ் செயற்படுத்தப்படுவதற்குள்ள வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவிற்கும் குறைவாக உள்ளதால் 04/2016(iv)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தில் சுட்டிக்காட்டப்படுள்ளதன் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஏற்புடையதாகும்.

02. இது தொடர்பான மேலதிக விபரங்களை 0512242224 எனும் தொலைபேசி இலக்கத்தில் அம்பகமுவ பிரதேச சபையின் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைக்கோரல் ஆவணங்களை 2023-06-08ஆம் திகதி முதல் 2023-06-27ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் அம்பகமுவ பிரதேச சபை அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்ததன் பின் மேற்கூறப்பட்டுள்ள வகையில் மீளளிக்கப்படாத விலைக்கோரல் ஆவணக் கட்டணத்தை அம்பகமுவ பிரதேச சபையின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி குறித்த பற்றுச்சீட்டை சமர்ப்பித்து விலைக்கோரல் ஆவணங்களை 2023-06-08ஆம் திகதி முதல் 2023-06-27ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரையில் அம்பகமுவ பிரதேச சபையின் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

04. விலைக்கோரலின் பெறுமதி 05 மில்லியன் ரூபாவை விஞ்சும் வேளையில் ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரரினால் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு ''அம்பகமுவ பிரதேச சபை'' எனும் பெயரில் அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட (இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட) வங்கியிலிருந்து அல்லது நிர்மாணப் பாதுகாப்பு நிதியத்தினால் (CGF) பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் அல்லது விலைக்கோரல் பிணை முறியை ரொக்கப் பணமாக வைப்புச் செய்வதானால் மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை அம்பகமுவ பிரதேச சபையின் சிறாப்பரிடம் வைப்புச் செய்து அதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நகல் பிரதிகள் சகிதம் ''தலைவர், பெறுகைக் குழு, அம்பகமுவ பிரதேச சபை, கினிகத்தேன'' எனும் முகவரிக்கு 2023-06-28ஆம் திகதி பி.ப. 02.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து அம்பகமுவ பிரதேச சபை செயலாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

07. இது தொடர்பிலான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-06-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அம்பகமுவ பிரதேச சபையில் இடம்பெறும். இதில் விலைமனுதாரர்கள் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் முழுமையான உரிமையை அம்பகமுவ பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அம்பகமுவ பிரதேச சபை, கினிகத்தேன.**
**(தொலைபேசி இல. 0512242224)**
**2023-06-08.**

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

Gayani - 077 7 278 948 / 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

**வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA)**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

| இல | ஒப்பந்த இலக்கம் |
|---|---|
| 1 | ஒரு வருட காலத்திற்கு EOM&M பிரிவின் மத்திய அதிவேக நெடுஞ்சாலை II இற்கு பயணிகள் வாகனங்களை வாடகைக்கு பெறல் 2023/2024 (விலைமனு இல - RDA/EOM&M/PRC/2023/MECH/14) |
| 2 | ஒருவருட காலத்திற்கு EOM&M பிரிவின் மத்திய அதிவேக நெடுஞ்சாலை II இற்கு செயற்பாட்டு வாகனங்கள் மற்றும் பராமரிப்பு வாகனங்களை வாடகைக்கு பெறல் - 2023/2024 (விலைமனு இல - RDA/EOM&M/PRC/2023/MECH/15) |

தேசிய போட்டி கேள்வி முறையின் கீழ் மேற்படி ஒப்பந்தத்திற்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றது.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023.06.08 முதல் 2023.06.21 வரை RDA மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு இணையதளம் www.rda.gov.lk ஐப் பார்வையிடுமாறு கேட்கப்படுகின்றனர்.

# பெறுகை அறிவித்தல்

## சுகாதாரத் திணைக்களம் (மே.மா)

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – கொழும்பு

எமது பிரிவிற்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு உருப்படிகளைக் கொள்வனவு செய்துகொள்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| லொட் இலக்கம் | உருப்படி | மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| லொட் 04 | மருத்துவ உபகரணங்கள்<br>1. Multipara Monitor<br>2. Electric Sterilizer<br>3. Baby Sucker<br>4. Hot air oven<br>5. Auto Scope<br>6. Diagnostic Set (Opthalmoscope + Otoscope)<br>7. Autoclave<br>8. Sterilizing drums | 1,000.00 |
| லொட் 06 | குளுகோ மீற்றர்களிற்கான ஸ்ட்ரிப்களைக் கொள்வனவு செய்தல் | 1,000.00 |
| லொட் 07 | கொலஸ்ட்ரோல் மீற்றர்களுக்கான ஸ்ட்ரிப்களைக் கொள்வனவு செய்தல் | 1,000.00 |
| லொட் 08 | 1.Portable Dental X-ray<br>2. CTG Machine | 3,500.00 |

2023.06.08 முதல் 2023.06.30 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை மீளளிக்கப்படாத, லொட் இலக்கங்களிற்கான கட்டணங்களை கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் செலுத்தி இதற்கானவிலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். தேவையெனின், விலைமனு ஆவணங்களை இவ் அலுவலகத்தில் இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள இரண்டு பிதிகளாக (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென) முத்திரையிட்டு இவ் அலுவலகத்தின் நிருவாக அலுவலகரின் அறையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் அல்லது பதிவுத் தபாலில் 'தலைவர், பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. 1287, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு10' என்ற முகவரிக்கு அனுப்புதல் மேற்கொள்ளலாம்.

விலைமனுக்களை உள்ளடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'லொட் இலக்கம் (...........) மருத்துவ உபகரணங்களை வழங்களிற்கான விலைமனு 2023' எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2023.07.04 அன்று மு.ப. 10.00 இற்கு முடிவுறுவதுடன், அவை திறக்கப்படல் 2023.07.04 அன்று மு.ப. 10.00 இற்கு இவ் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், அவ் வேளையின் பின்னர் இடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுத்திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
தொ.பே.இல. 011-2326643, 011-2452440

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - கொழும்பு,**
**த.பெ. 1287, புதிய செயலகம், மாளிகாவத்தை,**
**கொழும்பு - 10**

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## பச்சைத் தேயிலைக் கொழுந்து / இறப்பர் பால் விற்பனை செய்தல்

### ஜுலை - ஆகஸ்ட் 2023

**கேள்வி இல. SLSPC/PL/Green Leaf/Latex/ T-91-101/July/August-2023**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குரித்தான கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள பின்வரும் தோட்டங்களில் 2023ஆம் வருடத்தின் ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் பச்சைத் தேயிலைக் கொழுந்து மற்றும் காலி மாவட்டத்திலுள்ள வலஹந்துவ தோட்டத்தின் இறப்பர் பாலை விற்பனை செய்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பச்சைத் தேயிலைக் கொழுந்து | கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை |
|---|---|---|
| அலகொல்ல | SLSPC/PL/Green Leaf/T-91 /July / August - 2023 | 100,000.00 |
| கொட்டகஹ | SLSPC/PL/Green Leaf/T-92 /July / August - 2023 | 100,000.00 |
| கல்பிஹில்ல | SLSPC/PL/Green Leaf/T-93 /July / August - 2023 | 100,000.00 |
| ரங்கல | SLSPC/PL/Green Leaf/T-94 /July / August - 2023 | 100,000.00 |
| ஹெயார்பார்க் | SLSPC/PL/Green Leaf/T-95 /July / August - 2023 | 100,000.00 |
| ஹுன்னஸ்கிரிய | SLSPC/PL/Green Leaf/T-96 /July / August - 2023 | 100,000.00 |
| வைத்தலாவ | SLSPC/PL/Green Leaf/T-97 /July / August - 2023 | 100,000.00 |
| வுட்சைட் | SLSPC/PL/Green Leaf/T-98 /July / August - 2023 | 100,000.00 |
| விகாரகல | SLSPC/PL/Green Leaf/T-99 /July / August - 2023 | 25,000.00 |
| வலஹந்துவ | SLSPC/PL/Green Leaf/T-100 /July / August - 2023 | 10,000.00 |
| **இறப்பர் பால் (Latex)** | | |
| வலஹந்துவ | SLSPC/PL/Latex/T-101/July/August-2023 | 25,000.00 |

மேற்படி விலைக்கோரலுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்களை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை 5000.00 ரூபாவைச் செலுத்தி 2023-06-09ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023-06-20ஆம் திகதி வரையில் பி.ப. 4.00 மணி வரையான வாரத்தின் வேலை நாட்களில் பன்வில, கல்பிஹில்லயில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகத்திலிருந்து அல்லது 2023-06-09ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023-06-21ஆம் திகதி வரையில் பி.ப. 12.30 மணி வரையான வாரத்தின் வேலை நாட்களில் இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை ஒவ்வொரு தோட்டத்திற்காகவும் வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கி முதலாம் நகரக் கிளையில் பேணப்படும் 046-1-002-4-0000933 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அல்லது ரொக்கப் பணமாக காசாளருக்குச் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பற்றுச்சீட்டின் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை வைப்புப் பற்றுச்சீட்டு சகிதம் கொழும்பு-10, இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023-06-21ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் உள்ளிடுதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் கேள்விதாரரினால் உடன்படிக்கை கைச்சாத்திடும் தினத்திற்கு முன் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கடந்த மாதங்களில் பச்சைத் தேயிலைக் கொழுந்து அளவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விலையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்படும் பெறுமதிக்கு 03 மாதங்கள் வரையில் செல்லுபடியாகும் வங்கிப் பிணை முறியொன்றை வழங்குதல் கட்டாயமாகும்.

2023-06-21ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்தவுடன் கேள்விகளைத் திறக்கும் குழுவின் முன்னிலையில் இந்தக் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கொள்வனவாளர் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட தினம் மற்றும் நேரத்திற்குக் கிடைக்கப்பெறாத கேள்விப் படிவங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்புக்கூற மாட்டாது என்பதுடன் பெறுகைக் குழுத் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு-10.**
**2023-06-06.**

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு*

## கட்டிடங்கள் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கொழும்பு-01 குற்றவியல் புலன்விசாரணை திணைக்களத்தில் தற்போதய பிரதான பெனலை புதிய பெனல் மூலம் பதிலீடு செய்தல் மற்றும் பிரதான வடங்களை பதித்தல்

**[Contract No.: 04-03-11-2022/CT40]**

1 **47.5** மில்லியன் ரூபாவிலும் கீழே விபரிக்கப்பட்டதுமானதும் கொழும்பு-01, குற்றவியல் புலன்விசாரணை திணைக்களத்தில் ''தற்போதய பிரதான பெனலை புதிய பெனல் மூலம் பதிலீடு செய்தல் மற்றும் பிரதான வடங்களை பதித்தல்'' ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
நிர்மாணக்கால எல்லையானது 126 நாட்களாகும்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் மின்னியல் நிறுவுதல் துறையில் ஈஎம்2 அல்லது மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்றிருத்தலுடன் விலைமனுக்களை மூடும் திகதி வரையிலும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும். மேலும், இப்பதிவானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியன்றும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
''விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது (பிசிஏ-3) விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ-03 சான்றிதழை (பிசிஏ-03) அவ்வாறான விலைமனுதாரர் சமர்பிக்காதவிடத்து பெறுகையானது எந்தவொரு விலைமனுதாரருக்கம் வழங்கப்பட மாட்டாது''.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, டொரிங்டன் அவென்யூ, 213 ஆம் இலக்கத்திலுள்ள கட்டிடங்கள் திணைக்கள (மேல்-வடக்கு) பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
தொடர்பிலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 011-2582579. தொலைநகல்: 011-2588686.

5. 2023.06.07 ஆம் திகதியிலிருந்து 2023.06.21 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக பன்னிரண்டாயிரம் ரூபாவை (12,000 ரூபா) செலுத்திய பின்னர், கொழும்பு-07, டொரிங்டன் அவென்யூ, 213 ஆம் இலக்கத்திலுள்ள கட்டிடங்கள் திணைக்கள (மேல்-வடக்கு) பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

6. 2023.06.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டடிடங்கள் திணைக்களம், 2 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', பத்தரமுல்ல என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். பத்தரமுல்ல, ''செத்சிரிபாய'', 2 ஆம் மாடியின் கட்டிடங்கள் திணைக்கள ஒப்பந்தக் கிளையில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுக்களை அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.

7. விலைமனுக்களை ஏற்றுக் கொள்வதற்காக நிருணயிக்கப்பட்டுள்ள இறுதித் திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்தும் விலைமனுக்கள் 91 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள பாங்கில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 09 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதாகவிருத்தல்.
   - 712,000 ரூபா தொகைக்கானதாகவிருத்தல்.
   - 2023 ஒக்டோபர் 18 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவின் 16.2 ஆம் **ITB** உபவாசகத்தில் குறிந்துரைக்கப்பட்டுள்ள முகவராண்மைகளின் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.

9. பாதுகாப்பு சோதனை நிமித்தம் காரணமாக விலைமனுக்களை மூடும் நேரத்திற்கு ஆகக் குறைந்தது 1 மணித்தியாலத்திற்கு முன்னராக ''செத்சிரிபாய'' இடப்பரப்பிற்குள் உட்செல்லுமாறு விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

**பொறியியலாளர் (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**




E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
Gayani - 077 7 278 948/ 011 2 429 347
Piyumi - 011 2 429 383 | 011 2 429 342/ 343

# இலங்கை வங்கி

## பின்வரும் இலங்கை வங்கிக் கிளை இடமாற்றத்திற்காக நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் பொருத்தமான கட்டடமொன்று தேவைப்படுகின்றது.

# கெசெல்வத்த கிளை

**குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்படும் உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- தரைப் பரப்பு குறைந்தபட்சம் 3,800 சதுர அடிகளைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.
- பிரதான வீதிக்கு முகப்பாக குறைந்தபட்சம் 30 அடிக்குள் நகரத்தின் வர்த்தக எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி அறைக்கு கட்டடத்தின் பின்புறம் 100 சதுர அடி அளவிலான தரைப்பரப்பு இருத்தல் வேண்டும் என்பதுடன் அதற்கான நுழைவுப் பாதையும் இருத்தல் வேண்டும்.
- குறைந்தது 06 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் விரும்பதக்கது.
- இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் இருத்தல் வேண்டும்.
- 3 நிலை மின்சாரம் (60A), இருத்தல் வேண்டும் என்பதுடன் மின்சார முறைமையானது அலுவலகத்துக்குப் பொருத்தமான வகையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- நீர் வழங்கல் வசதிகள் இருத்தல் வேண்டும் என்பதுடன் ஆகக் குறைந்தது 1,000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த் தாங்கியொன்று பொருத்தமான உயர்வான இடத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- ஆகக் குறைந்தது 03 மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை ஆண்கள் மற்றும் பெண்கள் வெவ்வேறாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். அதில் ஒன்று கட்டடத்தின் பின்புறம் அமைந்திருத்தல் வேண்டும்.
- தரைக்கு முழுமையாக தரையோடுகள் (2x2 அடி) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்புறக் கதவு மற்றும் யன்னல்களுக்கு பாதுகாப்பு கிறில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.
- முன்புறம் டெம்பர்ட் கண்ணாடி இடப்பட்டு மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்துக்கு தீக்காப்புறுதிஇருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர் கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி போன்ற ஆவணங்களின் பிரதிகள் மற்றும் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கெசெல்வத்த கிளைக்கான பொருத்தமாக கட்டடம்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்,
(மேல் மாகாணம் - தெற்கு)
இலங்கை வங்கி, மாகாண அலுவலகம்,
இல: 175, ஹைலெவல் வீதி, நுகேகொட.

தொலைபேசி : 011-2809125/011-2809126
தொலைநகல்: 011-2809238
மின்னஞ்சல்: bocwps@boc.lk

1975 BOC www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## சுகாதார சேவைத் திணைக்களம்

## போதனா வைத்தியசாலை, கராபிட்டிய

# மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

01. காலி, கராபிட்டிய, போதனா வைத்தியசாலை கேள்விச் சபையின் தலைவரினால் கீழே குறிப்பிட்டுள்ள உபகரணங்களின் வழங்கலுக்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் பெற்றுக் கொள்ளப்படும்.

| | அம்சத்தின் பெயர் | எண்ணிக்கை | வழங்கும் திகதி மற்றும் நேரம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 01. | Binocular Microscope | 03 | 2023.06.08 ஆம் திகதியன்று மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் | 2023.06.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| 02. | Adjustable Bed with Side Rails/Bars | 01 | | |
| 03. | Suction Machine | 01 | | |
| 04. | Microtome | 01 | | |

02. இலங்கை சந்தையில் முன்வைக்கப்படும் உபகரணங்களின் உற்பத்தியாளர்களின் ஏகநியமனம் பெற்ற பிரதிநிதிகள்/ தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களே இக்கேள்வியில் பங்கு பெறுவதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.

03. பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து எந்தவொரு ஆர்வமும் தகுதியுமுள்ள கேள்விதாரர், முகவர், பிரதிநிதி அல்லது நியமனம் பெற்றவர் அல்லது கேள்விதாரரொருவரின் சார்பானவரினால் கொள்வனவு செய்யப்பட்டு இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றுடன் முத்திரையிடப்பட்ட கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யும் முறைமை:**

அ) காலி, கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கான எழுத்து மூலமான விண்ணப்பமொன்று.

ஆ) காலி, கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்காளருக்கு ஒவ்வொரு கேள்விக்கும் ரொக்கப் பணத்தில் 2500 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்துதல்.

இ) வியாபார பதிவு சான்றிதழொன்றும் அதனது அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதியொன்றும்.

ஈ) உள்ளூர் முகவராக முகவராண்மையினரால் நியமித்து வழங்கப்பட்ட சான்றிதழ்/ கடிதம்/அற்றோணித்தத்துவமொன்று.

**கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்கும் முறைமை:**

அ) கொழும்பு, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, ''சமாகம் மெதுர'' பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவுச் சான்றிதழின் அசல் (Original) பிரதியை சமர்ப்பித்தல்.

ஆ) 2% விலைமனுப்பிணையை சான்று பகருவதற்கான ஆவணச் சான்று.

இ) காலி, கராபிட்டிய போதனா வைத்தியசாலை பணிப்பாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

ஈ) CDDA பதிவுச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்.

தொலைபேசி இல.: 091-2232159 தொலைநகல் இல.: 091-2227638

கேள்விகள் அவற்றை மூடிய பின்னர், பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். மேலதிக தகவலை காலி, கராபிட்டிய, போதனா வைத்தியசாலை பணிப்பாளர்/ கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கேள்விச் சபை,**
**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**கராபிட்டிய,**
**காலி.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல் (IFB)

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அஸ்போல்ட் ஆலைகளுக்கு மூலப்பொருட்களை வழங்குவதற்கான விலைமனுக்கோரல்**

இங்கிரிய, கேரகலை, கொடதெனியாவ, மெதயாய, கொத்மலை, பலாங்கொடை, மெதவாச்சிய, அம்பன்பொல மற்றும் சூரியவெவ ஆகிய இடங்களில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அஸ்போல்ட் ஆலைகளுக்கான மூலப்பொருட்களை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் ஆர்வமுடைய வழங்குனர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2023.06.08** ஆம் திகதி முதல் **2023.06.28** ஆம் திகதி வரை **www.rda.gov.lk** இல் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# பதவி வெற்றிடங்கள்

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

### தேசத்தின் முன்னணி தொலைக்காட்சி அலைவரிசையில் அங்கத்தவராவதற்கு நீங்களும் இணையுங்கள்

**சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரி (ஒப்பந்தம்)**

இலங்கையின் நீண்டகால ஒளிபரப்புத்துறையில் உரிமையுடன் விருது பெற்றுள்ள ஊடக நிறுவனமான, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் நிறைவேற்று அலுவலரொருவராக, சித்திகரமான குழுவில் இணைவதற்காக கூடிய வினைத் திறன்களைக் கொண்ட இளைஞர், யுவதிகளிற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

உயர்நிலை பிரவேசத்துடன் கூடிய சந்தையில், முக்கிய இடத்திலுள்ள எமது வியாபார விரிவாக்கல் பிரிவொன்றாக, பல்வேறு இலக்குகளைக் கொண்ட தொகுதிகளாக வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்ட சமுகத்தின் ஊடாக ஆகக்கூடிய நன்மை பயக்கக்கூடிய வர்த்தக விளம்பரத்தீர்வுகளிற்காக நாங்கள் ஆயத்தமாவோம்.

வயது 18-40 இற் கிடைப்பட்ட பின்வரும் தகைமைகள் மற்றும் நிபுணத்துவம் கொண்ட, எமது வர்த்தக மன்றை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய இளைஞர், யுவதிகள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

1. க.பொ.த. (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து, முன்னணி நிறுவனமொன்றில் 02 வருடங்கள் சந்தைப்படுத்தலில் அனுபவம்.

அல்லது

2. ஆங்கிலம்/ கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 04 திறமைச்சித்திகளுடன், க.பொ.த. (சா.த) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 04 வருடகால சந்தைப்படுத்தல் அனுபவம்.

அல்லது

3. அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனமொன்றில் 01 வருட சந்தைப்படுத்தல் அனுபவத்துடன் CIM அல்லது SLIM முதல் பிரிவு அல்லது முழுமையாகச் சித்தியடைந்திருத்தல்.

**தேவையான நிபுணத்துவம்**

- உயர்ந்தபட்ச பொதுமக்கள் தொடர்பாடல் திறன்கள்
- ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியைக் கையாள்வதில சிறந்த நிபுணத்துவம் பெற்றிருத்தல்.
- கலந்துரையாடல் மூலம் உடன்பாடுகளிற்கு வருவதற்கான திறமை.
- அடிக்கடி மாற்றமடையும் சுற்றாடல் மற்றும் மன உளைச்சலை ஈடு செய்யும் இயலுமை.

தேர்ந்தெடுக்கப்படும் சந்தைப்படுத்தல நிறைவேற்று அலுவலர்களிற்கு கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன், தொழிற்றுறை முன்னேற்றத்திற்காகப் பாரிய வாய்ப்புக்கள் வழங்கப்படும். உங்களைப் பற்றி விசாரித்தறிந்து கொள்ளக்கூடிய உறவினரல்லாத இரண்டு நபர்களின் தகவல்களடங்கியவாறு, பெயர், முகவரி மற்றும் ஏனைய அனைத்து விபரங்களுடன் சுயதரவு விண்ணப்பமொன்று, கடவுச்சீட்டு அளவில் 02 புகைப்படங்களுடன் பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது மின்னஞ்சலில் 2023.06.22 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

**மின்னஞ்சல் முகவரி: ddgaslrc@gmail.com**
**மேலதிக விபரங்களிற்கு: 0777788208 (சொனாலி)**
**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், கொழும்பு - 07**
2023.06.06


தினகரன் வாரமஞ்சரி | SUNDAY OBSERVER adz

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| ரு. 800/- (Except Thinakaran Varamanjari) | ரு.1,000/- (Except Thinakaran Varamanjari) | ரு.1,330/- |

## COLOMBO DISTRICT

**AVISSAWELLA** 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

**ANGODA** 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

**ATHURUGIRIYA** 011 2760479, 011 4876968
267, Godagama Road,

**BATHTHARAMULLA** 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

**BORALESGAMUWA** 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

**HANWELLA** 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

**HOKANDARA** 071 8685437
No. 501, North Hokandara,

**HOMAGAMA** 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

**KADUWELA** 011 2579609
Nayana Bake House

**KADUWELA** 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

**KALUBOWILA** 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

**KESBEWA** 011 2703415
Seedevi Newspaper Office, 19, Horana Rd,

**KIRULAPONE** 071 5439396, 011 2514166
Ramani Book Shop, 27-A High Level Rd,

**KOTTAWA** 011 2842569, 071 2510950
Srisara Groceries, No. 101/2,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380


## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**01. பிரதம கணக்காளர் (Chief Accountant)**

சம்பள வகுதி : HM 1-1 (சிரேஷ்ட முகாமைத்துவ)
தகைமைகள் : (கீழ்க்காணும் 1 அல்லது 2)

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் கணக்கியல் முகாமைத்துவம், நிதி, வணிகமானி துறைகளுடன் சம்பந்தப்பட்ட பட்டம்
அத்துடன்
குறித்த துறையில் பட்டப்பின் படிப்பை பெற்றிருத்தல் அல்லது பதவியுடன் தொடர்புடைய பாடத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தில் கிட்டிய அங்கத்துவத்தை பெற்றிருத்தல்
அத்துடன்
அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்திலான பதவியொன்றில் குறைந்த பட்சம் குறித்த துறையில் பதினைந்து வருட (15) அனுபவத்தை பெற்றிருத்தல்
02. பதவியுடன் சம்பந்தப்படட பாடத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தில் முழு அங்கத்துவத்தை பெற்றிருத்தல்
மற்றும்
அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்திலான பதவியொன்றில் குறைந்த பட்சம் குறித்த துறையில் பதினைந்து வருட (15) அனுபவத்தை பெற்றிருத்தல்

வயது : 35 வயதிற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
சம்பளம் : HM 1-1-2016 -ரூ.80,295-15X2270-114345/-
ஏனைய கொடுப்பனவுகள் : வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு, தொழில்சார் கொடுப்பனவு, தினவரவு ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் அனுமதித்த ஏனைய கொடுப்பனவுகள், சிரேஷ்ட முகாமையாளர்களுக்கு உரித்தான போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள், மருத்துவ காப்புறுதி வசதிகள் மற்றும் வேறு அனுகூலங்கள்

**02. உள்ளக கணக்காய்வாளர் (Internal Auditor)**

சம்பள வகுதி : MM 1-1 (முகாமைத்துவம்)
தகைமைகள் : கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்றை பெற்றுக்கொண்ட பின்னர் கணக்காய்வு பற்றிய அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் குறித்த பாடத்துறையில் ஒருவருட அனுபவத்தை பெற்றிருத்தல்
(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் முகாமைத்துவம் அல்லது வர்த்தகம் பற்றி பெற்றுக்கொண்ட பட்டம்
அல்லது
(ஆ) இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தில் (ICASL) மத்திய பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
அல்லது
(இ) ஐக்கிய இராச்சியத்தில் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தில் (CIMA) மத்திய பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
அல்லது
(ஈ) சான்றிதழ் பெற்ற இணைந்த கணக்காளர்களின் சங்கம் (ACCA) மத்திய பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

வயது : 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
சம்பளம் : MM 1-1-2016 -ரூ.53,175-10X1375-15X1910-95575/-
(சம்பளத்திற்கு மேலதிகமாக அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள் உரித்தாகும்.)

**03. புத்தக பதிவியலாளர் (Book Keeper)**

சம்பள வகுதி : MA 2-2 (முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத)
தகைமைகள் : கல்விப் பொதுத்தராதர பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் 04 சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் (உயர்தரம்) பரீட்சையில் வர்த்தக பாடப்பரப்பில் அல்லது கணக்கியல் உற்பட பொது பாடப்பரப்பில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப்பரீட்சை தவிர்த்து) சித்தியடைந்திருத்தல்
மற்றும்
கணக்கியல் துறையுடன் சம்பந்தப்பட்ட தொழில்சார் பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல்
வயது : 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடையில் இருத்தல் வேண்டும்.
சம்பள அளவு : MA 2-2-2016 -ரூ.30,310-300X10-350X07 600X04-710X20 -53360/-
(சம்பளத்திற்கு மேலதிகமாக ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள் உரித்தாகும்.)

**பொது**

இப்பதவி ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய உரித்துரிமையுடன் நிரந்தர பதவியாகும் விண்ணப்பதாரிகள் சிறந்த ஆரோக்கியமுடையவராக இருப்பதுடன் இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். நேர்முகத்தேர்வின் மூலம் தகைமையுடனான விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படுவர். விண்ணப்பங்களை 2023.06.22 ம் திகதிக்கு முன்பு பதவியின் பெயரை குறிப்பிட்டு கீழக்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது rupavahinidg@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்**
**சுதந்திர சதுக்கம்**
**கொழும்பு - 07**
**தொ.பே இலக்கம் : 0112698187**
**இணையத்தளம் : www.rupavahini.lk**
**21023.06.06**

# விலை மனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | Nfs;tp tpguk;. ICB NCB |
| சேவைகள் | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/083 வாடகைக்குவான் மின் அத்தியட்சகர் (வர்த்தகம் பிரிவு) திருகோணமலை (இரண்டுவருடகாலம்) | 21-06-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவுசெய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்து மூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை. பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**


Wherever you are... Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
for 15 Words - Rs.1,000/-
For each additional word Rs. 25/-
The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
Easy way to make your payment :- BOC - Acc.No. 000000377 LAKE HOUSE BRANCH
Green Light for Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

வ/ப வயம்ப பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிநிதிகளாக செயற்படும் வ/ப அலவ்வ பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அலவ்வ அடகுப் பிரிவு, ஹும்புளுவ, உடுமுல்ல, நவதல்வத்த, மடவல, வில்கமுவ, மஹரச்சிமுல்ல, போயவலான, பம்பதெனிய, கல்கமுவ, பொரமடல, புஜ்ஜொமுவ, வலக்கும்புர, அம்போவ மற்றும் கந்தேகெதர ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2022.04.30 வரை அடகு வைக்கப்பட்டு, 2023.04.30ம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகை அடகுப் பொருட்கள் 2023 ஜூலை 29ம் திகதி மு.ப. 10.00 இற்கு வ/ப, அலவ்வ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையக கூட்டமண்டபத்தின் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கூட்டுறவாளர்,**
**வ/ப அலவ்வ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**நாரம்மல வீதி, அலவ்வ.**
**037-2278131**

### பெயர் மாற்றம்

கொழும்பு மாவட்டத்தில் டாம் வீதி பிரதேச செயலாளர் பிரிவில் 46/4/15/ லேக்சைட் ரெசிடன்ஸ் பிளேஸ் என்ற முகவரியில் வசிக்கும் **பாலமுத்து பூராய்** என்ற பெயரில் அறியப்பட்ட நான் இன்று முதல் **பாத்திமா அயிஷா** என்ற பெயரில் அழைக்கப்படுவதாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**- பாத்திமா அயிஷா**

**Repeat Your Ad For Better Offers**

### சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு 325



**தொழில்துறை**
பொது

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு பொதி செய்வதற்கு ஆண் மற்றும் பெண் அவசரமாக தேவை. உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு சம்பளம் 50, 000/- முதல் 60,000/ வரை. 077-9718056, 074-0 065770, 0 74-1705817 033745

தேங்காய் பால் பொருட்கள் நி றுவனத்தின் பெக்கேஜிங் துறைக்கு ஆண் மற்றும் பெண் அவசரமாக தேவை. சம்பளம் 45,000/= - 55, 000/ = உண வு ம ற்றும் தங்குமிட வசதி உண்டு. 077-9 7 18056, 074-00657 7 0, 074 -1705817 033749

## கேள்வி அழைப்பு

### விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான கீழ்க்காணும் பிரிவிற்கு சம்பந்தப்பட்ட கொள்வனவிற்காக உள்ளூர் கேள்விதாரர்களின் குறித்த பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E | F |
|---|---|---|---|---|---|---|---|
| தொடர் இல | வேலை விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்வி செல்லுபடி காலம் | | | கேள்வி ஆவணக் கட்டணம் | ICTAD அளவு |
| | | | காசு மூலம் எனில் | வங்கிப் பிணை மூலம் எனில் | பிணை செல்லுபடியாகும் காலம் | | |
| 01 | விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் அலுவலக கட்டிட பழுதுபார்த்தல் | SPD/2/5/ 4/02(2023) | 190,000/- | 380,000/- | 2023.10.15 | ரூ 6,000.00 | C7, C6 & C5 |
| 02 | கஹகொல்ல விற்பனை நிலையம், அலுவலக கட்டிடத்தைப் பழுதுபார்த்தல் | SPD/2/5/ 4/10(2023) | 110,000/- | 220,000/- | 2023.10.15 | ரூ 5,000.00 | C7, C6 & C5 |
| 03 | குண்டசாலை அரச விதை உற்பத்தி பண்ணையின், வீதியை பழுதுபார்த்தல் | SPD/2/5/ 4/22(2023) | 35,000/- | 70,000/- | 2023.10.01 | ரூ 2,500.00 | C9, C8 & C7 |
| 04 | பட்டஅத்த அரச விதை உற்பத்தி பண்ணையின், Dryer Building ஒன்றை நிர்மாணித்தல் | SPD/2/5/ 4/23(2023) | 42,000/- | 84,000/- | 2023.10.15 | ரூ 2,500.00 | C8, C7 & C6 |

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேற்படி விடயத்துடன் சம்பந்தப்பட்ட பெற்றுக்கொண்ட கேள்விப் படிவத்தை பாவித்து கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் விவசாயத் திணைக்களத்தின் காசாளரிடம் மீளளிக்கப்படாத மேற்படி E நிரலில் குறிப்பிடப்படும் கட்டணங்களை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விதை மற்றும் நாற்றும் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாகப் பிரிவிற்கு சமர்ப்பித்து 2023.06.09 முதல் 2023.06.28 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர் 01, 02 மற்றும் 04 உடன் சம்பந்தப்பட்ட கேள்விதாரர்கள் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன், அதன் பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதியொன்றை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட சகல கேள்விகளும் தலைவர், பிரதேச பெறுகைக்குழு, விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம் விவசாயத் திணைக்களம், பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மேற்படி முகவரியில் அமைந்துள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

சகல கேள்விதாரர்களும் மேற்படி அட்டவணையின் D இன் கீழ் குறிப்பிடப்படுமாறு பிணைத் தொகையை வைப்புச் செய்தல் வேண்டும் அத்துடன், வங்கிப் பிணை மூலம் பிணை வைப்புச் செய்வதாயின், அதனை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதித்த வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் 2023.06.30 பிற்பகல் 2.00 இற்கு முடிவடைவதுடன், உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் அவ் வேளையில் கேள்விகளை சமர்ப்பிப்போருக்கு அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர், பிரதேச பெறுகைக் குழு,**
**விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்**
**விவசாயத் திணைக்களம், பேராதனை**
**2023.06.08**
**081-2388106/122**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/03/ PT/6460(EL) | 10 Nos. Vehicle Mounter Data Terminals (VMTS) for STS, RTGS & Prime Movers operate in JCT/ECT | 300,000.00 | 3,500.00 | 2023.07.13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6463(EL) | Layer – 2 Data Switches & Access Points | 400,000.00 | 3,500.00 | 2023.07.13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/ PT/6464(MP) | 13 Nos. 2.5 Ton Forklift Trucks | 1,560,000.00 | 20,000.00 | 2023.07.13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6471(EL) | 250 Nos. Carbon Brush for AC Generators of yard Cranes | 40,000.00 | 1,000.00 | 2023.07.13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6470(MAR) | 02 Nos. Hydraulic Cylinder for 80/40 Gate Valve of TSD Hansakawa | 30,000.00 | 1,000.00 | 2023.07.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6475(EL) | 450M of 4 Pair X 3.5 SQMM Festoon Cable for Cranes at JCT | 50,000.00 | 1,000.00 | 2023.07.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6478(EL) | 150 M of Flexible Multi-Core Cable for Spreader of STS Crane | 75,000.00 | 1,000.00 | 2023.07.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/LP/234/ PT/14/032 | 14 Nos. Split type Air Conditioner 18000 BTU & 02 Nos. Split type Air Conditioner 36000 BTU | 63,000.00 | 1,000.00 | 2023.06.22 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/12/010 | Hydraulic Rescue Tool Set – 01 No. | 200,000.00 | 3,500.00 | 2023.06.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/10/010 | 04 Nos. of Chemical Protection Suit | 70,000.00 | 1,000.00 | 2023.06.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/13/10 | AP4C Handheld Chemical Detection Units – 01 No. | 60,000.00 | 1,000.00 | 2023.06.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/08/010 | 02 Nos. Submersible Pumps | 70,000.00 | 1,000.00 | 2023.07.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/22/ PT/14/059 | Battery, Inverter System for Transfer Crane Cabin Air Conditioner | 30,000.00 | 1,000.00 | 2023.07.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/08/052 | 3536 Ltr. Diesel Engine Oil SAE 15W – 40 CI-4 | 63,000.00 | 1,000.00 | 2023.07.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/07/055 | Spares for Grove AMZ 131 XT Aerial work Platform at JCT 1 & 2 | 30,000.00 | 1,000.00 | 2023.07.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/17/053 | 30000 Nos. Interlocking Blocks 100 MM thick | 52,500.00 | 1,000.00 | 2023.07.05 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/07/057 | Engine oil for Caterpillar C-15 Engine 3E – 9840 | 250,000.00 | 3,500.00 | 2023.07.05 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/03/056 | Photocopy paper A4 size 80GSM (500 sheets/ Packet) | 78,500.00 | 1,000.00 | 2023.07.05 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/14/057 | 2940 Liters Caltex Delo 1000 Marine SAE 40 | 55,000.00 | 1,000.00 | 2023.07.06 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/17/058 | 01 No. Annual License Renewals of ESET Virus Scanning Software | 55,000.00 | 1,000.00 | 2023.07.06 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/03/053 | 01 No. Control Module ECM 3408501 Programmed for Cummins QSMII Engine | 25,000.00 | 1,000.00 | 2023.07.06 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/17/057 | 2100 Liter HC 46 Lanka | 32,000.00 | 1,000.00 | 2023.07.07 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/14/058 | 1260 Liter Taro 30 DP SAE 40 | 27,000.00 | 1,000.00 | 2023.07.07 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/08/056 | 01 No. New TCM for WTECIII (Transmission Control Module ) of UD Nissan Prime Movers | 30,000.00 | 1,000.00 | 2023.07.07 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 ஜுன் 09 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

## விலைமனு அறிவித்தல்

### பாணந்துறை பிரதேச சபை வாத்துவ

### 2023.07.15 முதல் 2026.07.14 வரை வாத்துவ பொதுச் சந்தையின் கடை அறைகளைக் குத்தகைக்கு வழங்கல்

பாணந்துறை பிரதேச சபைக்கு உரித்தான கீழ்க்காணப்படும் அட்டவணையில் காணப்படும் ஆதனங்களின் உரிமையை 2023.07.15 முதல் 2026.07.14 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2023.06.28 அன்று மு.ப. 10.00 வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும் அன்றைய தினம் மு.ப. 10.15 இற்கு விலைமனுத்திறக்கப்படும்.

- ❖ பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய படிவக்கட்டணம் மற்றும் விலைமனுப் பிணைத் தொகையைச் செலுத்தி 2023.06.27 அன்று பி.ப. 3.00 வரை, பாணந்துறை பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- ❖ பாணந்துறை பிரதேச செயலக அதிகாரப் பிரிவில் வசிப்போரிடமிருந்து மாத்திரம் இதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
- ❖ எதிர்காலத்தில் அரசின் கொள்கைத் தீர்மானங்களின் அடிப்படையில், குறித்த தொகைக்கு மேலதிகமான வரிகளும் சேர்க்கப்படலாம்.
- ❖ விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்கையில் தம் தேசிய ஆளடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | ஆதனங்கள் | | மீளளிக்கப்படும் விலைமனு வைப்புத் தொகை ரூபா | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா | வருடாந்த ஆகக் குறைந்த விலைமனுக் கேள்வி ரூபா |
|---|---|---|---|---|---|
| | கடை இலக்கம் | மதிப்பீட்டு வரி இலக்கம் | | | |
| 01 | 07 | 35/6 | 2,760/- | 1,500/- | 138,000/- |
| 02 | 08 | 35/18 | 5,760/- | 1,500/- | 288,000/- |
| 03 | 09 | 35/17 | 2,760/- | 1,500/- | 138,000/- |
| 04 | 10 | 35/16 | 2,760/- | 1,500/- | 138,000/- |
| 05 | 15 | 41 | 4,560/- | 1,500/- | 228,000/- |
| 06 | 16 | 35 1/1 | 3,600/- | 1,500/- | 180,000/- |
| 07 | 19 | 35 1/4 | 2,160/- | 1,500/- | 108,000/- |
| 08 | 20 | 35 1/6 | 4,560/- | 1,500/- | 228,000/- |
| 09 | 21 | 35 1/8 | 2,160/- | 1,500/- | 108,000/- |
| 10 | 22 | 35 1/7 | 2,160/- | 1,500/- | 108,000/- |
| 11 | 23 | 35 1/10 | 2,160/- | 1,500/- | 108,000/- |
| 12 | 24 | 35 1/11 | 4,560/- | 1,500/- | 228,000/- |
| 13 | 25 | 35 1/9 | 2,160/- | 1,500/- | 108,000/- |
| 14 | 26 | 35 1/12 | 2,160/- | 1,500/- | 108,000/- |
| 15 | 27 | 35 1/13 | 2,160/- | 1,500/- | 108,000/- |
| 16 | 29 | 35 1/15 | 2,400/- | 1,500/- | 120,000/- |
| 17 | 30 | 35 1/16 | 3,600/- | 1,500/- | 180,000/- |

விலைமனுச் சமர்ப்பித்தல், தொடர்பான அறிவுரைகள் மற்றும் விலைமனு நிபந்தனைகள் போன்ற மேலதிக விபரங்கள் விலைமனுக்களுடன் வழங்கப்படும். (038-2294567/ 038-2284767)

**செயலாளர் மற்றும் அதிகாரங்கள், கருமங்கள் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அலுவலர்,**
**பாணந்துறை பிரதேச சபை,**
**வாத்துவ.**

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2023 ஜூன் 8 வியாழக்கிழமை

# ஆப்கானை 9 விக்கெட்டுகளால் வீழ்த்தி தொடரை கைப்பற்றியது இலங்கை அணி




துஷ்மந்த சமீர முதற்கொண்டு இலங்கை அணியின் அதிரடி பந்துவீச்சினால் ஆப்கான் அணியுடனான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் 9 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டிய இலங்கை அணி இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரை 2–1 என கைப்பற்றியது.

ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச அரங்கில் நேற்று நடைபெற்ற போட்டியில் காயம் காரணமாக இரண்டாவது ஒருநாள் போட்டியில் பங்கேற்காத லஹிரு குமார, கசுன் ராஜித்தவுக்கு பதில் களமிறங்கினார். ஆப்கான் அணியில் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ரஷீத் கான் அழைக்கப்பட்டார்.

துடுப்பாட்டத்திற்கு சாதகமான மைதானத்தில் நாணய சுழற்சியில் வென்ற ஆப்கான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. எனினும் இலங்கை அணியின் பந்துவீச்சுக்கு முன் ஆப்கான் துடுப்பாட்ட வீரர்களுக்கு ஈடுகொடுத்து ஆட முடியாமல் போனது.

இரண்டாவது ஓவரை வீச வந்த லஹிரு குமார ரஹ்மானுல்லா குர்பாஸை 8 ஓட்டங்களுடன் வெளியேற்றினார். தொடர்ந்து செயற்பட்ட சமீர 5 ஆவது ஓவரில் வைத்து இரண்டு விக்கெட்டுகளை சாய்த்தார்.

இந்நிலையில் துடுப்பாட்டத்தில் சோபித்துவரும் இப்ராஹிம் சத்ரான், லஹிரு குமாரவின் பந்தில் 22 ஓட்டங்களுக்கு போல்டானார். இதனால் ஆப்கான் அணி 48 ஓட்டங்களை பெறுவதற்குள் 4 விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

இந்நிலையில் மத்திய வரிசை வீரர்களான முஹமது நபி மற்றும் நஜிபுல்லா சத்ரானின் விக்கெட்டுகளை சமீர சாய்க்க ஆப்கான் அணியின் சவாலான இலக்கு ஒன்றை நிர்ணயிக்கும் எதிர்பார்ப்பு சிதறியது. இதன்போது முஹமது நபி பெற்ற 23 ஓட்டங்களே ஆப்கான் அணியின் அதிகூடிய ஓட்டங்களாக இருந்தது.

வனிந்து ஹசரங்க மற்றும் மஹீஷ் தீக்ஷன ஆப்கான் அணியின் கடைசி விக்கெட்டுகளை விரைவாக சாய்த்தனர். இதனால் அந்த அணி 22.2 ஓவர்களிலேயே 116 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இது ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆப்கான் அணியின் ஆறாவது மிகக் குறைந்த ஓட்டம் என்பதோடு இலங்கை அணிக்கு எதிரான இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற மிகக் குறைந்த ஓட்டமாக இருந்தது.

இதில் உபாதை காரணமாக கடந்த ஏழு மாதங்களாக இலங்கை அணியில் இடம்பெறாத நிலையில் மீண்டும் அணிக்குத் திரும்பி இருக்கும் துஷ்மந்த சமீர 9 ஓவர்கள் பந்துவீசி 63 ஓட்டங்களை விட்டுக்கொடுத்த நிலையில் 4 விக்கெட்டுகளை பதம் பார்த்தார்.

அதேபோன்று அண்மைக் காலமாக சோபிக்கத் தவறி வந்த வனிந்து ஹசரங்க 4.2 ஓவர்களில் 7 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுகளை பாதம்பார்த்தமை குறிப்பிடத்தக்கது. லஹிரு குமார 2 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு தீக்ஷன ஒரு விக்கெட்டை பதம் பாத்தார்.

இலகுவான இலக்கை நோக்கி பதிலெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணி தாமதிக்காது அதிரடியாக துடுப்பெடுத்தாடியது. பத்தும் நிசங்க 32 பந்துகளில் தனது ஏழாவது அரைச் சதத்தை பெற்றார். இதன்போது அவர் 8 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களை விளாசினார்.

அவர் ஆரம்ப விக்கெட்டுக்காக திமுத் கருணாரத்னவுடன் இணைந்து 84 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார். எனினும் 51 ஓட்டங்களை பெற்றிருந்த பத்தும் நிசங்க குல்பதின் நைப்பி பந்துக்கு எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒருநாள் தொடர் ஒன்றுக்காக இலங்கை அணிக்கு அழைக்கப்பட்ட டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்னவும் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். ஒருநாள் போட்டிகளில் தனது எட்டாவது சதத்தைப் பெற்ற திமுத் ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களை பெற்று இலங்கை அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இதன்போது அவர் 45 பந்துகளுக்கு முகம்கொடுத்து 7 பௌண்டரிகளை விளாசினார். குசல் மெண்டிஸ் ஆட்டமிழக்காது 17 பந்துகளில் 11 ஓட்டங்களை பெற்றார்.

இதன்மூலம் இலங்கை அணி 16 ஓவர்களில் 1 விக்கெட்டை மாத்திரம் இழந்து 120 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

போட்டியின் ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் இரு விருதுகளையும் துஷ்மந்த சமீர கைப்பற்றினார். சமீர இந்தத் தொடரில் ஆடிய இரண்டு போட்டிகளிலும் மொத்தம் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த ஒருநாள் தொடரில் இலங்கை அணி ஆப்கானிடம் முதல் ஒருநாள் போட்டியில் தோல்வியை சந்தித்தபோதும் அடுத்த இரு போட்டிகளில் இலகு வெற்றியை ஈட்டியது.

இலங்கை அணி மூன்று ஒருநாள் தொடருக்கு பின்னரே இரு தரப்பு ஒருநாள் தொடர் ஒன்றில் வெற்றியீட்டியது. இதற்கு முன்னர் கடைசியாக 2022 ஜூன் மாதம் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 3–2 என வெற்றியீட்டி இருந்தது.

இந்நிலையில் இலங்கை அணி அடுத்து உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் பங்கேற்பதற்காக விரைவில் சிம்பாப்வே புறப்பட்டுச் செல்லவுள்ளது. இந்தியாவில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு எஞ்சி இருக்கும் இரண்டு இடங்களில் இடம்பிடிப்பதற்காகவே இலங்கை அணி சிம்பாப்வேயில் இந்தத் தகுதிகாண் போட்டியில் ஆடவுள்ளது.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இந்த தொடர்வெற்றி சிம்பாப்வே சுற்றுப்பயணத்திற்கு உதவியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சாஹிரா விளையாட்டு விழா: 96 குழுவினர் சம்பியன்




ருஸைக் பாரூக்

கொழும்பு சாஹிரா கல்லூரி 90 குழு பழைய மாணவர்களினால் நடத்தப்பட்ட வருடாந்த விளையாட்டு விழாவில் 96 குழு ஒட்டுமொத்த சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த விளையாட்டு விழாவில் ‘8 போல் பூல்’ போட்டியில் 98 குழுவும், கிரிக்கெட் போட்டியில் 99 குழுவும், தடகளப் போட்டியில் 96 குழுவும், கால்பந்து போட்டியில் 96 குழுவும் கயிறிழுத்தல் போட்டியில் 96 குழுவும் வெற்றியீட்டியது.

சாஹிரா கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார், ஆளுநர் சபை விளையாட்டுக் குழுத் தலைவர் நைனா முஹம்மட் உட்பட பிரமுகர்கள் பலரும் இதில் பங்கேற்றனர்.

## பாக்கு நீரிணையை கடந்த மாணவனுக்கு பாராட்டு



இந்தியாவின் தனுஷ்கோடியில் இருந்து இலங்கையின் தலைமன்னார் வரை 30 கிலோமீற்றர் தூரத்தை நீந்திக் கடந்து சென்ற ஜனாதிபதி சாரண மாணவன் தேவேந்திரன் மதுஷிகனை இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பாராட்டி கௌரவித்துள்ளார்.

மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் கல்வி கற்கும் மதுஷிகன் பாக்கு நீரிணை வழியாக 30 கிலோமீற்றர் தூரத்தை 12 மணித்தியாலங்களில் நீந்திக் கடந்துள்ளார். இதனை பாராட்டும் நிகழ்வு செத்சிரிபாய, கிராமிய வீதிகள் அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்றது.

இதில் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் மாணிக்கவாசகர் தயாபரனும் கலந்து கொண்டு மாணவனின் முயற்சியையும் திறமையினையும் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.

## கனடா காட்டுத் தீ:
# வட அமெரிக்காவில் காற்றின் தரம் பாதிப்பு



கனடாவில் இடம்பெற்று வரும் காட்டுத் தீ சம்பவங்களால் வட அமெரிக்காவில் உள்ள மில்லியன் கணக்கான மக்களுக்கு காற்றுத் தரம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டொரன்டோ மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகள் உட்பட ஒன்டாரியோ மற்றும் கியுபக்கில் உள்ள பிரதான நகரங்கள் காட்டுத் தீ புகையால் மூடப்பட்டுள்ளன. இந்த புகை தொலைதூரத்தில் இருக்கும் அமெரிக்காவின் நியூயோர்க் மற்றும் கனக்டிகட் மாநிலங்களையும் அடைந்துள்ள சூழலில், அங்கு காற்றுத் தரம் ‘ஆரோக்கிய மற்றது’ என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

கியுபக் மாகாணத்தில் இருந்தே அதிகம் புகை வெளியாகி வருகிறது. அங்கு 160 காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தற்போது கனடா முழுவதும் 413 இடங்களில் காட்டுத் தீ பற்றியெரிகிறது. அவற்றுள் 249 இடங்களில் நெருப்பு கட்டுக்கடங்காமல் உள்ளது.

அல்பர்ட்டா, நோவா ஸ்கோஷா, கியூபெக் ஆகிய மாநிலங்கள் மத்திய அரசாங்கத்திடம் உதவி கோரியுள்ளன. சுமார் 26,000 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

# பாதுகாப்பை மேம்படுத்த ஜின்பிங் வலியுறுத்து

தற்போது நாம் எதிர்கொள்ளும் உள்நாட்டு வெளிநாட்டு பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தேசிய பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பாதுகாப்பு ஆணைக்குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், தேசிய பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன. அந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கும் சமாளிப்பதற்குமான ஏற்பாடுகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதன் நிமித்தம் தேசிய பாதுகாப்பு கட்டமைப்பையும் அதன் திறன்களையும் மேம்படுத்துவதைத் துரிதப்படுத்துவது அவசியம் என்றார்.

## சர்வதேச செய்திகள்

# உக்ரைனிய அணை உடைப்பால் பல்லாயிரம் மக்கள் வெளியேற்றம்

### மோசமான விளைவை ஏற்படுத்துமென ஐ.நா எச்சரிக்கை

உக்ரைனில் உள்ள பிரதான அணை ஒன்றில் உடைப்பு எடுத்ததை அடுத்து டினிப்ரோ நதியை ஒட்டி இருக்கும் ரஷ்ய மற்றும் உக்ரைன் கட்டுப்பாட்டு பகுதியில் வாழும் சுமார் 42,000 மக்கள் வெள்ள அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

தெற்கு உக்ரைனில் உள்ள ரஷ்ய கட்டுப்பாட்டு அணை மீது கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தாக்குதலால் பல டஜன் கிராமங்கள் நீரில் மூழ்கியதோடு ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இது மனிதாபிமான அனர்த்தத்தை ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது.

இந்த வெள்ளம் நேற்று (07) உச்சத்தை தொடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அணையில் இருந்து நீர் வெளியான நிலையில் அருகில் இருக்கும் பகுதிகளைச் சேர்ந்த குறைந்தது ஏழு பேர் காணாமல்போயிருப்பதாக ரஷ்யாவால் நியமிக்கப்பட்ட நொவக் ககொவ்கா நகர மேயர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் உக்ரைன் மற்றும் ரஷ்யா பரஸ்பரம் குற்றம்சாட்டி வருகின்றன. “இது மோசமான மற்றும் நீண்டகால விளைவை ஏற்படுத்தும்” என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

தகர்க்கப்பட்டிருக்கும் ககொவ்கா அணை போரின் முன்னரங்கு பகுதியில் அமைந்திருப்பதோடு இந்த நீர் 150 கிலோமீற்றருக்கு அப்பால் சகோரிசியா பிராந்தியத்தில் அமைந்துள்ள ஐரோப்பாவின் மிகப் பெரிய அணு உலை நீரை குளிரூட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.



உக்ரைனின் பதில் தாக்குதலை தடுக்கும் வகையில் ரஷ்யா இந்த அணையை தகர்த்திருப்பதாக உக்ரைன் குற்றம்சாட்டியுள்ளது. எனினும் ரஷ்யாவின் பாரிய பதில் தாக்குதல் ஒன்றை திசைதிருப்பும் முயற்சியில் உக்ரைன் ஈடுபட்டிருப்பதாக ரஷ்யா குறிப்பிடுகிறது.

இந்த அணைக்கு அருகில் அதிக மக்கள் வசிக்கும் பகுதியான கெர்சோனில் மக்கள் உயரமான இடங்களுக்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

இந்த அணையில் இருந்து கீழ்நோக்கி சுமார் 60 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் கெர்சோன் நகரில் கடந்த ஆண்டு உக்கிர மோதல் இடம்பெற்றது. இங்கு கடந்த செவ்வாய்க்கிழமை நீர் மட்டம் 3.5 மீற்றர் உயர்ந்திருந்தது.

இதுவரை எந்த உயிரிழப்பும் பதிவாகாதபோதும் இந்த வெள்ளம் பல உயிரிழப்புகளுக்கு காரணமாகலாம் என்று வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்புச் சபை பேச்சாளர் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார்.

இதுவரை மொத்தம் 24 கிராமங்களில் வெள்ளம் ஏற்பட்டு குறைந்தது 17,000 பேர் வெளியேற்றப்பட்டிருப்பதாக உக்ரைன் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை எடுக்கப்பட்ட செய்மதி படங்களில் பல கிராமங்கள் மற்றும் சிறு நகரங்கள் வெள்ள நீரில் மூழ்கி இருப்பது தெரிகிறது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் உதவித் தலைவர் மார்டின் கிர்ப்த் செவ்வாயன்று பாதுகாப்புச் சபையில் பேசியபோது, தெற்கு உக்ரைனில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகள், உணவு, பாதுகாப்பான நீர் மற்றும் வாழ்வாதாரங்களை இழக்கும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்திருப்பதாக எச்சரித்தார்.

பொதுமக்களுக்கு ஏற்படும் ஆபத்து காரணமாக போரில் அணைகளை குறிவைப்பதை ஜெனீவா உடன்படிக்கை வெளிப்படையாகத் தடை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாப்பரசருக்கு சத்திர சிகிச்சை



பாப்பரசர் பிரான்சிஸுக்கு ரோமில் உள்ள கெமலி மருத்துவமனையில் வயிற்றுப் பகுதியில் நேற்று சத்திர சிகிச்சை இடம்பெற்றுள்ளது.

குடலிறக்க சத்திரசிகிச்சை செய்துகொண்டிருக்கும் பாப்பரசர் அடுத்த சில நாட்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் தங்கி இருப்பார் என்று வத்திக்கான் தெரிவித்துள்ளது.

86 வயதான பாப்பரசர் அண்மைய ஆண்டுகளில் தீவிர உடல் ஆரோக்கிய பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறார்.

அவர் தொடர்ச்சியான முழங்கால் பாதிப்பு காரணமாக ஊன்றுகோல் மற்றும் சக்கர நாற்காலியை பயன்படுத்தி வருகிறார்.

பாப்பரசருக்கு சத்திர சிகிச்சை அவசியம் என்று பாப்பரசரின் மருத்துவக் குழு அண்மைய நாட்களில் தீர்மானித்ததாக வத்திக்கான் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாப்பரசர் கடந்த மார்ச் மாதத்தில் நுரையீரல் தொற்றால் பாதிக்கப்பட்டு மூன்று நாட்கள் மருத்துவமனையில் செலவிட்டார்.

தனக்கு முன்னர் பாப்பரசராக இருந்த பதினாறாவது பெனடிக், பாப்பரசர் பதவிக்கு விடைகொடுத்த நிலையில் அது போன்ற முடிவை எடுப்பதை அவர் நிராகரித்திருந்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 8ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.